வெளியீடு 9-7-99 Issued 9-7-99

1088
— 95

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, நவம்பர் 28, 1998 – தொகுதி 62 – எண் 2

**Saturday the 28th November, 1998 – Volume 62 – No. 2**


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...tive Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009



V2ll, 31 N98.
N98-62-2
219404.


[Price Rs. 3.00

1088/99

## 28-11-1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 9 மற்றும் 10) | 155-225 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) அனுமதி மறுத்த பிரச்சினையை அவையில் எழுப்புதல் | 226-228<br>230-233 |
| (ஆ) மாஞ்சோலை எஸ்டேட் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து 27-11-1998 [illegible]ளன்று விளக்கம் தெரிவிக்கையில் பயன்படுத்திய சொற்றொடர்—நீக்கம் கோ[illegible]ந்தல் | 228-230 |
| (இ) நீலநாக்கு நோய் சம்பந்தமான [illegible]னை | 233-234 |
| (ஈ) உறுப்பினர் கொடுத்த அறிவிக்கைகள் | 234, 237 |
| (உ) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவின்மீது பேச வாய்ப்பு கோருதல் | 249-250 |
| (ஊ) சென்னையைச் சார்ந்த அனுசுயா என்கிற பெண் கடத்தப்பட்டது | 343-344 |
| **3. அறிக்கை அளித்தல்—** | |
| அரசு உறுதிமொழிக் குழு | 234-235 |
| **4. ரெகுநாதகாவேரியிலுள்ள கிளைக் கால்வாய்களை ஆழப்படுத்துவது குறித்து பொதுப் பணித் துறை அமைச்சரின் விளக்கம்—** | 235-236 |

பக்கங்கள்

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு, 1998. — 237-239, 249-250, 288-312, 315-342

* மாண்புமிகு திரு. கோ.சி. மணி — 237-238, 291-294, 296, 299, 304, 305, 306, 308, 315-318, 320-325, 330-332, 334-342

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் — 288-294

திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் — 294-296

திரு. செங்கை சிவம் — 296-300

* டாக்டர் க. கிருஷ்ணசாமி — 300-302, 303

திரு. டி. மணி — 303-310

திரு. சி. வேலாயுதன் — 310-312

* திரு. நா. பெரியசாமி — 326-327, 329-333

* திரு. கே. சுப்பராயன் — 333-334

திரு. ந. கருப்பண்ண உடையார் — 335-336

திரு. சோ. பாலகிருஷ்ணன் — 336-337

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 — 239-241

மாண்புமிகு திரு. கோ.சி. மணி — 239-241

(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 — 241-242

மாண்புமிகு திரு. கோ.சி. மணி

(ஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களின் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 — 243-244

மாண்புமிகு திரு. கோ.சி. மணி


219404.




பக்கங்கள்

(உ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 — 244-246

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 244-246

(ஊ) தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998. — 246-249

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 247-249

திரு. சி. ஞானசேகரன் — 247

(எ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1998. — 251-262, 277-284

* மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் — 251, 260, 262

திரு. சி. ஞானசேகரன் — 251-254, 277

திரு. செங்கை சிவம் — 253-254

திரு. இரா. தாமரைக்கனி — 254-259, 257, 280, 282-285

திரு. ஐ. கணேசன் — 261, 280-281, 284

* மாண்புமிகு திரு. கா. நா. நேரு — 277-282

(ஏ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 — 263-276

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் — 263 269-276

* திரு. கே. சுப்பராயன் — 263-267, 272, 273, 274, 275

திரு. டி. மணி — 268

திரு. சி. ஞானசேகரன் — 274-275

பக்கங்கள்

**6. அறிவிப்பு—** 263

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**7. அரசினர் தனித் தீர்மானங்கள்—** 285

(அ) சென்னை மாநகராட்சிச் சட்டம், 1919, பிரிவு 347, உட்பிரிவு (3)-க்குத் திருத்தம் 285

*மாண்புமிகு திரு. கோ. சி. மணி 285-286

(ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 305, உட்பிரிவு (1)-க்குத் திருத்தம் 285-286

*மாண்புமிகு திரு. கோ. சி. மணி 286-287

(இ) மதுரை மாநகராட்சிச் சட்டம், 1971, பிரிவு 431, உட்பிரிவு (3)-க்குத் திருத்தம் 286

*மாண்புமிகு திரு. கோ. சி. மணி 287

(ஈ) கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம், 1981, பிரிவு 430, உட்பிரிவு (3)-க்குத் திருத்தம் 287

*மாண்புமிகு திரு. கோ. சி. மணி

**8. விதி 110-ன்கீழ் அறிக்கை—** 312-315

சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தேர்தல் தொடர்பான நிகழ்வுகள் குறித்து காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலை பாதுகாப்பு குறித்த விளக்கமும் அடங்கிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் அறிக்கை

**9. பேரவை உறுப்பினர்களுக்கு நன்றி—** 344-345



பக்கங்கள்

**10. அரசினர் தீர்மானம்—** 345

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 346-347

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**கார்த்திகை 13, வெகுதான்ய—திருவள்ளுவர் ஆண்டு 2029**
**1998 நவம்பர் 28, சனிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்(கு) இயல்பு"

துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் அரசுக்குரிய தகுதிகளாகும்.

### 1. வினாக்கள்-விடைகள்

**@ உடுக்குறியிடாத வினாக்கள்**
**(ஒன்பதாம் பட்டியல்)**

1—

**தீயணைப்புத் துறையினருக்குச் சிறப்புப் பயிற்சி**

வினா எண் 16801—**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தீயணைப்புத் துறையினருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

---

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[ 1998 நவம்பர் 28

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தீயணைப்புத் துறையில் பணிபுரியும் அனைத்துத் தரத்திலுள்ள பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் திறனை மேம் படுத்துவதற்காக மறுபயிற்சி (Refresher Course) அளிக்க ஆணையிடப் பட்டு, இப்பயிற்சிகள் மாநிலப் பயிற்சி பள்ளியில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. தாம்பரத்தில், தீயணைப்புத் துறை மாநிலப் பயிற்சிக் கல்லூரி நிறுவ பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரை மூலம் ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும், நாக்பூர் தேசிய தீயணைப்புப் பயிற்சிக் கல்லூரியில் அளிக்கப்படும் அனைத்துப் பயிற்சிகளும் இங்கு அளிக்கப்படும். மேலும், விபத்தைத் தவிர்க்கும் பொருட்டும், குறுகிய காலத்தில் தீ விபத்து நிகழும் இடத்தை அடையும் பொருட்டும், விபத்துக்கள் அதிகமாக நடக்கின்ற இடங்களில் உள்ள தீயணைப்பு ஓட்டுநர்களைத் தேர்ந்தெடுத்து, சாலைப் போக்கு வரத்து நிறுவனம் மூலம் பயிற்சியளிக்கப்படுகிறது. இந்த வகையில் மொத்தமுள்ள 956 தீயணைப்பு ஓட்டுநர்களில், 59 ஓட்டுநர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

2—

**மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் கட்டடம்**

வினா எண் 15362—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட சின்னப்பம்பட்டி மேல்நிலைப் பள்ளியில் 3 கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட சின்னப்பம்பட்டி மேல்நிலைப் பள்ளியில் இரு



1998 நவமபர் 28 ]

வகுப்பறைகளைக் கூடுதலாகக் கட்டிக் கொடுக்க ரூ.4.4 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, அரசாணை நிலை எண் 278, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24-7-1998-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

3—

**ஆசிரியர் பணியிடம் நிரப்புதல்**

வினா எண் 18937—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்வித் துறையில் அமைச்சுப் பணியாளர்களில் பட்டம் முடித்து ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு ஆசிரியர் பணியிடம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

4—

**அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டுதல்**

வினா எண் 18976—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கோனேரிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, மகுடஞ்சாவடி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் சமுத்திரம் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அறிவியல் ஆய்வுக்கூடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

[ 1998 நவம்பர் 28

(ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கோனேரிப்பட்டி, மகுடஞ்சாவடி மற்றும் சமுத்திரம் அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் ரூ.9.20 இலட்சம் செலவில் அறிவியல் ஆய்வகம் கட்டுவதற்கு அரசாணை நிலை எண் 355, பள்ளிக் கல்வித் துறை, நாள் 22-9-1998-ல் நிதி ஒதுக்கப்பட்டு, ஆணையிடப்பட்டுள்ளது.

5—

**கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்**

வினா எண் 19092—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, வெங்கரை கோட்டைக்காடு அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக வகுப்பறைகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, வெங்கரை கோட்டைக்காடு அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தர ரூ.4.4 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, அரசாணை எண் 278, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24-7-1998-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

6—

**அரசு மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

வினா எண் 21370—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேல்நிலைப் பள்ளிகளாக்க தீர்மானித்துள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?



1998 நவம்பர் 28 ]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில், மாதநாயக்கன்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி, கெங்கவல்லி அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி மற்றும் பாவடி நகராட்சி ஆண்கள் உயர்நிலைப் பள்ளி ஆக மொத்தம் 3 உயர்நிலைப்பள்ளிகள் அரசாணை (நிலை) எண் 270, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20-7-1998-ல் மேல்நிலைப் பள்ளிகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

7—

**மேல்நிலைப் பள்ளியில் ஆய்வுக்கூடம் அமைத்தல்**

வினா எண் 21386—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் ஆய்வுக்கூடம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் ஆய்வுக்கூடம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வகம் கட்டிக் கொடுக்க ரூ.9.20 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, அரசாணை நிலை எண் 355, பள்ளிக் கல்வித் துறை, நாள் 22-9-1998-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

8—

**பெருந்துறை அரசினர் மருத்துவமனைக்கு வசதிகள்**

வினா எண் 16649—**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[ 1998 நவம்பர் 28

(அ) பெருந்துறை அரசினர் மருத்துவமனையில் 100 படுக்கைகள் கொண்ட உள்ளிருப்பு நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறும் வகையில் கட்டட வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெருந்துறையில் இயங்கி வந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அரசு ஆணை எண் 311, சுகாதாரம், நாள் 23-6-1997-ன்படி தரம் உயர்த்தப்பட்டு, 1-8-1997 முதல் அரசு மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது.

இங்கு சிகிச்சை பெற்று வரும் உள்நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்த அளவில் இருப்பதால் தற்போது படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**9—**

**சமையல் எரிவாயு இணைப்பு வழங்குதல்**

வினா எண் 16703—**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைசசர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தாலுகா மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகளுக்கு சமையல் எரிவாயு இணைப்புகள் படிப்படியாக வழங்கப்பட்டு வருகின்றன. அரசின் நிதி நிலைக்கேற்ப ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு இனி வரும் பகுதி-2 திட்டத்தில் சமையல் எரிவாயு இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.



1998 நவம்பர் 28 ]

**10—**

**புற நோயாளிகள் பகுதிக்குக் கட்டடம்**

வினா எண் 18738—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனையில் புற நோயாளிகள் பகுதிக்கு (O.P. Block) கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனையில் புற நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்த அளவில் இருப்பதால் புற நோயாளி பகுதிக்கு (O.P. Block) கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில இல்லை.

(ஆ) இவ்வினா எழ அவசியம் இல்லை.

**11—**

**அரசு மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர் கட்டுதல்**

வினா எண் 18739—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் உள்ள புதிய அரசு மருத்துவமனைக்குச் சுற்றுப்புறச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் உள்ள புதிய அரசு மருத்துவமனைக்குச் சுற்றுப்புறச் சுவர் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அரசின் நிதிநிலைக்கேற்ப தக்க சமயத்தில் இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.

(ஆ) இவ்வினா எழ அவசியம் இல்லை.

**12—**

**சிலிகான் செல்கள் தாராளமாகக் கிடைக்கச் செய்தல்**

வினா எண் *19473*—**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய ஒளியைச் சேமிக்கப் பயன்படும் சிலிகான் செல்களின் விலை அதிகமாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) இச்செல்களின் விலையைக் கட்டுப்படுத்தி அங்காடியில் தாராளமாகக் கிடைக்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அறியும்.

(ஆ) சிலிகான் செல்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதனால் அதன் விலை அதிகமாக உள்ளது. தற்போது அதன் விலை அகில உலக அளவிலேயே ஒரு வாட்டிற்கு சுமார் ரூ. 200-ஆக உள்ளது. சிலிகான் செல்களின் விலையை அதிக அளவில் உற்பத்தி செய்வதன் மூலம் ஓரளவுக்குக் குறைக்க முடியும். புதிய தொழில் நுட்பத்தின் மூலமே கணிசமாக அதன் விலையைக் குறைக்க இயலும். இருப்பினும், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்



50 விழுக்காடு விலை குறைந்த, திறம் மிக்க செல்களை உற்பத்தி செய்யத் தேவையான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுமாறு அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள கிரிஸ்டல் குரோத் சென்டர் நிறுவனத்தைக் கோரியுள்ளது. இதன் மூலம் சாதாரண மக்களும் சூரியஒளி மின் சாதனங்களை வாங்கிப் பயனடைய முடியும்.

**13—**

**மின் அழுத்தக் குறையைச் சரி செய்தல்**

வினா எண் *19484*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், குளிக்கப்பட்டு கிராமத்தில் மின் அழுத்தக் குறைவினைச் சரி செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், குளிக்கப்பட்டு கிராமத்தில் மின் பாதையில் இருந்த மின் கடத்தியை பெரிய அளவுள்ள 7/132 ஏ.சி.ஏ.ஆர். அலுமினியக் கம்பியாக மாற்றி, மின்னழுத்தக் குறைவு சீர் செய்யப்பட்டு விட்டது. தற்சமயம் குளிக்கப்பட்டு கிராமத்தில் மின்சாரம் சரியான மின்னழுத்தத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

**14—**

**மின்மாற்றி அமைத்தல்**

வினா எண் *19500*—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், சூரங்கோட்டை குரூப் களத்தாவூர் கிராமத்தில் குறைந்த மின் அழுத்த மின்சாரம் உள்ளதால் ஒரு மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[ 1998 நவம்பர் 28

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்போது களத்தாவூர் கிராமத்திற்கு சூரங்கோட்டையில் உள்ள மின்மாற்றியில் இருந்து மின் விநியோகம் செய்யப்படுகிறது. குறைந்த மின் அழுத்தத்தைச் சரி செய்வதற்கு வேலை ஆரம்பம் செய்யும் சமயத்தில், தனியார் ஒருவர், அவருடைய நிலத்தில் உயர் மின் அழுத்தப் பாதையை அமைக்கக்கூடாது என ஆட்சேபணை செய்ததினால் வேலை தடைப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவரிடம் பேசப்பட்டது. மாற்று வழியாக மின்பாதை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டு மறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. மறு மதிப்பீடு அனுமதி பெற்று வேலை ஆரம்பிக்கப்படும்.

**15—**

### மும்முனை மின் இணைப்பு உடன் வழங்குதல்

வினா எண் 19512—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் மின் வெட்டு காரணமாக விசைத்தறித் தொழில் பாதிக்கப்பட்டு, பல குடும்பங்கள் நலிந்து போவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மும்முனை இணைப்பு உடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 20-4-1998 முதல் 10-7-1998 வரை மின் வெட்டு அமலில் இருந்ததால் எடப்பாடி நகரில, காலை 10 மணியிலிருந்து மாலை 6 மணிக்குள் 1½ மணி நேரம் மட்டுமே மின் விநியோகம் நிறுத்தப்பட்டது. மற்ற நேரங்களில் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. 10-7-1998 அன்று முதல் மின் வெட்டு நீக்கப்பட்ட பிறகு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.



1998 நவம்பர் 28 ]

(ஆ) எடப்பாடி, நகர்புறம் ஆனதால் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**16—**

### மும்முனை மின் இணைப்பு வழங்குதல்

வினா எண் 19513—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியப் பகுதிகளில் மும்முனை இணைப்பு வழங்கித் தடையின்றி மின்சாரம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

20-4-1998 முதல் 10-7-1998 வரை மின் வெட்டு அமலில் இருந்ததால், எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியம் பகுதிகளில் காலை 10-00 மணியிலிருந்து மாலை 6-00 மணிக்குள் 1-30 மணி நேரம் மட்டும் மின் விநியோகம் நிறுத்தப்பட்டது. மிகுதி நேரங்களில் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. 10-7-1998 முதல் மின் வெட்டு நீக்கப்பட்ட பிறகு இப்பகுதியில் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

**17—**

### செவிலியர் பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்துதல்

வினா எண் 19632—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[ 1998 நவம்பர் 28

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.**

இல்லை.

**18—**

**வருவாய்த் துறை அலுவலகக் கட்டடம்**

வினா எண் 20039—**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகரில் பழைய கட்டடங்களில் இயங்கிவரும் வருவாய்த் துறை அலுவலகங்களை ஒருங்கிணைத்து, புதிதாக ஒருங்கிணைந்த வருவாய்த் துறை அலுவலகக் கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம். ஆரணியில் புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட, 1998-99ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.87.72 இலட்சம் நிதி மற்றும் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**19—**

**விவசாயிகளுக்கு நிலப்பட்டா வழங்கும் விபரம்**

வினா எண் 20102—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில், புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகளில் எத்தனை பேருக்கு நிலப்பட்டா வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

1997-98ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்யும் 210 விவசாயிகளுக்கு 151.22 ஏக்கர் நிலத்திற்கு நிலப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.



1998 நவம்பர் 28 ]

**20—**

**மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம் கட்டுதல்**

வினா எண் 20182—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம் புதிதாகக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டடம் கட்டுவதற்கு திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**21—**

**தொகுப்பு வீடுகள் விவரம்**

வினா எண் 991—**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில், 1995-96-ல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காகக் கட்ட உத்தேசித்துள்ள தொகுப்பு வீடுகள் எத்தனை?

(ஆ) அவற்றில் கட்டி முடிக்கப்பட்டவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

| | | |
|---|---|---|
| (அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1995-96-ல் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள் | .. | 6035 |
| (ஆ) அவற்றில் கட்டி முடிக்கப்பட்டவை | .. | 5936 |

[ 1998 நவம்பர் 28

22—

### பேருந்து நிலையத்திற்குக் கழிப்பறை வசதி

வினா எண் 14596—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆம்பூர் பேருந்து நிலையத்தில் கழிப்பறைகள் இல்லாமல் உள்ளதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம்பூர் நகர் பேருந்து நிலையத்தில் நகராட்சியால் கட்டப்பட்ட கட்டணக் கழிப்பிடம் ஒன்று நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு, பொது மக்களால் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

23—

### இந்திரா குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுத்தல்

வினா எண் 14661—**திரு. ஆர்.ஆர். சேகரன்** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி முழுவதும் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்திரா குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள பிற இனத்தவர்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்படுகின்றன. மொத்த ஒதுக்கீட்டில் 15% பிற இனத்தவருக்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிற இனத்தவர்களுக்கு அளிக்கப்படும் ஒதுக்கீட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வீடுகள் அளிக்கப்படும்.



1998 நவம்பர் 28 ]

24—

### தொகுப்பு வீடுகள் சீர் செய்தல்

வினா எண் 16202—**திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம், திரியாலம், ஜெயபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள ஆதிதிராவிடர்களுக்குக் கட்டியுள்ள தொகுப்பு வீடுகள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சீர் செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நாட்றாம்பள்ளி தொகுதி, சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திரியாலம் கிராம ஆதிதிராவிடர் காலனியில் பணி எடுக்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. மேலும், பணியாண்டபள்ளி ஊராட்சி, ஜெயபுரம் கிராம ஆதிதிராவிடர் காலனியில் உள்ள தொகுப்பு வீடுகளில் இடம் பெயர்ந்து இருந்த ஓடுகள் சரி செய்யப்பட்டுவிட்டன.

25—

### தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 19359—**திரு. மா. இராமச்சந்திரன்**: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், வெட்டிக்காடு ஊராட்சியில் ஆதிதிராவிடர் அல்லாத மற்ற இனத்தவர்க்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1998-99ஆம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் முதல் மற்றும் இரண்டாம் கட்ட தொகுப்பு வீடுகள், சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர்களால் கிராம சபா மூலம் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. இனி, மூன்றாவது கட்ட தொகுப்பு வீடுகள் தேர்வு செய்து, அனுமதி வழங்கும்போது திருவோணம் ஒன்றியம், வெட்டிக்காடு ஊராட்சியில் ஆதிதிராவிடர் அல்லாத மற்ற இனத்தவருக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர தகுதிக்கேற்ப முன்னுரிமை வழங்கப்படும்.*

**26—**

**தோட்டக்கலைப் பண்ணை அமைக்கும் திட்டம்**

*வினா எண் 18302*—**திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதியில் இயற்கை வளம் நிறைந்த பகுதியில் தோட்டக்கலைப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) எழவில்லை. சேலம் மாவட்டத்தில் ஏற்காடு, கருமந்துறை, முள்ளுவாடி போன்ற இடங்களில், அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.*



**27—**

**பயிர்களை வளர்த்தல்**

*வினா எண் 18545*—**திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டத்திலுள்ள கல்வராயன் மலை மற்றும் பச்சைமலை பகுதிகளில் மா, கொய்யா, பலா, மலைவாழை போன்ற பயிர்களை வளர்க்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலை மற்றும் பச்சைமலைப் பகுதிகளில் ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் ஆதிவாசி விவசாயிகளின் நிலங்களில் 1 ஏக்கர் பரப்பில் தனி நபர் பழத்தோட்டங்கள் அமைக்க ரூ.1,750/- மதிப்புள்ள பழச்செடிகள் வழங்கப்படுகின்றன. 1997-98ஆம் ஆண்டில் 500 பழத்தோட்டங்கள் கல்வராயன் மற்றும் பச்சைமலைப் பகுதிகளில் அமைக்கத் தேவையான மா, கொய்யா, பலா போன்ற பழச்செடிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.*

*இது தவிர, கல்வராயன் மலையிலுள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலும், மா, கொய்யா, பலா, வாழை போன்ற பயிர்கள் வளர்க்கப்பட்டு, அவற்றின் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இதர விவசாயிகள் தங்களின் தேவைக்கு அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் முழு விலையில் பழச்செடிகளைப் பெறலாம். விவசாயிகளுக்குத் தேவையான தொழில் நுட்பங்கள் வட்டார அளவிலுள்ள தோட்டக்கலை களப் பணியாளர்கள் மூலம் நேரடியாக வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் வட்டம் மற்றும் மாவட்ட அளவிலுள்ள தோட்டக்கலைத் துறை அலுவலர்களின் மூலம் தொழில்நுட்ப விளக்கங்கள் பெறத் தக்கவாறு சேலம் மற்றும் ஆத்தூரில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் செயல்பட்டு வருகின்றனர்.*

[ 1998 நவம்பர் 28

**28—**

### விவசாய நிலங்கள் விவரம்

வினா எண் 18669—**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோயில் தாலுகாக்களில் எத்தனை ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன?

(ஆ) இதில் வீடு கட்டும் மனைப்பிரிவாக மாற்றப்பட்டவை எத்தனை ஏக்கர்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோயில் தாலுகாக்களில் 1,90,363 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன.

(ஆ) இதில் வீடு கட்டும் மனைப்பிரிவாக மாற்றப்பட்டவை 2691 ஏக்கர் ஆகும்.

**29—**

### ஏரிகளை மராமத்து செய்தல்

வினா எண் 15646—**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அயல்நாட்டு உதவியுடன் தமிழகத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் மராமத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



1998 நவம்பர் 28 ]

(ஆ) ஐரோப்பிய குழு உதவியுடன் ஏரிகள் நவீனப்படுத்தும்
திட்டத்தின்கீழ் முதல் கட்டத்தில் 200 எக்டேருக்குக் குறைவான
பாசனப் பரப்புடைய 206 மானாவாரி ஏரிகளில் பணிகள் 10
மாவட்டங்களில், 1991 செப்டம்பரில் ரூ.52.44 கோடி செலவில்
முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டத்தில், 100 எக்டேர் முதல் 200
எக்டேர் வரை பாசனப் பரப்புடைய மானாவாரி ஏரிகளும், 4
எக்டேர் முதல் 50 எக்டேர் பாசனப் பரப்புடைய, முன்னாள் சமீன்
ஏரிகளும், 16 மாவட்டங்களில் முறையே, 316 மற்றும் 80 ஏரிகள்
எடுத்துக்கொள்ளப்பட்டு, 1996-97 நிதியாண்டு வரை, 207 மானாவாரி
மற்றும் 80 முன்னாள் சமீன் ஏரிகளில் பணிகள் முடிவுற்றன.
1997-98-ல் 49 மானாவாரி ஏரிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
1998-99-ல் மீதமுள்ள 60 ஏரிகளில், பணிகள் முடிக்க
திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர்,
சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் 40
எக்டேர் முதல் 400 எக்டேர் வரை பாசனப் பரப்புடைய 2400
மானாவாரி ஏரிகளைப் புரைமைக்க, ரூ.270 கோடி செலவில் ஜப்பான்
ஓவர்சீஸ் எக்னாமிக் கோவாபரேஷன் நிதியிலிருந்து, உதவி பெற
திட்ட அறிக்கை மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### உலக வங்கி உதவியுடன் கிராம முன்னேற்றத்திற்காக சிறுபாசன ஏரிகளைப் புனரமைக்கும் திட்டம்

இம்மாநிலத்திலுள்ள 39,202 ஏரிகளில் 8,000 பொதுப்பணித் துறை
பஞ்சாயத்து மற்றும் சமீன் ஏரிகளை மேம்படுத்துவதற்கான மதிப்பீடு
ரூ.2,570 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு, உலக வங்கி உதவி பெற மைய
அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**30—**

### கூடுதல் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 237—**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத்
துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓசூர் முதல் தேன்கனிக்கோட்டை, ஓசூர் முதல் ஓசூர் (வழி)
நல்லூர், கக்கனூர்-ஓசூர் - சிக்கதிருப்பதி, ஓசூர்-பாலிகானப்பள்ளி (வழி)
பாகலூர் மற்றும் ஓசூர் முதல் முத்தாலி தடங்களில் கூடுதல் பேருந்துகள்
இயக்கிடும் உத்தேசம் ஏதும் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது ஒசூர் முதல் தேன்கனிக்கோட்டை வரை 9 நகரப் பேருந்துகள் 80 நடைகளும் மற்றும் 12 புற நகரப் பேருந்துகள் 46 நடைகளும் இயங்கி வருகின்றன. இதேபோன்று ஒசூர் முதல் கக்கனூர் வழியாக 3 நகரப் பேருந்துகள் 22 நடைகளும், ஒசூர் முதல் சிக்கதிருப்பதி வரை ஒரு நகரப் பேருந்து 14 நடைகளும், ஒசூர் முதல் பாலிகானப்பள்ளி வரை ஒரு நகரப் பேருந்து 6 நடைகளும், ஒசூர் முதல் முத்தாலி வரை 2 நகரப் பேருந்துகள் 16 நடைகளும் இயங்கி வருகின்றன. தற்போது பேருந்து வசதியற்ற கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கி பேருந்து வசதி செய்து வருகின்ற காரணத்தால் பேருந்து வசதியற்ற கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்த பின்னர், கூடுதல் பேருந்து இயக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**31—**

## போக்குவரத்து அலுவலகம் திறத்தல்

வினா எண் 17914—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி பகுதியில் போதுமான அளவு வாகனங்கள் இல்லாததால் தற்போது வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஏற்படுத்த அவசியம் இல்லை. எடப்பாடிக்கு மிகவும் அருகாமையில் உள்ள சங்ககிரியில் வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகம் செயல்பட்டு வருவதால் எடப்பாடி பகுதி மக்கள் சங்ககிரியில் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ளலாம்.





**32—**

## நிதியுதவி அளிக்கும் திட்டம்

வினா எண் 21209—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டில், கூட்டுறவு அச்சகங்களில் நவீன இயந்திரங்களைப் பொருத்துவதற்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் நிதியாண்டில் பகுதி 2 திட்டத்தின்கீழ் தமிழ் நாட்டில் தருமபுரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு அச்சகங்களை நவீனமயப்படுத்துவதற்காக ரூ.4.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.8.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை (நிலை) எண் 102, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-6-1998-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**33—**

## பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

வினா எண் 16184—**திரு. ஜி. எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலக்கோடு நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பகுதியில் உள்ள அனைத்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும்

[ 1998 நவம்பர் 28

சேகரிக்கப்பட்ட பால் கிருஷ்ணகிரியில் அமைந்துள்ள பால் சமநிலைப் படுத்தும் பண்ணையில் குளிரூட்டப்படுகிறது. பாலக்கோடு பகுதியில் சுமார் 20,000 லிட்டர் பால் தினந்தோறும் வாங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே, பாலக்கோட்டிலிருந்து சுமார் 23 கி.மீ. தூரத்தில் தருமபுரியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையமும், பாலக்கோட்டிலிருந்து சுமார் 32 கி.மீ. தூரத்தில் கிருஷ்ணகிரியில் ஒரு பால் சமநிலைப்படுத்தும் பண்ணையும் உள்ளது. தற்போது பாலக்கோடு பகுதியில் பெறப்படும் பாலின் அளவு மற்றும் மேற்கூறிய பால் குளிரூட்டும் நிலையங்களின் அமைப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஓர் ஆய்வு மேற்கொள்ளப் பட்டதில் பாலக்கோடு பகுதியில் புதியதாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் வாய்ப்பு உண்டு என்றும், அதற்கான நிதியைப் பெற்றபின் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**34—**

**தொழிற்சாலை மூடப்பட்டதால் வேலையிழந்த தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு**

வினா எண் 19430—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளால் வேலையிழந்துள்ள தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் பல்வேறு காரணங்களுக்காகப் பல ஆண்டுகளாக மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வேலையிழந்துள்ள தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது குறித்த திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

மேலும், மூடப்பட்டுள்ள நிறுவனங்களை மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக் கூறுகளைப் பற்றி கண்டறிய மாண்புமிகு தொழிலாளர் நல



1998 நவம்பர் 28 ]

அமைச்சர் சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்கள் மற்றும் நிர்வாகங்களுடன் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டுள்ளார். மாநில தொழிலாளர் நல ஆலோசனை வாரியக் கூட்டத்திலும் இப்பொருள் சம்பந்தமாக விவாதித்தபோது, மீண்டும் திறந்து, இயக்க சாத்தியக் கூறுகள் இல்லாத நிறுவனங்களைப் பொறுத்த அளவில் அவற்றில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்குச் சட்டப்படி சேரவேண்டிய பணிக்கொடை மற்றும் இதர இழப்பீடு தொகையை விரைவில் பெற்று அளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

நீண்ட காலமாக நிதிப் பற்றாக்குறை காரணமாக இயங்காமல் இருந்த கூட்டுறவுப் பஞ்சாலைகளைப் பொறுத்த அளவில், வடாற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைப்பு செய்து, இயக்க அரசு தற்போது நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதனால், அங்கு பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு மீண்டும் பணிப் பாதுகாப்பு கிடைக்கும். மேலும், 1990-க்குப் பிறகு மூடப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் தீபாவளிப் பண்டிகையின்போது ரூ.400/- உதவித் தொகையாக மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் தீபாவளிப் பண்டிகையின்போது 14,051 தொழிலாளர்களுக்குத் தலா ரூ.500/- வீதம், மொத்தம் ரூ.70,25,500/- முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

**35—**

**மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் விபரம்**

வினா எண் 19714—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அதில் பணிபுரிந்தவர்களுக்கு அரசு என்னென்ன நிவாரணப் பணிகளைச் செய்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(ஆ) தமிழ்நாட்டில் தற்போது 44 தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டோ அல்லது நீண்டகாலமாக இயங்காமலோ உள்ளன.

(ஆ) மேற்கூறிய 44 நிறுவனங்களில் ஒன்றான பி & சி ஆலை பிரச்சினை தொடர்பாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் தலையீட்டினால் 1947ஆம் வருட தொழிற் தகராறுகள் சட்டப் பிரிவு 12 (3)-ன் கீழ் தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் 28-3-98 அன்று ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டு அதில் பணியாற்றிய தொழிலாளர்கள் விருப்ப ஓய்வுத் திட்டத்தில் செல்லவும், 14-1-99-ல் ஆலையைத் திறக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையைத் திறக்க தற்போது அரசு புனரமைப்புத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து, ஆலையைத் திறக்க கைத்தறி இயக்குநரால் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. மகாலட்சுமி மில்ஸ் ஆலையின் புனரமைப்புத் திட்டம் கைத்தறித் துறையின்முன் பரிசீலனையில் உள்ளது.

இதர 24 நிறுவனங்கள் பற்றிய செயற்குறிப்புகள் பி.ஐ.எஃப்.ஆர்-ஏ.ஐ.எஃப்.ஆர். முன்பு நிலுவையில் உள்ளன. மற்றும் ஏனைய காரணங்களால் அவற்றைத் தற்போது திறப்பது குறித்து அரசால் நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை.

இவை தவிர, 12 நிறுவனங்கள் குறித்த தாவாக்கள் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விடப்பட்டுள்ளன. ஒரு நிறுவனம் 12 (3) ஒப்பந்தத்தை மீறிய காரணத்தால் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையிலுள்ளது.

1998 ஆம் ஆண்டு தீபாவளியை முன்னிட்டு தமிழ்நாட்டில் 1-1-90-க்குப் பின்னர் மூடப்பட்டு இயங்காமலுள்ள 35 தொழில் நிறுவனங்களைச் சார்ந்த 14,051 தொழிலாளர்களுக்கு கருணைத் தொகையாக தலா ரூ.500/- வீதம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மொத்தம் ரூ.70,25,500/- வழங்கப்பட்டுள்ளது.



**36—**

## வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவித் தொகை

வினா எண் 19732—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் படித்த, வேலையில்லாத பட்டதாரிகள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையை மீண்டும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வேலையில்லாப் பட்டதாரிகள்/இளைஞர்களுக்கு வழங்கபபட்டு, நிறுத்தப்பட்ட நிவாரணத்தை மீண்டும் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**37—**

## அரசு தங்கும் விடுதி விவரம்

வினா எண் 20594—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான அரசு தங்கும் விடுதிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அது தவிர வேறு எந்த வகையான விடுதிகள் உள்ளன?

(இ) அதில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் விடுதி வாரியாக எத்தனை பேர் உள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டத்தில் 19 மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதிகளும், ஓர் ஐ.டி.ஐ. விடுதியும், ஈரோடு மாவட்டத்தில் 5 மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதிகளும், சேலம் மாவட்டத்தில் 18 மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதிகளும், ஒரு கல்லூரி மாணவர் விடுதியும் இயங்கி வருகின்றன.

(ஆ) ஈரோடு மாவட்டத்தில், கோபி வட்டத்தில் டி.எஸ். ராமன் சரோஜினிதேவி விடுதி உள்ளது. இது அரசு மானியம் பெறும் தனியார் விடுதியாகும். இதில் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியர்கள் 22 பேரும், மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியர்கள் 13 பேரும் தங்கிப் பயில்கின்றனர்.

(இ) தருமபுரி மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கை குறித்த விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

### இணைப்பு

### தருமபுரி மாவட்டம் (59)

| | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| **பிற்படுத்தபட்ட வகுப்பினர் விடுதிகள் (31)** | |
| 1. கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி | 160 |
| 2. கல்லூரி மாணவியர் விடுதி, தருமபுரி | 55 |
| 3. பள்ளி மாணவர் விடுதி, தோகரபள்ளி | 34 |
| 4. பள்ளி மாணவர் விடுதி, அஞ்செட்டி | 40 |
| 5. பள்ளி மாணவர் விடுதி, மாரண்டஅள்ளி | 63 |
| 6 பள்ளி மாணவர் விடுதி, கோணங்கி நாயக்கன்அள்ளி | 39 |
| 7. பள்ளி மாணவர் விடுதி, திருமலவாடி | 62 |
| 8. பள்ளி மாணவர் விடுதி, கேளமங்கலம் | 44 |
| 9. பள்ளி மாணவர் விடுதி, பேரிங்கை | 46 |



| | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 10. பள்ளி மாணவர் விடுதி, சூலா | 32 |
| 11. பள்ளி மாணவர் விடுதி, பாலதோட்டனபள்ளி | 48 |
| 12. பள்ளி மாணவர் விடுதி, வேப்பனபள்ளி | 47 |
| 13. பள்ளி மாணவர் விடுதி, ஓசூர் | 54 |
| 14. பள்ளி மாணவர் விடுதி, கம்பைநல்லூர் | 40 |
| 15. பள்ளி மாணவர் விடுதி, பன்னலூர் | 35 |
| 16. பள்ளி மாணவர் விடுதி, ராமையன்அல்லி | 57 |
| 17. பள்ளி மாணவர் விடுதி, கிருஷ்ணபுரம் | 57 |
| 18. பள்ளி மாணவியர் விடுதி, பர்கூர் | 55 |
| 19. பள்ளி மாணவியர் விடுதி, கிருஷ்ணகிரி | 55 |
| 20. பள்ளி மாணவியர் விடுதி, ஊத்தங்கரை | 59 |
| 21. பள்ளி மாணவியர் விடுதி, சிங்காரப்பள்ளி | 41 |
| 22. பள்ளி மாணவியர் விடுதி, அனந்தூர் | 33 |
| 23. பள்ளி மாணவியர் விடுதி, கோண்டூர் | 55 |
| 24. பள்ளி மாணவியர் விடுதி, உள்ளுகுடுக்கை | 30 |
| 25. பள்ளி மாணவியர் விடுதி, வாரிப்பள்ளி | 43 |
| 26. பள்ளி மாணவியர் விடுதி, பி. மல்லாபுரம் | 24 |
| 27. பள்ளி மாணவியர் விடுதி, கொடாத்தூர் | 55 |
| 28. பள்ளி மாணவியர் விடுதி, தருகு | 44 |
| 29. பள்ளி மாணவியர் விடுதி, சிங்காரப்பேட்டை | 21 |
| 30. பள்ளி மாணவியர் விடுதி, ஹனுமந்தபுரம் | 55 |
| 31. பள்ளி மாணவியர் விடுதி, கோபிநாதம்பட்டி | 46 |
| **மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் விடுதிகள் (28)** | |
| 1. பள்ளி மாணவர் விடுதி, சிங்காரப்பேட்டை | 53 |
| 2. பள்ளி மாணவர் விடுதி, பாலக்கோடு | 68 |
| 3. பள்ளி மாணவர் விடுதி, போச்சம்பள்ளி | 46 |
| 4. பள்ளி மாணவர் விடுதி, காரிமங்கலம் | 44 |
| 5. பள்ளி மாண்வர் விடுதி, பெண்ணாகரம் | 44 |
| 6. பள்ளி மாணவர் விடுதி, கொட்டப்பட்டி | 44 |
| 7. பள்ளி மாணவர் விடுதி, கன்னத்தூர் | 48 |

[ 1998 நவம்பர் 28

| | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 8. பள்ளி மாணவர் விடுதி, அதியமான்கோட்டை | 62 |
| 9. பள்ளி மாணவர் விடுதி, புலிக்கரை | 54 |
| 10. பள்ளி மாணவர் விடுதி, பெரும்பாலை | 55 |
| 11. பள்ளி மாணவர் விடுதி, தோப்பூர் | 42 |
| 12. பள்ளி மாணவர் விடுதி, அரூர் | 44 |
| 13. பள்ளி மாணவர் விடுதி, மொரப்பூர் | 54 |
| 14. பள்ளி மாணவர் விடுதி, பாப்பிரெட்டிப்பட்டி | 33 |
| 15. பள்ளி மாணவர் விடுதி, உப்பரப்பட்டி | 49 |
| 16. பள்ளி மாணவர் விடுதி, பழைய தருமபுரி | 52 |
| 17. பள்ளி மாணவர் விடுதி, மாத்தூர் | 53 |
| 18. பள்ளி மாணவியர் விடுதி, பாப்பாரப்பட்டி | 48 |
| 19. பள்ளி மாணவியர் விடுதி, காவேரிப்பட்டினம் | 59 |
| 20. பள்ளி மாணவியர் விடுதி, வாலிகம் | 58 |
| 21. பள்ளி மாணவியர் விடுதி, தருமபுரி | 67 |
| 22. பள்ளி மாணவியர் விடுதி, பாலக்கோடு | 62 |
| 23. பள்ளி மாணவியர் விடுதி, போச்சம்பள்ளி | 53 |
| 24. தொழிற் பயிற்சி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி | 55 |
| 25. பள்ளி மாணவியர் விடுதி, பெண்ணாகரம் | 55 |
| 26. பள்ளி மாணவர் விடுதி, காளிப்பேட்டை | 53 |
| 27. பள்ளி மாணவர் விடுதி, மேனாசி | 48 |
| 28. பள்ளி மாணவியர் விடுதி, பெரும்பாலை | 21 |

**ஈரோடு மாவட்டம் (37)**

**பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் விடுதிகள் (27)**

| | |
|---|---|
| 1. கல்லூரி மாணவர் விடுதி, ஈரோடு | 48 |
| 2. கல்லூரி மாணவர் விடுதி, கோபிச்செட்டிப்பாளையம் | 98 |
| 3. பள்ளி மாணவர் விடுதி, பெருந்துறை | 32 |
| 4. பள்ளி மாணவர் விடுதி, சத்தியமங்கலம் | 50 |



1998 நவம்பர் 28 ]

| | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 5. பள்ளி மாணவர் விடுதி, கோபிச்செட்டிப்பாளையம் | 39 |
| 6. பள்ளி மாணவர் விடுதி, ஊத்துக்குளி | 32 |
| 7. பள்ளி மாணவர் விடுதி, புஞ்சைபுளியம்பட்டி | 40 |
| 8. பள்ளி மாணவர் விடுதி, சிவகிரி | 50 |
| 9. பள்ளி மாணவர் விடுதி, சென்னிமலை | 50 |
| 10. பள்ளி மாணவர் விடுதி, தாராபுரம் | 47 |
| 11. பள்ளி மாணவர் விடுதி, காங்கேயம் | 50 |
| 12. பள்ளி மாணவர் விடுதி, தாலவாடி | 50 |
| 13. பள்ளி மாணவர் விடுதி, மூலனூர் | 42 |
| 14. பள்ளி மாணவர் விடுதி, வெள்ளக்கோயில் | 49 |
| 15. பள்ளி மாணவர் விடுதி, மொடக்குறிச்சி | 50 |
| 16. பள்ளி மாணவர் விடுதி, தாயம்பாளையம் | 50 |
| 17. பள்ளி மாணவர் விடுதி, அவல்பூந்துறை | 50 |
| 18. பள்ளி மாணவர் விடுதி, நம்பியூர் | 48 |
| 19. பள்ளி மாணவர் விடுதி, குண்டலம் | 28 |
| 20. பள்ளி மாணவர் விடுதி, வி.வெள்ளோடு | 23 |
| 21. பள்ளி மாணவியர் விடுதி, அவல்பூந்துறை | 50 |
| 22. பள்ளி மாணவியர் விடுதி, பெருந்துறை | 36 |
| 23. பள்ளி மாணவியர் விடுதி, புஞ்சைபுளியம்பட்டி | 57 |
| 24. பள்ளி மாணவியர் விடுதி, கொடுமுடி | 50 |
| 25. பள்ளி மாணவியர் விடுதி, அத்தாணி | 50 |
| 26. பள்ளி மாணவியர் விடுதி காவிலிப்பாளையம் | 50 |
| 27. பள்ளி மாணவியர் விடுதி, காங்கேயம் | 50 |

**மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் விடுதிகள் (9)**

| | |
|---|---|
| 1. பள்ளி மாணவர் விடுதி, முலையப்பாளையம் | 50 |
| 2. பள்ளி மாணவர் விடுதி, காவிலிப்பாளையம் | 50 |
| 3. பள்ளி மாணவர் விடுதி, குருவா ரெட்டியூர் | 40 |
| 4. பள்ளி மாணவர் விடுதி, அந்தியூர் | 40 |

[ 1998 நவம்பர் 28

| | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 5. பள்ளி மாணவர் விடுதி, அரச்சலூர் | 50 |
| 6. பள்ளி மாணவியர் விடுதி, பவானி | 44 |
| 7. பள்ளி மாணவியர் விடுதி, குருவா ரெட்டியூர் | 50 |
| 8. பள்ளி மாணவியர் விடுதி, சத்தியமங்கலம் | 42 |
| 9. பள்ளி மாணவியர் விடுதி, அத்தாணி | 50 |
| சீர்மரபினர் விடுதி (I) | |
| பள்ளி மாணவியர் விடுதி, பங்களா புதூர் | 50 |

**38—**

**சிறுதொழில் பயிற்சி மையம் அமைத்தல்**

வினா எண் 19770—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு தொழில் முனைவோருக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் சேலம் மாவட்டத்திலுள்ள பயிற்சி நிலையங்கள் எத்தனை?

(ஆ) 1998-99 ஆம் ஆண்டு மேலும் சிறு தொழில் பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஐ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) அதுபோன்ற நிறுவனங்கள் சேலம் மாவட்டத்தில் இல்லை.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டு மேலும் சிறு தொழில் பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**39—**

**கால்நடை மருத்துவமனையைப் பிரதம மருத்துவமனையாக்குதல்**

வினா எண் 20017—**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 நவம்பர் 28 ]

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் இயங்கிவரும் கால்நடை மருத்துவமனையைப் பிரதம மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

**40—**

**கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களுக்கு அறையணிகள் வழங்குதல்**

வினா எண் 20635—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களுக்கு இலவசக் கட்டடம், மேசை, நாற்காலி, பெஞ்சு மற்றும் பீரோ வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தால் இலவசக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. எனவே கால்நடைக் கிளை நிலையங்கள் வாடகையில்லாக் கட்டடங்களிலும், இலவசக் கட்டிடம் இல்லாத இடங்களில் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. தற்போது தமிழ்நாட்டில் 2126 கால்நடைக் கிளை நிலையங்கள் உள்ளன. மேலும் இக்கால்நடைக் கிளை நிலையங்களுக்குத் தேவையான மேசை, நாற்காலி, பெஞ்சு மற்றும் பீரோ போன்ற அறையணிகள் தேவைக்கேற்ப ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ளன. தற்போது நடைமுறையில் உள்ள அரசு ஆணையின்படி புதியதாகத் தொடங்கப்படும் அலுவலகங்கள்

தவிர ஏனைய அலுவலகங்களுக்குப் புதிய அறையணிகள் வாங்குவதற்கு அரசு தடை உத்தரவு உள்ளது.

**41—**

**கால்நடைக் கிளை மருத்துவமனை அமைத்தல்**

*வினா எண் 21037*—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், செலவடை ஊராட்சியிலுள்ள செலவடையில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், செலவடை ஊராட்சியில் தற்போது அமரகுந்தி கால்நடைக் கிளை நிலையத்திற்குப் பார்வைக் கிளை நிலையமாக செலவடையிலேயே ஒரு பார்வைக் கிளை நிலையம் தொடங்கப்பட்டு 23-1-98 முதல் செயல்பட்டு வருகின்றது. மேலும், தாரமங்கலம் ஊராட்சியிலுள்ள கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப் போதிய கால்நடை மருந்தகம், கால்நடை கிளை நிலையம் மற்றும் பார்வைக் கிளை நிலையங்கள் உள்ளதாலும், தற்போது செலவடையில் பார்வைக் கிளை நிலையம் 23-1-98 முதல் செயல்பட்டு வருவதாலும், செலவடையில் தற்போது புதியதாகக் கால்நடைக் கிளை நிலையம் தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**42—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

*வினா எண் 21168*—**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, அர்பையனஅள்ளி ஊராட்சி, சின்னகனஅள்ளி மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் கால்நடைகளை அதிகம் வளர்ப்பதால் இங்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**43—**

**உதவித் தொகை விவரம்**

*வினா எண் 17078*—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-ல் முதியோர்கள், விதவைகள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் உதவித் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

முதியோர், விதவைகள் மற்றும் கூலித் தொழிலாளர்களுக்கு ஏப்ரல் 1998 முதல் ஒவ்வொரு மாதமும் தலா ரூ. 150 வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**44—**

**மாணவ, மாணவியர் விடுதிகள் கட்டுதல்**

*வினா எண் 14789*—**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கொண்டல் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக இயங்கும் மேல்நிலைப் பள்ளியில்

[ 1998 நவம்பர் 28

மாணவர்கள் மற்றும் மாணவிகள் விடுதிகள் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

மாணவியர் விடுதி கட்டுவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மாணவர் விடுதி கட்டுவது பற்றி வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**45—**

**மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

வினா எண் 15271—**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருவதால் அவற்றிற்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

தற்போது இல்லை. நிதி நிலைமைக்கேற்ப வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**46—**

**கொள்ளிடத்தில் மாணவிகள் விடுதி தொடங்குதல்**

வினா எண் 15813—**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொள்ளிடத்தில் (துளசேந்திரபுரம்) ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் மாணவிகள் விடுதி ஒன்று தொடங்க அரசு முன்வருமா?



1998 நவம்பர் 28 ]

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப விடுதி தொடங்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**47—**

**வைத்தீஸ்வரன்கோவிலில் மாணவிகள் விடுதி**

வினா எண் 15817—**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவிலில் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் மாணவிகள் விடுதி ஒன்று தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், வைத்தீஸ்வரன்கோவிலில் மாணவியர் விடுதி தொடங்க அரசாணை (நிலை) எண் 70, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 22-6-98-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

**48—**

**பெண்கள் விடுதிக்குப் புதிய கட்டடம்**

வினா எண் 15822—**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் வட்டம், தர்மநல்லூர் ஆதிதிராவிடப் பெண்கள் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[ 1998 நவம்பர் 28

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நிதிநிலைமைக்கேற்ப, வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.*

**49—**

**பள்ளிக்குத் தளம் அமைத்தல்**

வினா எண் *19144*—**திரு. டி. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், நல்லம்மாள்புரம் ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் தரையில் உட்கார்ந்து பாடம் படிப்பதால், மழைக் காலங்களில் கான்கிரீட் தளத்தில் நீர்க்கசிவு ஏற்பட்டு படிக்க முடியாத சூழ்நிலை பற்றி அரசுக்கு ஏதேனும் புகார் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை. நல்லம்மாள்புரம் ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. மேற்படி கட்டடம் 2 அடி உயரத்தில் கட்டப்பட்டு தளம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கான்கிரீட் தளத்தில் நீர்க்கசிவு ஏதும் இல்லை.*

*(ஆ) இக்கேள்வி எழவில்லை.*

**50—**

**ஆதிதிராவிடர் நலத் துறையின் கல்லூரிகள்**

வினா எண் 21117—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 நவம்பர் 28 ]

*(அ) தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் நலத் துறைக்காக எத்தனைக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன?*

*(ஆ) அதில் எத்தனை மாணவர்கள் பயின்று வருகிறார்கள்?*

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) எதுவும் இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**(பத்தாம் பட்டியல்)**

**1—**

**மதுவிலக்கு போலீஸ் பிரிவு தொடங்குதல்**

வினா எண் *16799*—**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் மீண்டும் மதுவிலக்கு போலீஸ் பிரிவு துவக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 10-6-1998 நாளிட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அரசாணை (பல்வகை) எண் 115-ல் மதுவிலக்கை அமல்படுத்தும் பணிகளுக்கென மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு தனியாக ஏற்படுத்த ஆணையிடப்பட்டது. அதன்படி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, 1-7-1998 முதல் இயங்கி வருகிறது.*

2—

### ஆசிரியைகளுக்கு அரசு ஊதியம்

வினா எண் 12905—**திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சிறுபான்மையினரால் அரசு அங்கீகாரம் பெற்று நடத்தப்படும் தனியார் மற்றும் அரசு பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியைகளுக்கு அரசு ஊதியம் வழங்கப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 1-6-1991-க்கு முன்பு அங்கீகாரம் பெறப்பட்டு நிதி உதவியுடன் செயல்பட்டுவரும் சிறுபான்மைப் பள்ளிகளில் அரசின் பணியிடங்களுக்கான அனுமதியை எதிர்நோக்கி ஆசிரியர்கள் அந்தந்த பள்ளி நிர்வாகங்களால் நியமனம் செய்யப்பட்டனர். அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கிட பணியிடங்கள் வழங்குமாறு சிறுபான்மைக் கூட்டமைப்பு அரசுக்குக் கோரிக்கை விடுத்தனர். அரசும் இச் சிறுபான்மைப் பள்ளிக் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவத்தை ஏற்று, அவ்வாறு சிறுபான்மைப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டு ஊதியம் பெறப்படாமல் உள்ள ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கிடும்பொருட்டு 1-6-1997 முதல் சிறுபான்மைப் பள்ளிகளுக்கு 1:50 ஆசிரியர் மாணவ விகிதப்படி தகுதியுடைய எண்ணிக்கையில் பணியிடங்கள் வழங்கி அரசாணை எண் 13, பள்ளிக் கல்வித் துறை, நாள் 29-1-1998-ல் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, இவ்வாணையின்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட பணியிடங்களில், ஏற்கெனவே சிறுபான்மைப் பள்ளிகளில் பணிபுரிந்து வந்த ஆசிரியர்களை உட்படுத்தி அவர்களுக்கு அரசு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அரசு பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை என்ற கேள்வி எழா. அரசு பள்ளிகளில் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்ட பின்னரே ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு முறையாக ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.



(ஆ) இக் கேள்வி எழவில்லை.

3—

### மேல்நிலைப் பள்ளிக்கு விஞ்ஞானக்கூட வசதி

வினா எண் 17006—**திரு. வெ. கோவிந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, சின்னப்பம்பட்டியில் அமைந்துள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியில் விஞ்ஞானக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தாரமங்கலம் தொகுதி சின்னப்பம்பட்டியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு விஞ்ஞானக்கூடம் அமைக்க ரூ. 9.20 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, அரசாணை நிலை எண் 355, பள்ளிக் கல்வி, நாள் 22-9-1998-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

4—

### புதியதாக வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க வேண்டுதல்

வினா எண் 18939—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி திருமதி மஞ்சம்மாள் அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் புதியதாக வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி திருமதி மஞ்சம்மாள் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டித்

[ 1998 நவம்பர் 28

தர ரூ. 4.4 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, அரசாணை எண் 278, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24-7-1998-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

5—

### புதிய மின் இணைப்பு வழங்குதல்

வினா எண் 8154—**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரில் பல புறம்போக்கு வட்டாரங்களுக்கு ஏற்கெனவே மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டு, 15-10-1995 முதல் நிறுத்தப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்த உத்தரவு தளர்த்தப்பட்டு மீண்டும் புதிய மின்சார இணைப்புகள் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை நகரில் புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள கட்டடங்களுக்கு ஏற்கெனவே மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டு, 25-10-1995 முதல் நிறுத்தப்படவில்லை. எனவே மீண்டும் புதிய மின் இணைப்பு வழங்கும் கேள்வி எழவில்லை.

6—

### கொல்லிமலையில் மின் உற்பத்தி

வினா எண் 13828—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் ஆரம்பிக்கப்பட்டு செயல்படாமல் உள்ள மின் உற்பத்தித் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



1998 நவம்பர் 28 ]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1/20 மெ.வா. மின்திறன் கொண்ட கொல்லிமலை புனல் மின் திட்டம் ஏற்கெனவே தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நாமக்கல் மாவட்டம் புளியஞ்சோலைப் பகுதியில் நிறுவப்படவுள்ளது. இத் திட்டத்திற்கு சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையினரிடமிருந்து உரிய அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் செயலாக்கப்படவுள்ளது.

7—

### வேலூர் மாவட்டத்தில் மின் வசதி

வினா எண் 14499—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் மின் வசதி பெற மனு செய்தவர்களுக்கு மின்சார மீட்டர்கள் இல்லை என்ற காரணத்தால் மின் இணைப்பு கொடுக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) எப்போது மீட்டர்கள் சப்ளை செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மின் பகிர்மான வட்டத்திற்குத் தேவையான அளவு மீட்டர்கள் வழங்கப்பட்டு, மொத்தம் 8,825 மின் இணைப்புகள் 6/98 முதல் 8/98 வரை வேலூர் மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் உடனுக்குடன் இணைப்பு வழங்கிட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[ 1998 நவம்பர் 28

8—

**தாய்சேய் நல விடுதி அமைத்தல்**

வினா எண் 16619—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம், பொம்மியம்பட்டி கொல்வேப்பா நாயக்கர் காலனிக்கு தாய்சேய் நல விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம், பொம்மியம்பட்டி மற்றும் கொல்வேப்பா நாயக்கர் காலனி கிராமங்கள் தாரமங்கலம் துணை சுகாதார நிலையத்தில் உள்ளடங்கியுள்ளன. பொம்மியம்பட்டி கிராம மக்கள் தொகை 471. கொல்வேப்பா நாயக்கர் காலனி கிராம மக்கள் தொகை 252. தாரமங்கலம் துணை சுகாதார நிலையத்தின் மொத்த மக்கள் தொகை 6961 ஆகும். அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி 5000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, கொல்வேப்பா நாயக்கர் காலனி கிராமத்திற்குத் தனியாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

9—

**துணை சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் 16719—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 நவம்பர் 28 ]

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியத்தில் உள்ள எருமைப்பட்டியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், எருமைப்பட்டி கிராமம், பாலுப்பட்டி துணை சுகாதார நிலையத்தில் உள்ளடங்கிய ஒரு கிராமம் ஆகும். அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி பாலுப்பட்டியில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் அமைந்துள்ளதால் எருமைப்பட்டி கிராமத்தில் தனியாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை.

10—

**துணை சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் 16722—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அழகப்பம்பாளையம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள்நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அழகப்பம்பாளையம் கிராமம், ஏ. புதூர் துணை சுகாதார நிலையத்தில் உள்ளடக்கிய ஒரு கிராமம் ஆகும். அழகப்பம்பாளையம் கிராம மக்கள் தொகை 492. ஏ. புதூர் மக்கள் தொகை 5297. அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி 5000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் ஏ. புதூரில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, அழகப்பம்பாளையம் கிராமத்தில் தனியாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[ 1998 நவம்பர் 28

11—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் *16744*—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சமுத்திரம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சமுத்திரம் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. சமுத்திரம் துணை சுகாதார நிலையத்தின் மக்கள் தொகை *4153* ஆகும். அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி மேலும் ஒரு துணை சுகாதார நிலையம், சமுத்திரம் கிராமத்தில் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

12—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் *18713*—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், ஊ. மாரமங்கலம் ஊராட்சியிலுள்ள பஞ்சுகாளிப்பட்டி என்னுமிடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1998 நவம்பர் 28 ]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஊ. மாரமங்கலம் ஊராட்சி பஞ்சுகாளிப்பட்டி கிராமம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள் தொகைக்கேற்ப *5* ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், பஞ்சுகாளிப்பட்டியில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், மேற்படி கிராமத்திலிருந்து *4* கிலோமீட்டர் தொலைவில் தொளசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், *6* கிலோமீட்டர் தொலைவில் ஓமலூர் அரசு மருத்துவமனையும், *8* கிலோமீட்டர் தொலைவில் பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதால், ஊ. மாரமங்கலம் ஊராட்சியிலுள்ள பஞ்சுகாளிப்பட்டியில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

13—

கழிவுநீர்க் கால்வாய்கள் சீரமைத்தல்

வினா எண் *4748*—**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நகரின் பல தெருக்களில் கழிவுநீர்க் கால்வாய்கள் சீரமைக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி நகராட்சியில் *1996-97* ஆம் ஆண்டில் ரூ. *10.10* லட்சத்திற்கும், *1997-98* ஆம் ஆண்டில் ரூ. *18.06* லட்சத்திற்கும் பல்வேறு திட்டப் பணிகளின்கீழ் மொத்தம் ரூ. *28.16* லட்சத்திற்கு *7.15* கிலோமீட்டர் நீளத்திற்கு *49* கால்வாய்ப் பணிகள் செய்துமுடிக்கப்பட்டு விட்டன. *1998-99* ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித்

திட்டம், குடிசைப்பகுதி அபிவிருத்தி திட்டம், சட்டமன்ற உறுப்பினர் நிதித் திட்டம், மற்றும் சுவர்ணஜெயந்தி சஹாரி ரோஸ்கார் யோஜனா திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் ரூ. 42.70 லட்சம் மதிப்பீட்டில் 7.45 கிலோமீட்டர் நீளத்திற்கு 30 கழிவுநீர்க் கால்வாய் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**14—**

**தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 13504—**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியத்திலுள்ள கெங்கவரம் கிராமத்தில் வசிக்கும் இருளர் காலனிக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கெங்கவரம் இருளர் குடியிருப்பிற்கு 1998-99ஆம் ஆண்டு இந்திரா குடியிருப்பு திட்டத்தின் கீழ் 30 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**15—**

**கூட்டுறவுச் சர்க்கரை ஆலை விவசாயிகளுக்குப் பணம்**

வினா எண் 17639—**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் விவசாயிகளிடமிருந்து அரைவைக்கு எடுத்துச் செல்லப்பட்ட கரும்புக்கு இதுவரை பணம் வழங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ). கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 30-6-1998 முடிய நடப்பு 1997-98 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு நிர்ணயம் செய்த கரும்பு விலை ரூ. 552.50-ஐ கரும்பு விவசாயிகளுக்குக் கொடுத்துள்ளது. மாநில அரசு நிர்ணயம் செய்த கரும்பு விலையான டன் 1-க்கு ரூ. 745.40-க்கும், மத்திய அரசு நிர்ணயம் செய்த சட்டபூர்வ விலையான டன் 1-க்கு ரூ. 552.50-க்கும் உள்ள வித்தியாசத் தொகையினை மட்டும் பாக்கி வைத்திருந்தது. 7-10-98 நாளிட்ட அரசாணைப்படி அரசு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகை கடனாக ரூ. 76.41 கோடி கொடுத்துள்ளது. அதில் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ரூ. 9.71 கோடி கொடுக்கப்பட்டு, அதன்மூலம் 15-10-1998-க்குள் கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு பாக்கித் தொகை முழுவதும் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது.

**16—**

**விவசாயிகளுக்கு இலவச மாங்கன்றுகள்**

வினா எண் 18538—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி விவசாயிகளுக்கு மாங்கன்றுகள் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

எடப்பாடி போன்ற சமவெளிப் பகுதிகளில் மாங்கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க தோட்டக்கலைத் துறையில் திட்டம் ஏதுமில்லை.

ஆதிவாசிப் பழங்குடியினர் வசிக்கும் மலைப்பகுதிகளில் மட்டும் ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் பழச்செடிகள் 100 சத மானியத்தில் மார்ச் 1998 முடிய ... வழங்கப்பட்டன.

21404.

இத்திட்டத்தினை 1998-99 ஆம் ஆண்டிலும் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

சமவெளிப்பகுதிகளில் மாங்கன்றுகள் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ஒரு விவசாயிக்கு 1 எக்டேர் நடவு செய்ய நிதி ஒதுக்கீட்டிற்குத் தக்கவாறு 50 சத மானியத்தில் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டிற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான தரமான ஒட்டுக் கன்றுகள் சேலம் மாவட்டத்திலுள்ள கருமத்துறை, முள்ளுவாடி ஆகிய இடங்களிலுள்ள அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு இத்திட்டத்தின் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றது. மானியத் தொகை செலவிடப்பட்டாலும் விவசாயிகள் தங்கள் தேவைக்கு அரசுத் தோட்டக்கலை பண்ணைகளில் முழு விலையில் செடிகள் பெறலாம்.

17—

## விவசாயிகளுக்கு மானிய விலையில் செடிகள்

வினா எண் 18551—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் மேட்டூர் கிழக்குக் கரைப்பகுதி பூலாம்பட்டி மற்றும் நாமக்கல் மாவட்டம் கொமாரப்பாளையம், சங்ககிரி தாலுகா, கல்வடங்கம், காவேரிக்கரை ஆகிய இடங்களிலுள்ள விவசாயிகளுக்குத் தோட்டக்கலை துறையின் மூலம் தென்னை, மா, பலா, கொய்யா, புளி, சப்போட்டா, மாதுளை போன்ற செடிகளை மானிய விலையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் மேற்கண்டுள்ள பகுதிகளில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மா, பலா, கொய்யா, புளி, சப்போட்டா, மாதுளம் போன்ற பழச்செடிகள் 50 சத மானியத்தில் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 1 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யத் தேவையான பழச்செடிகள் விநியோகம் செய்யப்படுகின்றன.





மேற்கண்ட திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள் மேச்சேரி, திருச்செங்கோடு, நாமக்கல் ஆகிய ஊர்களைத் தலைமையிடமாகக் கொண்டு பணிபுரியும் தோட்டக்கலை அலுவலர்களை அணுகி பயன்பெறலாம். மேலும், சேலம் மற்றும் நாமக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அவர்களையும் அணுகி இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

18—

## புதிய கரும்புச் சாலை வசதி

வினா எண் 18594—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப் பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, ஒரத்தநாடு தாலுகாக்களில் நடப்பு ஆண்டில் கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எந்தெந்த சாலைகள் புதிதாகப் போடப்பட உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மற்றும் ஒரத்தநாடு தாலுகாக்களில் கரும்புச் சாலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் புதிய சாலைகள் 1997-98 மற்றும் 1998-99-ல் எடுக்கப்படவில்லை. ஒரத்தநாடு தாலுகாவில் வடகூர் முதல் பாச்சூர் வரை (வழி, பொய்யுண்டார் கோட்டை) உள்ள வண்டிச் சாலையை மேம்படுத்த நிதிநிலைமைக்கேற்ப, அரசின் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். நடப்பு ஆண்டில் கரும்புச் சாலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் புதிதாக சாலை ஏதும் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைப் பகுதியில் போடப்படவில்லை.

19—

## விவசாயிகளுக்கு செய்பொறி இயந்திரம்

வினா எண் 21313—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[ 1998 நவம்பர் 28

வேளாண்மைத் துறை மூலம் விவசாய நிலங்களைச் சீர் செய்ய நிலச்சமன் செய்பொறி (புல்டோசர்) போன்ற இயந்திரங்களை ஏழை விவசாயிகளுக்கு மிகக் குறைந்த வாடகைக்குக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**20—**

**கரும்புச் சாகுபடி விவரம்**

வினா எண் 21337—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1998 -ஆம் ஆண்டு எவ்வளவு நிலத்தில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 1997-98 ஆம் ஆண்டு 3,21,000 ஹெக்டேர் நிலத்தில் கரும்புச் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

**21—**

**ஏரி தூர் எடுத்தல்**

வினா எண் 4600— **திரு. வெ. கோவிந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு தொகுதி, உதியேந்திரம் பேரூராட்சி ஏரியைத் தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1998 நவம்பர் 28 ]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

பேரணாம்பட்டு தொகுதி, உதியேந்திரம் பேரூராட்சி ஏரியைத் தூர் வாரும் பணிக்கு சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையின் பேரில் 1998-99 ஆம் ஆண்டில் ஏரிகள் தூர் வாரும் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படுவதற்கு ரூ. 10 இலட்சத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணி இந்நிதியாண்டிற்குள் மேற் கொள்ளப்படும்.

**22—**

**ஏரி ஆழப்படுத்துதல்**

வினா எண் 16882—**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி, மயிலம் ஒன்றியத்தில் உள்ள 1,500 ஏக்கர் நிலப்பரப்புள்ள ஆல் கிராமம் ஏரியை ஆழபடுத்தி கரைகளைப் பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

இல்லை.

**23—**

**ஓய்வு இல்லம் செப்பனிடல்**

வினா எண் 16890—**திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளியில் உள்ள பொதுப் பணித் துறை கொட்டாறு ஓய்வு இல்லம் செப்பனிடப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நாட்ராம்பள்ளியில் உள்ள பொதுப்பணித் துறை கொட்டாறு ஓய்வு இல்லத்தைச் செப்பனிட ரூ. 40,000 க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் பணி மேற்கொள்ளப்படும்.

**24—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 16898—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பு. முட்லூர்—அரிராஜபுரம் வரை செல்லும் பெரியபட்டு வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர் வாரி அகலப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புவனகிரி தொகுதி, பு. முட்லூர்—அரிராஜபுரம் வரை செல்லும் பெரியப்பட்டு வாய்க்கால் தூர் வாரும் பணிக்கு வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ரூ. 1.32 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி இவ்வாண்டு செய்து முடிக்கப்படும். பணி மேற்கொள்ளும்போது ஆக்கிரமிப்புகளும் அகற்றப்படும்.



**25—**

## வெள்ளாற்று ஏரிக் கரைகளை பலப்படுத்துதல்

வினா எண் 16899—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, வெள்ளாற்று வடக்கு வரையில் உள்ள ஆக்கிரமிப்புகள் முழுவதுமாக அகற்றப்பட்டு, அதன் கரைகளைப் பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வெள்ளாறு இடது கரை சேத்தியாத்தோப்பு அணைக்கட்டுக்குகீழே 0/0 கிலோமீட்டர் முதல் 5/0 கிலோமீட்டர் வரை வெள்ளக்கரை அமைக்கும் பணி 631.70 இலட்சத்திலும், 3 கிலோமீட்டர் முதல் 5 கிலோமீட்டர் வரை ரூ. 417.50 இலட்சத்திலும் எடுத்துக் கொள்ள தலைமைப் பொறியாளர் மட்டத்தில் ஆய்வில் உள்ளது. இப்பணி மேற்கொள்ளும்போது ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்.

**26—**

## அணை கட்டுதல்

வினா எண் 17230—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, தில்லைநாயகபுரம் அருகிலுள்ள அய்ந்துகண் அணை உடைந்து போனதை இந்த நிதி ஆண்டிலேயே மீண்டும் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

ஆம், புவனகிரி தொகுதி, தில்லைநாயகபுரம் அருகிலுள்ள அய்ந்துகண் அணையில் சேதமடைந்துள்ள ஒழுங்கியத்திற்குப் பதிலாக புதிய ஒழுங்கியம் கட்ட ரூ. 80.00 இலட்சத்திற்கான மதிப்பீடுகள் கள அலுவலர்களால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு அரசின் ஒப்புதல் ஆணை வழங்கப்பட்ட பின்னர் வருகின்ற மூடும் காலத்தில் (1999-2000) பணிகள் மேற்கொள்ளப்படும். இருப்பினும் நடப்புகால பாசனத்திற்கு தடையின்றி தண்ணீர் வழங்க தற்காலிகமாக கலுங்கு கட்டப்பட்டுள்ளது. இதனால் நடப்புகால பாசனத்திற்கு தண்ணீர் வழங்கலாம்.

**27—**

## துரித இரயில் வண்டியை இயக்குதல்

வினா எண் 11199—**திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னையிலிருந்து புதுடில்லிக்குச் செல்லும் தமிழ்நாடு துரித இரயில் வண்டியை மதுரையிலிருந்து புறப்படச் செய்ய மத்திய அரசுக்கு மாநில அரசு கோரிக்கை விடுக்குமா?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எண் 2621/2622 தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் இரயிலை மதுரைக்கு நீட்டிக்க எந்தத் திட்டமும் தற்போது இல்லை எனவும், இந்தத் துரித வண்டியை மதுரைக்கு நீட்டிக்கத் தேவையான கூடுதல் வசதிகளும் இப்போது இல்லை எனவும், தற்போது மதுரையிலிருந்து டெல்லிக்குச் சென்றுவர வாரம் இருமுறை 6787/6788 மதுரை—ஜம்முதாவி துரித இரயில் வண்டி உள்ளதால், மதுரையிலிருந்து வந்துபோகும் பயணிகள் மேற்கூறிய வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் தென்னக இரயில்வே தெரிவித்துள்ளது.



**28—**

## ஆம்பூரிலிருந்து சென்னைக்குப் பேருந்து

வினா எண் 14323—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூரிலிருந்து பெங்களூர் மற்றும் ஆம்பூரிலிருந்து சென்னைக்குத் தனியாக பேருந்து இதுவரை இயக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில், எப்போது பேருந்து இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து ஆம்பூர் வழியாக பெங்களூர், கிருஷ்ணகிரி மற்றும் ஓசூருக்கு தினசரி 38 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும் வேலூரிலிருந்து பெங்களூருக்கு 12 பேருந்துகள் ஆம்பூர் வழியாக தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, ஆம்பூருக்குத் தனியாக பேருந்து இயக்க அவசியம் ஏற்படவில்லை. ஆம்பூரிலிருந்து சென்னை மற்றும் பெங்களூர் செல்பவர்கள் மேற்கூறிய பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**29—**

## பேருந்து வசதி செய்தல்

வினா எண் 17195—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி முதல் குமாரபாளையம் பவானி, ஆப்பக்கூடல், பி. மேட்டுப்பாளையம், கவந்தபாடி வழியாக கோபி வரை மற்றும் கோவை வரை பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடி—கோபிசெட்டிப்பாளையம் (வழி) அந்தியூர் தடத்தில் ஏற்கெனவே இரண்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவை

[ 1998 நவம்பர் 28

எடப்பாடியிலிருந்து கோபி செல்லும் பயணிகளின் தேவையை நிறைவு செய்து வருகின்றன. மேலும், ஆப்பக்கூடல் வழியாக செல்லும் வழித்தடத்தில் எடப்பாடியிலிருந்து பவானி சென்று அங்கிருந்து கோபி மற்றும் கோவை செல்ல பகுதிவாரியாக போதுமான பேருந்து வசதி உள்ளதால், தற்போதைய பேருந்து வசதியே போதுமானது.

**30—**

**கடனுதவி அளித்தல்**

வினா எண் 18314—**திரு. கே. மனோகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து அரசு நிறுவனங்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் கடனுதவி அளிக்க தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் பேருந்து வாங்கவும், நடைமுறை செலவுகளுக்குக் கடனுதவி செய்யும் நோக்கத்துடனும் தொடங்கப்பட்டது. இதனால் போக்குவரத்துக் கழகங்களின் நிதி தேவைக்கே முன்னுரிமை தரப்படுகிறது. இருப்பினும், நிறுவன வணிகத்தை விரிவுபடுத்தும்பொருட்டு விதிமுறைகள் மாற்றம் செய்யப்பட்டு போக்குவரத்துக் கழகங்களின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்தபின், உபரி நிதி இருந்தால் மட்டும் அனைத்து அரசு நிறுவனங்கள், அரசுத் துறை, உள்ளாட்சி அமைப்பு மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்குப் பேருந்துகள், இலகுரக மற்றும் கனரக வாகனங்கள் உபகரணங்கள் போன்றவை தவணைக் கொள்முதல் மற்றும் குத்தகைக் கொள்முதல் அடிப்படையில் வாங்கவும், மரபு சார்ந்த மற்றும் மரபு சாரா மின்சக்தி உற்பத்திக்குத் தேவையான திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கவும்



1998 நவம்பர் 28 ]

அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் தொடர்பான அனைத்துத் திட்டங்களுக்கும் நிதியுதவி செய்யவும் மற்றும் அரசு ஊழியர்களுக்குத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் இலகுரக வாகனங்கள் வாங்க கடன் வசதி அளிக்கவும் போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் கருதியுள்ளது. இந்நிறுவனத்திடம் உபரி நிதி இல்லாததால் மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக இதுவரை கடன் வழங்கவில்லை.

**31—**

**பட்டுக்கோட்டையிலிருந்து கூடுதல் பேருந்துகள் இயக்குதல்**

வினா எண் 20215—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து, கறம்பக்குடிக்குச் செல்லும் பேருந்து உதயசூரியபுரம், நடுவிக்கோட்டை, அதம்பை பாதரங்கோட்டை, தெற்கு மேலக்கொள்ளுக்காடு, புதுநகர், வெட்டுவாகோட்டை, ராங்கியன்விடுதி, குளத்திரான்பட்டு, தட்டாவூரணி வழியாகச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்ட வழித் தடத்தில் தடம் எண் ஏ 23 நகரப் பேருந்தின் மூலம் 29-7-1998 முதல் தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**32—**

**சாலை அகலப்படுத்துதல்**

வினா எண் 15107— **திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, இரும்பாடி வழியாக கருப்பட்டி செல்லும் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[ 1998 நவம்பர் 28

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

கி.மீ. 0/0 5/8 நீளமுள்ள அரசு இதர மாவட்ட சாலையான சோழவந்தான் கருப்பட்டி சாலையின் ஓடுதள அகலம் 3.75 மீட்டர்களே ஆகும். இச்சாலையை ஒரு பக்கம் மட்டும் அகலப்படுத்துவதற்குத் தேவையான நிலம் கையெடுப்பு செய்து, மேம்படுத்த கிலோமீட்டருக்கு ரூ. 3.50 இலட்சங்கள் வீதம் ரூ. 20.30 இலட்சங்கள் தோராயமாக செலவாகும். எனவே, இப்பணியினை பகுதி-2 திட்டத்தில் நிறைவேற்ற இயலாது.

**33—**

### ஓலைச் சுவடிகளைக் கண்காட்சியாக வைத்தல்

வினா எண் 13556—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள பழைய ஓலைச் சுவடிகளிலுள்ள அரிய கருத்துக்களை ஒரு நிபுணர் குழு அமைத்து அழியாமல் பாதுகாக்கவும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகளை கண்காட்சியாகத் தஞ்சாவூர் சரசுவதி மஹாலில் வைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டிலுள்ள பழைய ஓலைச் சுவடிகள் அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகத்தில் அரசால் பாதுகாக்கப்படுகின்றன. இவ்வோலைச் சுவடிகளிலுள்ள அரிய கருத்துக்களைப் பாதுகாப்பதற்காக இந்நூலகத்திலுள்ள தமிழ், வடமொழி, தெலுங்கு மற்றும் இஸ்லாமிய மொழிகளிலான ஓலைச் சுவடிகளை நன்கு ஆராய்ந்து அச்சாக்கம் செய்ய வேண்டிய சுவடிகளைத் தேர்வு செய்வதற்கான வல்லுநர் குழு 25-1-1995 நாளிட்ட தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் அரசாணை (நிலை) எண் 18-இல் அமைக்கப்பட்டுள்ளது.



1998 நவம்பர் 28 ]

இதன் மூலம் பழைய ஓலைச் சுவடிகளிலுள்ள அரிய கருத்துக்கள் அழியாமல் பாதுகாக்கப்படுகின்றன. 1995-இல் 26 நூல்களும் 1997-98-இல் 14 நூல்களும் அச்சாக்கம் செய்யப்பட்டன. 1998-99-இல் 15 நூல்கள் வெளிக்கொண்டுவரத் திட்டமிடப்பெற்றுள்ளன. மேலும், இந்நூலகத்திலுள்ள ஓலைச் சுவடிகள் அனைத்தையும் நகல் எடுத்து பாதுகாக்க நுண் ஒளிப்படக் கருவி வாங்குவதற்காக ரூ. 25.66 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட இவ்வோலைச் சுவடிகளை சரஸ்வதி மகால் நூலகத்தில் கண்காட்சியாக வைப்பதற்கு தஞ்சாவூர் எடுத்துச் சென்றால் பெரும்பாலான ஓலைச் சுவடிகள் சிதிலமடைந்துவிடக்கூடும். எனவே, அவற்றைக் கண்காட்சியாக வைக்க இயலாது.

**34—**

### தைப்பூசத் தேர் பழுது பார்த்தல்

வினா எண் 14829—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் பிரசித்தி பெற்ற கைலாசநாதர் கோவில் தைப்பூசத் தேர் பழுதடைந்துள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைப் பழுதுபார்த்து இயக்க இந்த ஆண்டில் நிதி ஒதுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) திருக்கோவில் தேரின் பழுதுகள் அவ்வப்போது உபயதாரர்களால் சரிபார்க்கப்பட்டு, தற்போது நல்ல நிலையில் உள்ளதால் வருகிற 1999-ஆம் ஆண்டு தைப்பூசத் திருவிழாவில் வழக்கம்போல் தேரோட்டம் சிறப்புடன் நடைபெறும்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**35—**

### கோயில் ரதத்தை ஓடச் செய்தல்

வினா எண் 18794—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[ 1998 நவம்பர் 28

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியிலுள்ள நஞ்சுண்டேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான முத்துரதத்தை ஓடச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி அருள்மிகு பிரசன்ன நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோவிலில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட முத்துரதம் நல்ல நிலையில் உள்ளது. ஒவ்வோராண்டும் சித்திரைத் தேர் உற்சவத்தில் திருக்கல்யாணத்தின்போது திருவீதி உலா வருவது வழக்கம். இப்போது இராசகோபுரத் திருப்பணி நடைபெறுவதால் இவ்வாண்டு பிரம்மோற்சவம் எனப்படும் ஆண்டுத் திருவிழா நடைபெறவில்லை. திருக்கோவிலில் இராசகோபுரப் பணி முடிவடைந்து குடமுழுக்கு நடைபெற்ற பின்னர் ஆண்டுத் திருவிழாவின்போது முத்துரதம் திருவீதி வலம் வரும்.

**36—**

**கோவிலைப் புதுப்பித்தல்**

வினா எண் 19644—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம் அய்யனாரப்பன் என்கிற புகழ் வாய்ந்த கோவிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

சங்ககிரி வட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், குன்றீசம்பாளையம் கிராமத்தில் உள்ள அருள்மிகு அய்யனாரப்பன் திருக்கோவில், இலாகாவின்கீழ் கொண்டுவரப்படாத, கிராம நத்தம் புறம்போக்கில் அமைந்துள்ள, வருமானம் ஏதும் இல்லாத சிறிய கோயில்.



1998 நவம்பர் 28 ]

இக்கோவிலைக் குலதெய்வமாக வழிபடும் இக்கிராமத்தில் உள்ள வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த பொதுமக்கள் பராமரிப்பதுடன், 1996-ஆம் ஆண்டில் வசூல் செய்து குடமுழுக்கும் நடத்தப்பட்டுள்ளது.

மேலும், கோவிலின் மூலஸ்தான விமானம் சிமெண்ட் தளம் போடப்பட்டு, நிதி பற்றாக்குறை காரணமாக சிமெண்ட் பூச்சு இல்லாமல் விடப்பட்டதால், மழைக்காலங்களில் சுவர்களில் தண்ணீர் கசிந்து, நாளடைவில் சுவர்கள் பாதிக்கக்கூடும், எனவே, விமானம் மேல்தளம் அமைத்து, சுற்றுச்சுவர் கட்ட கிராமப்புறத் திருப்பணித் திட்டத்தின்கீழ் ரூ. 25,000 பெற்று, திருப்பணியை மேற்கொள்ள தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**37—**

**கூட்டுறவுச் சங்கங்களுக்கு விவசாயப் பட்டதாரிகள் நியமனம்**

வினா எண் 17826—**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயப் பட்டதாரிகள் பணியில் உள்ளது போல் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விவசாயப் பட்டதாரிகளைப் பணியமர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கிராம அளவில் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உறுப்பினர்களுக்குத் தேவையான பயிர்க் கடன்கள் மற்றும் வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்ள மத்திய காலக் கடன்களையும் வழங்கி வருகின்றது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் கொண்டுள்ள வைப்புத் தொகைகளின் அடிப்படையில், பண்ணை சாராக் கடன்களையும் வழங்கி வருகின்றன. இத்தகைய வகையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் கடன்கள் வழங்க மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், உயர்நிலை நிறுவனங்களிடமிருந்தும் மறு நிதி பெற்றும் நிதியுதவி செய்து வருகின்றன. மேலும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், அவற்றின்

[ 1998 நவம்பர் 28

கடன் வழங்கு பணியைப் பன்முகப்படுத்தும் வகையில், பண்ணை சாராக் கடன்களையும் வழங்கி வருகின்றன. இங்ஙனம், கடன் வழங்குகையில் கடன் திட்டங்களைச் சரிபார்க்கவும்/மதிப்பீடு செய்யவும் (Evaluation of Projects), மத்திய கூட்டுறவு வங்கிகளில் தொழில் நுட்பக் குழு (Technical, Monitoring and Evaluation Cells) ஏற்படுத்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இங்ஙனம், தொழில் நுட்பக் குழு ஏற்படுத்தப்படும்போது, பின்வரும் துறைகளிலிருந்து மேலாளர் நிலையில் இரு அலுவலர்கள் இருக்க வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

1. பி.எஸ்சி. (விவசாயம்)
2. பட்டயக் கணக்கர் (Chartered Accountant)
3. பொறியாளர் (Engineer)
4. கால்நடை மருத்துவர் (Veterinary Surgeon)
5. ஊரகப் பொருளாதார நிபுணர் (Rural Economist)

அதன்படி விவசாயப் பட்டதாரிகளையும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணியமர்த்தம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**38—**

## நியாயவிலைக் கடையை இடம் மாற்றுதல்

வினா எண் *20419*—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கசுவிரெட்டிப்பட்டி பாரக்கல்லூருக்கு இடையில் தாரமங்கலத்தில் இயங்கி வரும் கசுவிரெட்டிப்பட்டி நியாயவிலைக் கடையை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**



1998 நவம்பர் 28 ]

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் *865* குடும்ப அட்டைகளுடன் நடத்தப்பட்டுவரும் கசுவிரெட்டிப்பட்டி நியாய விலைக் கடை தற்போது செயல்பட்டு வரும் இடத்திலேயே நீடிக்க வேண்டுமென குடும்ப அட்டைதாரர்கள் விரும்புவதாலும், இக்கடையை பாரக்கல்லூருக்கு மாற்றினால் வெறும் *148* குடும்ப அட்டைதாரர்கள் மட்டுமே பயன் பெறுவர் என்பதாலும், கசுவிரெட்டிப்பட்டி நியாயவிலைக் கடைக்கும் பாரக்கல்லூருக்கும் இடையேயுள்ள தூரம் *1* கிலோமீட்டர்தான் என்பதாலும், கசுவிரெட்டிப்பட்டி நியாயவிலைக் கடையினை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஆ) வினா எழவில்லை.

**39—**

## நியாயவிலைக் கடை தொடங்குதல்

வினா எண் *20442*—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் கிராமம், தொப்பவளவு கிராமத்தில் ஒரு நியாயவிலைக் கடை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் கிராம, தொப்பவளவு கிராம குடும்ப அட்டைகள், தற்போது மூலக்கடை நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. இக்கடையில் மொத்தம் *504* குடும்ப அட்டைகள் உள்ளன. தொப்பவளவு மற்றும் தொப்பக்காட்டுவளவு பகுதிகளில் மொத்தம் *104* குடும்ப அட்டைகளே உள்ளன. தாய்க்கடையான மூலக்கடைக்கும், தொப்பவளவு கிராமத்திற்கும் இடையே சுமார் *1.25* கி.மீ. தூரமே உள்ளது. மேலும் *104* குடும்ப அட்டைகளைக் கொண்டு இங்கு புதிய நியாயவிலைக் கடையோ அல்லது பகுதிநேர நியாயவிலைக் கடையோ தொடங்க இயலாது.

40—

## நியாயவிலைக் கடைகளுக்குக் கட்டடங்கள்

வினா எண் 20449—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் எந்தெந்த ஒன்றியத்திலுள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் **1997-98ஆம் ஆண்டில்** கீழ்க்கண்ட இடங்களில் ஒன்றிய வாரியாக நியாயவிலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டதன் விவரம்

| வரிசை எண் | ஒன்றியத்தின் பெயர் | நியாயவிலைக் கடைகளுக்குக் கடைகள் கட்டித் தரப்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சேலம் வட்டாரம் | 6 |
| 2. | அயோத்தியாப் பட்டிணம் | 7 |
| 3. | வீரபாண்டி | 4 |
| 4. | பனமரத்துப்பட்டி | 17 |
| 5. | வாழப்பாடி | 3 |
| 6. | ஆத்தூர் | 8 |
| 7. | பெத்தநாயக்கன்பாளையம் | 4 |
| 8. | கெங்கவல்லி | 12 |
| 9. | தலைவாசல் | 5 |
| 10. | மகுடஞ்சாவடி | 13 |
| 11. | சங்ககிரி | 4 |
| 12. | எடப்பாடி | 4 |
| 13. | கொங்கணாபுரம் | 7 |
| 14. | ஓமலூர் | 9 |
| 15. | காடையாம்பட்டி | 12 |
| 16. | தாரமங்கலம் | 6 |
| 17. | மேச்சேரி | 5 |
| 18. | நங்கவள்ளி | 2 |
| 19. | கொளத்தூர் | 1 |
| 20. | ஏற்காடு | .. |
| | மொத்தம் | 129 |





41—

## நியாயவிலைக் கடை ஏற்படுத்துதல்

வினா எண் 20477—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை பஞ்சாயத்து, அய்யனூரில் நியாயவிலைக் கடை ஒன்று ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பக்குட்டை பஞ்சாயத்து, அய்யனூர் பகுதியில் 265 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்குடும்ப அட்டைகள் தற்போது தப்பக்குட்டை நியாயவிலைக் கடையுடன் (இருப்பு காலிங்கனூர்) இணைக்கப்பட்டுள்ளன. அய்யனூருக்கும் காலிங்கனூருக்கும் இடையே உள்ள தூரம் சுமார் 1 கி.மீ. என்பதால் அங்கு பகுதிநேரக் கடை தொடங்க இயலாது. 265 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் முழுநேரக் கடையும் தொடங்க இயலாது.

[1998 நவம்பர் 28

42—

## பகுதிநேர அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்றுதல்

வினா எண் 20484—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, மேலஉளூர் கிராமத்தில் செயல்படும் பகுதி நேர அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்றித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, மேலஉளூர் கிராம பகுதிநேர நியாயவிலைக் கடை அம்மாவட்ட ஆட்சித் தலைவரின் ந.க. எண் 17869/98, எம் 5, நாள் 25-7-1998ன் படி முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றப்பட்டு 20-8-1998 முதல் முழுநேர நியாய விலைக் கடையாக செயல்பட்டு வருகிறது.

43—

## முழுநேர அங்காடி

வினா எண் 20485—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், காரியாவிடுதி கிராமத்தில் செயல்படும் பகுதிநேர அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், காரியாவிடுதி கிராமத்தில் செயல்படும் பகுதிநேர அங்காடியில் 327 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. முழுநேர நியாய விலைக்கடை அமைக்க 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளதால் தற்போது செயல்படும் பகுதிநேர அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்ற இயலாது.





44—

## கூட்டுறவு அங்காடியைப் பிரித்தல்

வினா எண் 20489—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மாரியம்மன் கோவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் செயல்படும் அங்காடியை இரண்டாகப் பிரித்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மருங்கை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி (மாரியம்மன் கோயில்) நடத்தும் அங்காடியை இரண்டாகப் பிரித்துத் தஞ்சாவூர் மாவட்ட வழங்கல் அலுவலர் ந.க. 9023/98 எம் 5, நாள் 13-7-98- ல் ஆணையிடப்பட்டு, தற்சமயம் மருங்கை 1 அங்காடியில் 569 கார்டுகளுடனும், மருங்கை-2 அங்காடியில் 568 கார்டுகளுடனும் நடைபெற்று வருகின்றன.

45—

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் விவரம்

வினா எண் 21324—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ரூ. 50 இலட்சத்திற்கு அதிகமாக வைப்புத் தொகை பெற்றுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் எத்தனை உள்ளன?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் தற்சமயம் ரூ. 50.00 இலட்சத்திற்கு அதிகமாக வைப்புத் தொகை பெற்றுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 842 ஆகும்.

(ஆ) சேலம் மாவட்டத்தில் தற்போது 380 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன. இவற்றில் ரூ. 50.00 இலட்சத்திற்கும் அதிகமாக வைப்புத் தொகை பெற்றுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை 190 ஆகும்.

**46—**

## பெண்களுக்கு தொழிற் பயிற்சிப் பள்ளி

வினா எண் 16062—**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் பெண்களுக்கு என்று தொழிற் பயிற்சி பள்ளி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.





**47—**

## புதிய சட்டம் இயற்றுதல்

வினா எண் 19442—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் தொழில் நிறுவனங்களும், அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்களையே வேலைக்குத் தேர்வு செய்ய வேண்டும் என்பதை அரசு சட்டமாக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்திய உச்ச நீதிமன்றம் வழக்கு ஒன்றின் தீர்ப்பில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக பரிந்துரைக்கப்பட்ட மனுதாரர்களுடன் காலியிடங்களை விளம்பரப்படுத்தி அதன்மூலம் விண்ணப்பங்கள் அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களையும் ஒன்றாகவே இணைத்து நேர்முகத் தேர்வு நடத்தி, தகுதி வாய்ந்த நபர்களைத் தேர்வு செய்து நியமனங்கள் வழங்க வேண்டுமெனத் தீர்ப்பு வழங்கியுள்ளது. இத்தீர்ப்பிற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மைய அரசு தொடர்ந்த மனு ஆய்வு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து மைய அரசு தனது 18-5-1998 நாளது அலுவலகக் குறிப்பாணையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் மைய அரசு மற்றும் மைய அரசு சார்பு நிறுவனங்கள், அவற்றில் தோன்றும் காலியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குத் தெரிவித்து பட்டியல்கள் பெறுவதுடன், மைய அரசு வெளியீடான வேலைவாய்ப்பு செய்தியில் விளம்பரம் செய்வதோடு, அறிவிப்புப் பலகையில் அறிவித்து, வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் விளம்பரப்படுத்தி அதன்மூலம் மனு செய்வோரையும் வரிசையிலிட்டுத் தேர்வு செய்ய ஆணையிட்டுள்ளது. இந்நிலையில், தனியார் தொழில் நிறுவனங்களும் அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்களையே வேலைக்குத் தேர்வு செய்ய வேண்டும் என்பதை அரசு சட்டமாக்க இயலாது.

[ 1998 நவம்பர் 28

48—

## பெண்கள் கூட்டுறவு தொழிற் பயிற்சிப் பள்ளி

வினா எண் 21256—**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் பெண்கள் கூட்டுறவு தொழிற் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

49—

## கூட்டுறவுச் சங்க விவகார எல்லையை மாற்றுதல்

வினா எண் 15630—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், நகரக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் விவகார எல்லையை 5 கிலோமீட்டரிலிருந்து 12 கிலோமீட்டர் என மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மேற்குறித்த வினா தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இம்மாதிரியான கோரிக்கை ஏதும் மேற்படி சங்கத்திடமிருந்து பதிவாளர் (வீட்டு வசதி) மூலம் அரசுக்கு கிடைக்கப்பெற்றால் பரிசீலிக்கப்படும். தற்போது நடைமுறையில் உள்ள அரசாணையின்படி ஒரு நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் எல்லை, நகராட்சி எல்லை மற்றும் அதனைச் சுற்றியுள்ள 8 கிலோமீட்டர் தூரம் வரை தனது விவகார எல்லையாக



1998 நவம்பர் 28 ]

வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

50—

## ஒளிபரப்பப்படும் நேரம் வரைமுறைப்படுத்துதல்

வினா எண் 14557—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செயற்கைக்கோள் தொலைக்காட்சி 24 மணிநேரமும் ஒளிபரப்பப் படுவதால் பள்ளிக் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். அதை வரைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

மத்திய அரசு, கேபிள் டிவி. நெட்வொர்க் (முறைப்படுத்துதல்) சட்டம் 1995-ல் கொண்டு வந்துள்ளதால், செயற்கைக்கோள் தொலைக்காட்சியின் செயல்பாட்டினை வரைமுறைப்படுத்த மாநில அரசுக்கு அதிகாரம் ஏதுமில்லை.

[குறிப்பு:. ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[ 1998 நவம்பர் 28

## 2. தகவல் கோரல்

### (அ) அனுமதி மறுத்த பிரச்சினையை அவையில் எழுப்புதல்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சொல்லப் போகிறீர்கள், சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நீங்கள் கடந்த 3 நாட்களாக இதைக் கிளப்பினீர்கள். நான் அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். உங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென்றால் நீங்கள் வெளிநடப்புச் செய்யலாம். வேறெதுவும் பேச நான் அனுமதிக்கமாட்டேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நீங்கள் சொல்லிவிட்டீர்கள், அதற்கு நான் பதில் சொல்லிவிட்டேன். நீங்கள் இதை தினமும் பேச நான் அனுமதி கொடுக்கமாட்டேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்போது பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. ஆகையினாலே நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசுங்கள். இதற்கு மேலும் பேசினீர்கள் என்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை மூன்றாவது நாளாகப் பேசுகிறீர்கள். நான் பதில் சொல்லிவிட்டேன். உங்கள் ஆட்சேபத்தைத் தெரிவிக்க நீங்கள் வெளிநடப்புச் செய்யுங்கள், எனக்கு ஆட்சேபணை இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1998 நவம்பர் 28 ]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு மேல் நான் உங்களைப் பேசவிடமாட்டேன். நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலே இடம் பெறாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எனக்குத் தெரியும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, 5 நிமிஷத்தில் முடிந்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எனக்குத் தெரியும். அதற்கு நீங்கள் வக்காலத்து வாங்கக் கூடாது. உங்கள் கட்சியைச் சேர்ந்தவர் என்றால் அன்றைக்கு அதுபற்றி நீங்களே பேசியிருக்கலாம். ஏன் பேசாமல் விட்டீர்கள்?

**திரு. இரா. தாமரைக்கனி:** அது அவருடைய பிரச்சினை. அவர்தான் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி இல்லை. நான் உங்களிடம் சொன்னேன். கட்சிக்கு ஒருவர் என்பதாலே அவர் பிரச்சினையை நீங்கள் பேசுங்கள் என்று உங்களிடத்திலே சொன்னேன். அந்தப் பிரச்சினையை நீங்கள் பேசியிருந்தால் நேரம் கொடுத்திருப்பேன். இப்போது இரண்டுபேரும் உட்காருங்கள்.

(திரு. சொ. கருப்பசாமி எழுந்து நின்றார்.)

**திரு. இரா. தாமரைக்கனி:** கொஞ்சம் கருணை உள்ளத்தோடு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணை உள்ளத்தோடுதான் பேசுகிறேன், அனுமதி கிடையாது.

(திரு. சி. ஞானசேகரன் எழுந்து நின்றார்.)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் வாய்ப்பு கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்பு கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டேன், உங்களுக்கு நான் அனுமதி கொடுக்க முடியாது.

*(திரு. பி.ஆர். சுந்தரம் மற்றும் திரு. சொ. கருப்பசாமி இருவரும் வாசகங்கள் அடங்கிய ஒரு பதாகையைத் தங்கள் கையில் பிடித்து தூக்கிக் காண்பித்தார்கள்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் காவலர்கள் அந்தப் பதாகையை அப்புறப்படுத்துங்கள். அப்புறப்படுத்திவிட்டு, அந்த 2 சட்டமன்ற உறுப்பினர்களையும் வெளியேற்றுங்கள்.

*(திரு. பி.ஆர். சுந்தரம் மற்றும் திரு. சொ. கருப்பசாமி இருவரும் தொடர்ந்து நின்றுகொண்டேயிருந்தனர்.)*

உடனடியாக அவர்கள் இருவரையும் அவைக் காவலர்கள் வெளியேற்ற வேண்டும்.

*(பின்னர், அவைக் காவலர்கள், திரு. பி.ஆர். சுந்தரம் மற்றும் திரு. சொ. கருப்பசாமி ஆகியவர்களின் கைகளிலிருந்த பதாகையைக் கைப்பற்றிவிட்டு, அவர்களையும் வெளியேற்றினர்.)*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே இடம் பெறாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

### (ஆ) மாஞ்சோலை எஸ்டேட் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து 27-11-1998 ஆம் நாளன்று விளக்கம் தெரிவிக்கையில் பயன்படுத்திய சொற்றொடரை நீக்கக் கோருதல்

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு என்ன வேண்டும்?

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஒரே வரியில் என்னுடைய கருத்தைச் சொல்லிவிட்டு நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக நான் இந்த அவையிலே பிரச்சினை எழுப்பியதைத் தொடர்ந்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் தமிழக முதல்வர் அவர்களும் . . . . .

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகத் தாங்கள் ஒவ்வொரு . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவர் என்ன பேசுகிறார் என்று கேட்கலாம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாஞ்சோலை நிகழ்ச்சி பற்றி தொடர்ந்து 3 நாட்களாக பேசப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் கொஞ்சம் இருங்கள். கிருஷ்ணசாமி, நீங்கள் சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தமிழக முதல்வர் அவர்களும் சில ஆட்சேபகரமான வார்த்தைகளைப் பயன்படுத்தி என்னைக் கொச்சைப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினர் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே உங்களிடத்திலே சொல்லிவிட்டேன். ஒரே வரியிலே சொல்லிவிட்டு வெளிநடப்புச் செய்யப் போகிறேன் என்று சொன்னீர்கள். தாராளமாக வெளிநடப்புச் செய்யுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** என்னுடைய கருத்தை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். இனிமேல் என்ன பேசப்போகிறீர்கள்?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** என்னுடைய கருத்தை நான் தெளிவுபடுத்தி . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னச் சொல்லப் போகிறீர்கள்? நீங்கள் இல்லாதபோது ஆட்சேபகரமான கருத்துக்களைச் சொன்னார்கள். ஆகையினாலே உங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு நீங்கள் வெளிநடப்புச் செய்கிறீர்கள்? அவ்வளவுதானே?

*முற்பகல் 9-35*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஒரு சட்டமன்ற உறுப்பினராகிய என்னை, தாழ்த்தப்பட்ட சிறுபான்மை மக்களுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய புதிய தமிழகத்தினுடைய............ (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தீயசக்தி என்று சுட்டிக்காட்டியது ஒட்டுமொத்த சட்டமன்றத்தையே அவமதிப்பதைப்போல் நான் கருதுகிறேன். அந்தத் தீயசக்தி என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை இந்த அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இந்த ஆட்சேபகரமான சொற்றொடரை நீக்க வலியுறுத்தி, அதேபோல் இதைக் கண்டித்தும், சட்டமன்றத்தை அச்சுறுத்தலுக்காகவோ, அரசியலுக்காகவோ பயன்படுத்தக்கூடாது என்று கேட்டு, நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

*(டாக்டர் க. கிருஷ்ணசாமி வெளிநடப்புச் செய்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமியினுடைய கோரிக்கையை ஏற்க முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன வாசகங்களை நான் அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

### (அ) அனுமதி மறுத்த பிரச்சினையை அவையில் எழுப்புதல்—தொடர்ச்சி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். ஒவ்வொருவருக்கும் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேச அனுமதி அளிக்க முடியாது. இன்னொரு கருத்தையும் சொல்ல வேண்டும். ஏற்கெனவே ஆளுநர் உரையின்போதே, இந்த இரண்டு உறுப்பினர்களும் இந்தமாதிரி ஒரு banner-ஐ எடுத்துக் காண்பித்தார்கள். அன்றைக்கே, கண்டிப்பாக, கடுமையாக, இதுதான் கடைசிமுறை என்று சொன்னேன். இன்று, இரண்டாவது முறையாக அதேமாதிரி பண்ணியதினாலே திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி ஆகியோர்மீது உரிய



நடவடிக்கைக்காக உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினையை அனுப்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு நீங்கள்தான். உறுப்பினர்கள் சிறு தவறு செய்தாலும், அதை ஒரு தாயுள்ளத்தோடு நீங்கள் மன்னிக்க வேண்டும். எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் சிறு தவறுதான் பண்ணியிருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்பட்டதினாலே, வயதிலே குறைந்தவர்கள், ஓர் ஆவேசத்திலே பண்ணிவிட்டார்கள். அதனாலே நீங்கள், பழையபடியும் அவர்களை சட்டமன்றத்திலே — ஏனென்றால், இன்று கடைசிநாள், எல்லோரும் சந்தோஷமாகப் போக வேண்டும், இந்தக் கூட்டத்தொடர் ஒரு வாரம்தான் நடந்தது, அதனாலே, எங்களுடைய கட்சி உறுப்பினர்களைப் — பணியாற்ற அனுமதிக்க வேண்டும். உரிமைக் குழுவிற்கு இதை அனுப்புவதையும் கொஞ்சம், கருணையுள்ளத்தோடு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய வேலை, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமையையும் பாதுகாக்க வேண்டும். திரு. தாமரைக்கனி, நீங்கள் உட்காருங்கள், நான் பேசி முடித்துவிடுகிறேன். நீங்கள் கட்சித் தலைவர் என்கிற முறையிலே உங்கள் கட்சி உறுப்பினருடைய உரிமையை நீங்கள் பாதுகாக்க வேண்டும். கடைசி நாள் விவாதம், இன்றைக்குக் கட்சிக்கு ஒருவர் என்னும்போது தாமரைக்கனி அவர்கள் சுந்தரத்தினுடைய கருத்துக்களையும் பேசுவார் என்று நானே பகிரங்கமாக அறிவித்தேன். நீங்கள், ஸ்ரீவில்லிபுத்தூருக்கு இது இல்லை, அது இல்லை, நீதிமன்றம் கட்டடம் இல்லை என்று சொல்லிவிட்டு, சுந்தரத்தை மறந்துவிட்டீர்கள். அதற்கு நான் வருத்தப்படுகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிப் பிரச்சினை மற்றும் தமிழ்நாட்டு மக்கள் பிரச்சினை, இப்படி எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும் பேசினேன். ஆனால், சுந்தரம் காவல் துறை அதிகாரிகளிடம் தான்தான் அடி வாங்கியதால், தான்தான் பேச வேண்டும், நீங்கள் பேசக்கூடாது என்று, ஒரு துணைத் தலைவரே தலைவருக்குக் கட்டளையிடும்போது நான் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். (சிரிப்பு) ஏனென்றால் அவருடைய உரிமையில் நான் தலையிட்டேன் என்று சொல்லி பெரிய பிரச்சினையை எழுப்பிவிடுவார்கள். அது அவருடைய சொந்தப் பிரச்சினை, நாட்டுப் பிரச்சினை கிடையாது.

[ 1998 நவம்பர் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. விளக்கத்திற்கு நன்றி. சுந்தரம் உங்களைப் பேசக்கூடாது என்று சொல்லிவிட்டார் என்றால் அதுபற்றி எனக்குப் பிரச்சினை இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஒரு வாரமாக அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். நீங்கள் அனுமதிக்காததனாலேதான் ஒரு வேகம் கொண்டு இந்தமாதிரி உணர்ச்சிவசப்பட்டு செய்துவிட்டார். நீங்கள் எப்படி வீட்டிலே உள்ள குழந்தை குட்டிகளை மன்னிப்பீர்களோ அந்த மாதிரி ஒரு குழந்தையாக நினைத்து எங்கள் கட்சி உறுப்பினரை, புது உறுப்பினர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், நான் அனுமதி மறுக்கப் போகிறேன் என்று தெரிந்து, அவர் வீட்டிலேயிருந்தே Baner-ஐத் தயார் பண்ணிக்கொண்டு வந்திருக்கிறார். (குறுக்கீடு) இப்பொழுதா வந்து எழுதினார்? அப்படி, இன்றைக்குத் தயாராக வந்திருக்கிறார். இது என்ன, குழந்தை உள்ளம், தாயுள்ளம் என்று சொல்லி எதற்காக இப்போது நாடகம் நடிக்கிறீர்கள்?

(திரு. இரா. தாமரைக்கனி நின்று கொண்டிருந்தார்.)

நீங்கள் உட்காருங்கள். உரிமைக் குழுவிலே வேண்டுமானால் நீங்கள் சொல்கிற இந்தக் கருத்தைச் சொல்கிறேன். ஆனால், இன்றைக்கு நான் அதை மாற்ற முடியாது. மாற்றினால் என் வார்த்தைக்கே மரியாதை இல்லாமல் போகும். நான் ஏற்கெனவே காலையிலேதான் டாக்டர் கிருஷ்ணசாமியிடம் சொன்னேன். சில மாதங்களுக்கு முன்னால், அவையை விட்டு வெளியேற வேண்டும் என்று நான் அவரிடம் சொன்னேன். அவர் அதைக் காதிலே வாங்கினாரோ இல்லையோ, உட்கார்ந்துவிட்டார். சரி, என் உத்தரவை மீறி உட்கார்ந்திருக்கிறார் என்று நான் என்னுடைய தீர்ப்பை மாற்றிக்கொண்டேன். அந்தமாதிரி தினமும் மாற்றிக்கொண்டிருந்தால் நான் பேரவைத் தலைவராக வேலையே பார்க்க முடியாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்,......... தயவுசெய்து உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** உள்நோக்கம் எதுவும் கிடையாது, காதிலே சரியாக விழாததாலே உட்கார்ந்துவிட்டேன்.



1998 நவம்பர் 28 ]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான், நீங்கள் புரியாமல் உட்கார்ந்திருக்கலாம். இப்போது நீங்கள் உட்காருங்கள். போகிற போக்கைப் பார்த்தால் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சருடைய விவகாரம் முடியப்போவதில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, திரு. சுந்தரம் ஒரு வாரமாகப் பேச வேண்டும் என்று அனுமதி கேட்கிறார். பேச அனுமதி கேட்காத நேரத்திலே, சைகை மூலமாக ஏதோ . . .

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவரவர்களே, ஒரு பிரச்சினையை இந்த அவையில் எழுப்பலாமா, கூடாதா என்பதில் ஒரு முடிவுதான் இருக்க முடியும். கூடாது என்று ஒரு முடிவு எடுத்த பின்னர் — 3 நாள், 7 நாள், 3 மாதம், எத்தனை மாதமானாலும், ஒரு பிரச்சினையை எழுப்புவதற்கு இந்த அவையில் அவசியமில்லை என்று நம்முடைய பேரவையினுடைய தலைவர் ஒரு முடிவு எடுத்துவிட்டால், அந்த முடிவு எத்தனை நாளானாலும் ஒரே முடிவாகத்தான் இருக்க முடியும். ஆகவே, நாளான காரணத்தால் அதை அனுமதிக்க வேண்டுமென்ற வாதம் நியாயமாகத் தெரியவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமரைக்கனி, அனுமதி கிடையாது. நீங்கள் இப்படியே பேசிக்கொண்டிருக்கக்கூடாது. நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன் உங்களிடத்திலே, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். நான் பேசிக்கொண்டிருக்கிறேன், நீங்கள் உட்காருங்கள். நான் அன்றைக்கே சொன்னேன், அனுமதி கொடுக்க முடியாது. ஆகையினாலே, இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே உங்கள் கருத்தை நீங்கள் சொல்லுங்கள் என்று அன்றைக்குச் சொல்லிவிட்டேன். அப்புறம் தினம் வந்து அந்தப் பிரச்சினையை எழுப்புவதிலே நியாயம் இல்லை. டாக்டர் குமாரதாஸ். (குறுக்கீடு)

### (இ) நீலநாக்கு நோய் சம்பந்தமான பிரச்சினை

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவரவர்களே,.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது என்ன சொல்லப் போகிறீர்கள்? வெளிநடப்புச் செய்துவிட்டு அதற்குள்ளே வந்து அடுத்த பிரச்சினை என்கிறீர்கள். இதெல்லாம் (குறுக்கீடு) என்ன பிரச்சினை?

[ 1998 நவம்பர் 28

**டாக்டர். க. கிருஷ்ணசாமி:** நீலநாக்கு நோய் சம்பந்தமான பிரச்சினை. அதுசம்பந்தமாகப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதுசம்பந்தமாக அமைச்சரவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப்பற்றி நீங்கள் நேராகப் பேசிக்கொள்ளுங்கள். அதற்குத் தீர்மானத்தை முன்மொழிய வேண்டும். நீங்கள் இந்தப் பிரச்சினையைப் பேசியதாக நான் அவைக்குறிப்பிலே ஏற்றிக்கொள்கிறேன். அமைச்சரைப் பார்த்துப் பதில் வாங்கிக் கொள்ளுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவரவர்களே,.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவுகளைத் தவிர வேறு எதுவும் கிடையாது. (குறுக்கீடு) நிமிஷத்தைப் பற்றி அல்ல, பலபேர் ஒவ்வொரு நிமிஷம் என்று பேசுவதற்கு நேரமில்லை.

**(ஈ) உறுப்பினர் கொடுத்த அறிவிக்கைகள்**

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே, நான் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். அதை நீங்கள் எடுத்துக்கொள்ள . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள். நீங்கள், கடைசி நாள், கலாட்டா பண்ண வேண்டும் என்ற முடிவிலே இருக்கிறீர்களா? இனிமேல் யாரும் எழுந்தீர்கள் என்றால் நான் நடவடிக்கை எடுப்பேன், உட்காருங்கள். யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பேன். டாக்டர் குமாரதாஸ். (குறுக்கீடு) வேறு யாருக்கும் அனுமதி கிடையாது. டாக்டர் குமாரதாஸ், நீங்கள் படிக்கப் போகிறீர்களா இல்லையா? (குறுக்கீடு) மணி, உட்காருங்கள். அனுமதி இன்றைக்குக் கிடையாது.

## 3. அறிக்கை அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல், டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1998-99 ஆம் ஆண்டுக்கான



1998 நவம்பர் 28 ] [டாக்டர் தே. குமாரதாஸ்]

அரசு உறுதிமொழிக் குழுவின் ஏழாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. ரெகுநாதகாவேரியிலுள்ள கிளைக் கால்வாய்களை ஆழப்படுத்துவது குறித்து பொதுப்பணித் துறை அமைச்சரின் விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, 26 ஆம் தேதி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இந்த மன்றத்திலே பேசுகிறபொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்கு மறுப்பு அல்ல; ஆனால் அதற்கு ஒரு விளக்கத்தை அளிக்கத் தாங்கள் எனக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறபொழுது, பொதுப்பணித் துறை மூலமாக நல்லமுறையில் கால்வாய்களை எல்லாம் ஆழப்படுத்தியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் ரெகுநாதகாவேரி மற்றும் இரண்டு கால்வாய்களை ஆழப்படுத்த நம்முடைய முதலமைச்சர் அவர்களே வந்து தொடங்கி வைத்தார்கள், அதில் இரண்டை ஆழப்படுத்தவில்லை, ஒன்றை மட்டும் ஆழப்படுத்தியிருக்கிறார்கள். மக்களிடம் நான் போய் என்ன நம்முடைய முதலமைச்சர் அவர்களே வந்து தொடங்கிவைத்து, ஆழப்படுத்தினார்களே, எப்படி என்று கேட்டால், ஆழப்படுத்தாமலே இருந்திருக்கலாம் என்று சொல்கிறார்கள். ஏனென்றால் கால்வாயை ஆழப்படுத்தியிருக்கிறார்கள். அதில் வருகிற கிளைக் கால்வாய்களை ஆழப்படுத்தாததால் தண்ணீர் முழுவதும் கடலில் போய் விழுந்துவிட்டது. அதை ஆழப்படுத்தாமல் இருந்தாலாவது எங்களுக்குப் பரவலாகத் தண்ணீர் கிடைத்திருக்கும் என்று ஒரு குறையைச் சொல்கிறார்கள். அந்த ரெகுநாதகாவேரியை ஆழப்படுத்துகிறபோது, அதிலிருக்கிற கிளைக் கால்வாய்களையும் ஆழப்படுத்தியிருக்க வேண்டும். இனிமேலாவது அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நல்ல நோக்கத்தில்தான் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், ஒரு சிறு திருத்தம் என்னவென்றால் அவர்கள் சொன்னது 3 திட்டங்களை.

ஒன்று, நாராயணகாவேரி, இரண்டு சங்கரதேவன் கால்வாய், மூன்று ரெகுநாதகாவேரி. இந்த மூன்று திட்டத்தில், நாராயணகாவேரிக்கு 25-11-1998 அன்றைக்குத்தான் Tender receive பண்ணியிருக்கிறோம். எனவே, அந்த வேலை நடக்கவில்லை.

சங்கரதேவன் கால்வாய்க்கு 12-11-1998 ஆம் தேதிதான் Tender முடிந்தது. எனவே, அதிலும் நாங்கள் வேலை நடத்தவில்லை. மூன்றாவது, ரெகுநாதகாவேரி. இதை இரண்டு பகுதிகளாகப் பண்ணுகிறோம். ஒரு பகுதிக்கு 2-12-1998 ஆம் தேதிதான் Tender வைக்கப்போகிறோம், receive பண்ணப் போகிறோம். இன்னொரு பகுதிக்கு 14-10-1998 அன்றைக்குத்தான் பண்ணியிருக்கிறார்கள். ஆகையினாலே, இந்த 14-10-1998-ஐ பொறுத்தவரை 3 நாட்கள் மட்டும்தான் வேலை செய்தார்கள். அதுகூட, bit bit-ஆக மரம், செடி, கொடியை வெட்டுவதைப் பண்ணினார்கள். ஆனால் ஆழப்படுத்தவில்லை. எனவே, 3 வேலைகளையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னதைப்போல் முதலமைச்சர் தந்தது உண்மை. ஆனால், அந்தக் கால்வாய்களை மட்டும் ஆழப்படுத்திவிட்ட காரணத்தினால் தண்ணீர் எல்லாம் கடலிலே போய் விழுந்து விட்டது என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிர்ப்பாக அல்ல, ஒரு விளக்கத்தைச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால், அதேநேரத்திலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அந்தக் கிளைக் கால்வாய்களைச் சீர் செய்ய வேண்டுமென்று கூறிய கருத்து நல்ல கருத்து. அரசு இதைக் கருத்தில் கொண்டு, வேண்டிய பணிகளைச் செய்யும்.

முற்பகல் 9-45

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு, அந்தக் கால்வாய்களைப் பற்றிய முழு விவரங்களையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு பெய்த பெருமழையின் காரணமாக. என்னுடைய பகுதியில் மழை குறைவாகப் பெய்திருந்தபோதிலும். ஆற்றிலே வந்த தண்ணீர் போதிய அளவு பயன்படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. காரணம், கிளைக் கால்வாய்கள் இல்லாதது ஒரு பெரிய குறை என்று விவசாயிகள் சொன்னதை நான் எடுத்துச் சொன்னேன். அடுத்த வெள்ளத்திற்குள்ளாவது, அவற்றையெல்லாம் சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஈ) உறுப்பினர் கொடுத்த அறிவிக்கைகள்—தொடர்ச்சி.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்து, சபாநாயகர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை. தமிழ் மாநில காங்கிரசில் ஏகாம்பரம் என்பவர் ஒரு பெரிய தலைவர். அவருடைய மனைவியை அநியாயமாகக் கொலை செய்து, நகைகளையெல்லாம் எடுத்துக்கொண்டது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்த பின்பு அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்), 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1997) (ஆய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1997) @(ஆய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 28-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 200 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 200 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1997) (ஆய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஆய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு ஏற்கப்பட்டது.

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 61/1998), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 61/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 27-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [1998 நவம்பர் 28

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 61/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1998 நவம்பர் 28] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 62/1998), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 62/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

---

@ 27-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 62/1998) நிறைவேற்றப்பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





**(ஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களின் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களின் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 63/1998), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களின் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 63/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 27-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களின் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 63/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (உ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு





எண் 49/1998), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1998)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@23-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஊ) தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்), சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/1998), மாண்புமிகு மக்கள் நல்வாழவு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, பேசுகிறீர்களா? சரி, பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, விதிமுறைகளை மீறிக் கட்டப்பட்டு இருக்கக்கூடிய கட்டடங்களை இடித்துத் தள்ளுவதால் ஏற்படுகிற நட்டத்தையெல்லாம் கணக்கில்கொண்டு, பொதுமக்களுக்கு ஏற்படுகிற சிரமத்தையும் கருத்தில் கொண்டு இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்படுகிறது. இதைத் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதேநேரத்தில், இப்படிப்பட்ட குறைகள் சென்னையில் மட்டுமல்லாமல், தமிழ்நாடு எங்கும் இருந்து கொண்டிருக்கிறது. எல்லா நகராட்சிகளிலும் புறம்போக்கு இடத்தில் கட்டி இருப்பவர்களுக்கு நீங்கள் முறைப்படுத்திக் கொடுக்க வேண்டாம்; ஆனால், அவரவர்கள் இடத்தில் யாரெல்லாம் விதிமுறைகளை மீறிக் கட்டி இருக்கிறார்களோ, அவற்றை எல்லாம் முறைப்படுத்துவதற்கு, சென்னையில் மட்டுமல்லாமல், தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும்கூட முறைப்படுத்துவதற்கு, இதுபோன்ற சட்டத் திருத்தத்தை நாம் கொண்டு வந்தோம் என்று சொன்னால், தமிழகத்தில் இருக்கக்கூடிய வீட்டு உரிமையாளர்கள் பலர் இதனாலே பயன்பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்கிற காரணத்தினாலே, இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, தமிழ்நாடு முழுமைக்கும் இம்மாதிரியான சட்டத்தை இயற்ற வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக C.M.D.A. பகுதி என்று சொல்லப்படுகின்ற இந்த சென்னை மாநகரத்தில் விதிமுறைகளை மீறி

@26-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 நவம்பர் 28

பலர் இந்தக் குற்றத்தைச் செய்திருக்கிறார்கள். எனவே, அது ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமென்பது நீண்டநாள் கோரிக்கை. அதை இந்த அரசு உணர்ந்து அதற்குரிய முறையில் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள், இன்னும் நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும்கூட இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அவைபற்றி அரசினுடைய கவனத்திற்கு இதுவரையில் வரவில்லை. அப்படி வருமானால் உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



1998 நவம்பர் 28] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (உ) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவின்மீது பேச வாய்ப்பு கோருதல்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், என்ன சொல்லப் போகிறீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவின்மீது பேச வேண்டுமென்று திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் விருப்பம் தெரிவித்திருந்தார்கள். இன்னும் நிறைய பேர் பேச வேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இந்தச் சட்டமுன்வடிவை வாக்கெடுப்புக்கு விடும்போது எல்லோரும் உட்கார்ந்து இருந்தீர்கள்.

இது சரியில்லை, முறையில்லை. இருந்தாலும் வாய்ப்பு கொடுக்கிறேன். மேலும், திரு. சொக்கர் என்னிடத்தில் வந்து தவறான தகவலைக் கொடுக்கக்கூடாது. உள்ளாட்சித் துறை அமைச்சர் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோரும்போது யாருமே எழுந்து நிற்கவில்லை. ஒவ்வொரு முறையும் எழுந்து நிற்கும் ஞானசேகரன் அப்பொழுது ஏன் எழுந்து நிற்கவில்லை?

**திரு. சி. ஞானசேகரன்:** நான் திருமதி பொன்னம்மாள் அவர்களுக்காக எழுந்து நின்றேன். நான் பேசப் போவதில்லை, அவர்கள்தான் பேசப் போகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரையாவது எழுந்து நிற்கச் சொல்லியிருக்கலாம் இல்லையா?

**திரு. சி. ஞானசேகரன்:** சபாநாயகர் கூப்பிடவில்லை என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சட்டச் சிக்கலாக இருக்கிறது. இருந்தாலும் என்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி எல்லா சட்டமுன்வடிவுகளையும் முடித்த பின்பு, இந்த உள்ளாட்சிமன்றச் சட்டமுன்வடிவின்மீது விவாதத்திற்கு அனுமதிக்கிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொக்கர் இப்படித் தவறான தகவலைக் கொடுக்கக் கூடாது என்று சொன்னதால், ஒரு விளக்கத்தைக் கொடுக்க விரும்புகிறேன். இன்று பல சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சில சட்டமுன்வடிவுகளில் விவாதத்தில் பங்குபெற உறுப்பினர்கள் விரும்பாமல் இருக்கலாம். ஆனால் இது முக்கியமான...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் 2 முதல் 200 முடிய என்று சொன்னேனே. முக்கியமான சட்டமுன்வடிவு என்றால்........

**திரு. ஆர். சொக்கர்:** என் தவறைத் திருத்திக்கொள்கிறேன். விவாதத்திற்கு அனுமதி கொடுத்ததற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொக்கர் சொல்வதெல்லாம் நியாயம்தான். ஒரு முறைக்கு இருமுறை நான் 2 முதல் 200 முடிய என்று சொன்னேன். யாருமே எழுந்து நிற்கவில்லை.





## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1998), மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

*முற்பகல் 10-00*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் தனி அலுவலர்கள் நியமன சட்டத் திருத்தத்தில், அந்த இடங்களிலெல்லாம் ஏன் தேர்தல் நடைபெறவில்லை, ஏன் தனி அலுவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்பது குறித்து நான் இங்கே அறிய விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களில், சில இடங்களில் தேர்தல்கள் நடைபெற்று இருக்கின்றன. ஆனால். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் பொறுப்புகளை ஒப்படைக்காததற்கான காரணம் இந்தச் சட்டமுன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் ஒருசில மைய மற்றும் உச்ச கூட்டுறவுச் சங்கங்களின் குழுமங்களுக்கு இன்னமும் தேர்தல் நடைபெறாமல் உள்ளதோடு, அரசால் ஆணையிடப்பட்டு திருத்தி அமைக்கப்பட்ட தேர்தல் திட்டத்தின்படி கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்

---

@25-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20 ஆம் நாளில்தான் நடத்தி முடிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. நடந்து முடிந்த தேர்தல்களிலேகூட சில குறைபாடுகள், முறைகேடுகள் இருந்துள்ளன. குறிப்பாக, தருமபுரி மாவட்டத்திலே பால் வளத் துறைக்கு நடத்தப்பட்ட தேர்தலிலே எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்த பிறகு, அவர் தேர்தலைச் சந்திப்பதற்குப் பதிலாக, அவர் வாபஸ் வாங்க வேண்டுமென்று அதிகாரிகள் சொல்லியதால், அவர் அந்தத் தேர்தல் களத்தில் நிற்காமல், பிறகு நீதிமன்றத்திற்குச் சென்று உத்தரவு வாங்கியிருக்கிறார். இப்படிப்பட்ட முறைகேடுகள் எல்லாம் நடந்து இருக்கின்றன. நடந்து முடிந்த முறைகேடுகளைக் களைவதற்கும், இனி நடக்கக்கூடிய தேர்தல்களில் முறைகேடுகள் வராமல் பார்த்துக்கொள்வதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் கல்யாணி என்பவர் தன்னுடைய மனுவில் போலி கையெழுத்து போட்டு வாபஸ் பெற்றதாக உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்தார். ஆனால் அதற்காகத் தேர்தல் அதிகாரி அவருடைய மனுவைத் தள்ளுபடி செய்யவில்லை. கடன் கொடுக்கப்பட்டவருக்கு அவர் ஜாமீன் கையெழுத்துப் போட்டதனால் தான் அவருடைய மனு நிராகரிக்கப்பட்டது என்று தேர்தல் அதிகாரி சொல்லியிருக்கிறார். இதை நம்முடைய உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதி அவர்கள் ஏற்றுக்கொண்டு, மறுதேர்தல் நடத்த வேண்டும் என்று சொன்னார்களே தவிர, போலியான கையெழுத்திட்டு வாபஸ் பெறப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** கிருஷ்ணகிரியிலே அந்தத் தேர்தல் அதிகாரி அவருடைய Nomination-ஐப் பற்றிச் சொல்லும்போது, வாபஸ் வாங்கிவிட்டார் என்று அறிவித்துதான் close செய்தாரேயொழிய, கடன் பாக்கிக்காக நிராகரிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது முழுக்க முழுக்க தவறான செய்தியாகும். அவைக்குத் தவறான தகவல் சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உயர் நீதிமன்றத்திலே நடந்ததைப் பற்றி அமைச்சர் சொல்லுகிறார். அது உண்டா, இல்லையா என்பதைப் பற்றிப் பேசுங்கள். உங்கள் விருப்பத்திற்கு தவறு, தவறு என்று பேசிக்கொண்டிருக்காதீர்கள். தேர்தல் அதிகாரி சார்பிலே 'அவர் Nomination தள்ளுபடி ஆனதற்குக் காரணம் அவர் கடன் பாக்கி





வைத்தவருக்கு ஜாமீன் கையெழுத்து போட்டதால் Nomination தள்ளுபடி ஆனது, என்று உயர் நீதிமன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது என்று அமைச்சர் சொல்லுகிறார். அது சரியா, இல்லையா என்று பேசுங்கள். நீங்கள் மறுப்பு சொல்லிக் கொண்டிருப்பது நியாயம் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** ஏற்கெனவே அவர்கள் இப்படிப்பட்ட ஒரு தவறைச் செய்துவிட்டு, தவறான ஒரு Counter-ஐப் போட்டதன் காரணத்தாலே, அதை ஏற்றுக்கொண்டுதான் மறுதேர்தல் வைக்கச் சொல்லி இப்போது நீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம், நீங்கள் என்ன பேசப் போகிறீர்கள்? சொல்லுங்கள்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 400-க்கும் மேற்பட்ட C.S.R., D.R., J.R., போன்றவர்கள், தேர்தல்கள் நடைபெற வேண்டிய பல்வேறு சங்கங்களில் தனி அதிகாரிகளாக பொறுப்பேற்றிருக்கிறார்கள். இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்பதற்குக் காரணம், இப்படி ஒரு சட்டம் இங்கே நிறைவேற்றபடவில்லை என்று சொன்னால், அவர்கள் அனைவரும் Revert-ஆக வேண்டியிருக்கும். 400-க்கும் மேற்பட்டவர்கள் தங்களுடைய பதவிகளை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லோரும் பொதுவாகப் பேசுகிறார்கள். கூட்டுறவுத் துறையிலே முறைகேடுகள், கழகத்தைச் சார்ந்தவர்களே வெற்றி பெற்றுவிட்டார்கள், குறைபாடுகள் இருக்கின்றன என்று பேசுகிறார்கள். அது எனக்கு விந்தையாக இருக்கிறது. இப்போது நடைபெறுவது 3 கட்டத் தேர்தல் ஆகும். அந்த 3 கட்டத் தேர்தலில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருப்பது 3-வது கட்டத் தேர்தல். பிரதான சங்கங்களுடைய தேர்தல். அவை முறைப்படி நடைபெறுகின்றன. அனைத்துத் துறைகளுக்கும், 18-க்கும் மேற்பட்டு இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல்கள் நடைபெற்று முடிந்துள்ள நிலையிலே, எந்தக் கட்சி பெரும்பான்மை வெற்றி பெற்றதோ, அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் பதவிக்கு வருகிறார்கள். பெரும்பாலும், எல்லாத் துறைகளிலும் அப்படிப்பட்ட நிலைதான் இருக்கிறது. எனவே, இந்த

[திரு. செங்கை சிவம்] [ 1998 நவம்பர் 28

Apex Bodyயினுடைய தேர்தலிலே ஊழல் ஏற்பட்டதாகச் சொல்லுவது பொருத்தமற்றது. நியாயமான முறையிலே, நேர்மையான முறையிலே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு 6 மாத காலத்தில், கூட்டுறவுச் சங்கத் தேர்தலை, உள்ளாட்சித் தேர்தலை மிக வெற்றிகரமாக நடத்தி முடித்து இருப்பதை நாம் அனைவரும் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** I want to rebut it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? ஆங்கிலத்தில் பேசினால் பயந்துவிடுவேன் என்று நினைக்கிறீர்களா? அவர்கள் சொல்லுகின்ற கருத்து வேறு, நீங்கள் சொல்லுகின்ற கருத்து வேறு. அவர் ஏதோ சொல்லிக்கொண்டிருக்கிறார். நீங்கள் ஏதோ சொல்லுகிறீர்கள். உங்களுக்கு ஒன்றும் அவர் மாற்றுக் கருத்து சொல்லவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** முறைகேடுகள் இல்லை என்று சொல்லுகிறார். முறைகேடுகளை நாங்கள் சொல்லுகிறோம் அல்லவா?

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ஏதோ, பிரதான சங்கம், தலைமைச் சங்கம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். உங்கள் கருத்திற்கு மறுப்பு இல்லை. நான் அதை அனுமதிக்க முடியாது. சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக...

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர், தலைவர்..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, தலைவர், தலைவர் என்கிறீர்கள்? நீங்கள் நினைத்ததற்கெல்லாம் எழுந்து நின்று தலைவர், தலைவர் என்றால் என்ன அர்த்தம்?

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் நிறைய பேச வைத்திருக்கிறேன். நீங்கள் மள மளவென்று போகிறீர்கள். கீழேயே பார்த்துக கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வெளியே போய்விட்டு, உங்கள் இஷ்டத்திற்கு வருவீர்கள்; நான் . உங்களுக்காகக் காத்திருக்க வேண்டுமா?

**திரு. இரா. தாமரைக்கனி:** இங்கேதான் இருக்கிறேன்.



1998 நவம்பர் 28 ]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நடந்த மத்தியக் கூட்டுறவு வங்கித் தேர்தல்களெல்லாம் முறைகேடாகத்தான் நடந்தன. மனு தாக்கல் செய்ய முடியவில்லை. சம்பந்தப்பட்ட J.R., D.R., Collector, ஆக எல்லோருமே ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து, அதிகாரிகள் ஆதரவோடு, எதிர்க் கட்சி உறுப்பினர்களை மனு தாக்கல் செய்யவிடாமல் இந்தத் தேர்தல் நடந்தது. அதேபோல, மத்தியக் கூட்டுறவு வங்கித் தேர்தலாக இருந்தாலும் சரி, சரி, பால் வளக் கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தலாக இருந்தாலும் சரி, மாநில அளவில் முறைகேடாகத்தான் நடந்தன. உதாரணமாக, விருதுநகர் மாவட்டத்தில் 125 சங்கங்கள் இருந்தன. திடீரென்று, பால் கறக்காமலேயே, மூன்று மாதங்கள் பால் கறந்ததாகச் சொல்லி, போலியாக 125 சங்கங்களைச் சேர்த்து, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்கள் வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணத்தோடு, அதிகாரிகளைக் கையிலே வைத்துக்கொண்டு, பால் வளச் சங்கத்தின் மாநிலத் தேர்தலும், மத்திய விவசாயச் சங்கத் தேர்தலும் நடந்த காரணத்தினால், முறைகேடுகள் நடந்த காரணத்தினால், தமிழ்நாடு மட்டத்திலே இந்தத் தேர்தலை ரத்து செய்து, உண்மையான உறுப்பினர்களை வைத்து, அரசு தலையீடு இல்லாமல், Collector, Police, J.R. தலையீடு இல்லாமல், போலிச் சங்கங்களையெல்லாம் எடுத்துவிட்டு, உண்மையான...

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தேர்தல்களெல்லாம் முடிந்து, முடிவு அறிவிக்கப்பட்டதற்குப் பின்னால், உண்மையான உறுப்பினர்களை வைத்துத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்றும், இப்போது நடந்திருக்கிற தேர்தல்கள் உண்மையான உறுப்பினர்களைக் கொண்டு நடத்தப்பெறவில்லை என்றும் அவர் சொல்கிறார். தயவுசெய்து அவர் அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேர்தல்களெல்லாம் முடிந்து விட்டன. அப்போது எந்தவிதமான மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை. தேவையில்லாமல் இப்போது கிளப்புகிறார்கள். எனவே, போலி உறுப்பினர்கள் என்ற வார்த்தையைத் திரும்பப் பெற வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் மனு தாக்கல் செய்யவே முடியவில்லை. உதாரணமாக, சேலம் மாவட்டத்தில் எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் சுந்தரத்திற்கு அந்த நிலை வந்தது.

[ 1998 நவம்பர் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம், அவரைப்பற்றிப் பேசக்கூடாது என்று உங்களிடம் சொல்லியிருப்பதாகச் சொன்னீர்கள். இப்பொழுது ஏன் நீங்கள் பேசுகிறீர்கள்?

**திரு. இரா. தாமரைக்கனி:** சட்டமுன்வடிவிலே பேச வேண்டுமே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைத் தலைவர் உத்தரவு போட்டிருக்கிறார் என்று சொன்னீர்களே, இப்போது ஏன் உத்தரவை மீறிப் பேசுகிறீர்கள்?

**திரு. இரா. தாமரைக்கனி:** இந்த மசோதாவிலே பேசுகிறேன். அவரை அடித்துவிட்டார்கள். அதேமாதிரி, கோயம்புத்தூரிலே பால்வளச் சங்கத் தேர்தல் நடைபெற்றபோது எதிர்க் கட்சித் தலைவரும், மத்திய முன்னாள் அமைச்சர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்களும் ஒரு குற்றச்சாட்டு கூறினார்கள். குறைபாடுகள் தமிழ்நாடு மட்டத்திலே நடந்திருக்கிறது என்று குற்றச்சாட்டு சொன்னார்கள். உடனே, தோழமைக் கட்சி என்று சொல்லி, அவரை ** கோயம்புத்தூர் பால் வள...... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) ** என்ற வார்த்தையை நானே நீக்குகிறேன். நீங்கள் கவலைப்படாதீர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதிலே இந்த அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், கோவையிலே, பால்வளத் துறையிலே நடைபெற்ற தேர்தலில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் அவர்களை, நாங்கள் ஏதோ அவரை ** தேர்தல் நடத்தியதாக உறுப்பினர் தெரிவித்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தையை நான் எடுத்துவிட்டேன். பின்பு, நீங்கள் ஏன் அதைப் பயன்படுத்துகிறீர்கள்? அமைச்சர் சொன்ன வார்த்தையும் அவைக் குறிப்பில் ஏறாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவர் சொல்ல வந்தது, இந்தத் தேர்தல் முறையாக நடக்கவில்லை என்று. உண்மையில், தமிழ் மாநில காங்கிரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒருங்கிணைந்துதான் அங்கே தலைவர் தேர்தல் நடந்தது. தலைவர் பதவி தமிழ் மாநில காங்கிரசுக்கும், துணைத் தலைவர் பதவி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கொடுக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தான் பேசி முடித்து விட்டீர்களே, அப்புறம் என்ன?

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக முன்னாள் மத்திய அமைச்சர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் முதற்கொண்டு, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் முதற்கொண்டு, கொடுத்த அறிக்கை பத்திரிகையிலே வந்தது எல்லோருக்குமே தெரியும். இங்கே வேண்டுமானால், அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிக்கொள்ளலாம்.

இன்னொன்று, விருதுநகர் மாவட்டத்தில் முதலில் 125 கூட்டுறவுப் பால் சங்கங்கள் இருந்தன. தேர்தல் தேதியும் அறிவித்துவிட்டார்கள். ஆனால், தேர்தலில் தோற்றுப்போய் விடுவோம் என்று சொல்லி, தேர்தலை மூன்று மாதங்கள் தள்ளிப்போட்டு, போலியாக 125 கூட்டுறவுப் பால் சங்கங்களை ஆரம்பித்தார்கள். இது முறைகேடு கிடையாதா? வேண்டுமானால் Nomination-ல் போட்டுக்கொள்ளுங்கள். தேர்தல் நடத்துகிறோம் என்று சொல்லி,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முறைகேடு கிடையாதா என்று நீங்கள் சொன்னால், ஏதோ.....

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆதாரம் இருக்கிறது. நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அதற்கு நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

[ 1998 நவம்பர் 28

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமரைக்கனி, நான் மணி அடித்தால் நீங்கள் என்னைப் பார்க்க வேண்டும். இந்தமாதிரி வேலையெல்லாம் பண்ணிக் கொண்டிருக்காதீர்கள். நான் மணி அடித்தால் என்னைப் பார்க்க வேண்டும்; பேச்சை நிறுத்த வேண்டும். முறைகேடு என்று நீங்கள் சொன்னால், அதற்கான ஆதாரத்தை என்னுடைய அறையில் கொடுத்துவிட்டு, பேச வேண்டும். ஏன் என்னிடம் கொண்டுவந்து கொடுக்கவில்லை? என்னிடம் கொடுத்துவிட்டுத்தான் பேச வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆதாரம் இருக்கிறது. நான் சொன்னதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். தி.மு.க. ஜெயிக்க வேண்டுமென்று சொல்லி......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் உட்காருங்கள். நான் எழுந்து நிற்கிறேன், நீங்கள் உட்காருங்கள். நான் நிற்கும்போது, நீங்கள் உட்கார வேண்டும். நீங்கள் வேகமாகப் பேசாதீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** என்ன தலைவரே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன தலைவரே என்றால்? நான் நல்ல தலைவர் என்று என் அறைக்குள்ளே இப்போதுதான் சொன்னீர்கள்.

*(திரு. இரா. தாமரைக்கனி தொடர்ந்து நின்றுகொண்டு பேசிக் கொண்டிருந்தார்.)*

கொஞ்சம் இருங்கள். இது முதல் தடவை அல்ல: நீங்கள் குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால், என் அறையிலே வந்து இந்த மாதிரி குற்றச்சாட்டு இருக்கிறது என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டு, பேச வேண்டும். சும்மா குரலை எழுப்பி 'என்னிடம் ஆதாரம் இருக்கிறது, நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன்' என்று சொல்வது முறையல்ல. மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் நிரூபிக்கிறேன் என்று சொல்கிறேன். அறையில் வந்து கேட்டால் நீங்கள் பேசுவதற்கு அனுமதிப்பீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்ன குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** நீங்களும் கட்சி சார்பிலேதான் எம்.எல்.ஏ.வாகி, ஆளும் கட்சி சபாநாயகராகி இருக்கிறீர்கள்.



1998 நவம்பர் 28 ]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரவர்களே, தலைவரை, ஆளும் கட்சி சபாநாயகர் என்று எப்படிச் சொல்லலாம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவருடைய தரத்தைக் காண்பிக்கிறது. அதுபற்றிக் கவலை இல்லை. அவர் சொன்ன குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரவர்களே,...

*(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று கூட்டத்தின் கடைசி நாள். நடவடிக்கை எடுப்பதற்காக வேண்டுமென்றே வம்பை விலைக்கு வாங்குகிறீர்கள். (குறுக்கீடு) நான்தான் சொன்னேன் அல்லவா, உங்கள் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படவில்லை என்று, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஏன் இப்படிக் கோபப்படுகிறீர்கள்? B.P. இருக்கிறது, சர்க்கரை வியாதி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானா கோபப்படுகிறேன்? B.P., சர்க்கரை வியாதி யாருக்கு இருக்கிறது? (குறுக்கீடு) முதலில் டாக்டரைப் போய்ப் பாருங்கள். "என்னுடைய கட்சி உறுப்பினர்கள் இரண்டு பேர் போய் விட்டார்கள், நான் மட்டும் உட்கார்ந்து இருக்கிறேன்" என்று இப்படிப் பேசக்கூடாது; வம்பை விலை கொடுத்து வாங்காதீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சபை உறுப்பினரை மரியாதையாகப் பேசுங்கள். வா, போ என்று பேசாதீர்கள். இது என்ன சபை மரபு?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வா, போ என்று உங்களைப் பேசவில்லை. நான் உட்காருங்கள் என்றுதான் சொன்னேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** என்ன தலைவரே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், 'என்ன தலைவரே' என்று என்னைக் கூப்பிடலாமா? மாண்புமிகு தலைவர் என்று கூப்பிட வேண்டும். மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் விதியின்படி தேர்தல் நடக்கின்ற நாளை முன்னிட்டு, அதாவது ஒரு மாதத்திற்கு முன்பாக ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பிப்பதற்கு விதி இருக்கிறது. அந்த விதிப்படி தேர்ந்து

எடுக்கப்பட்டதே தவிர, எந்த முறைகேடும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்லப்போனால், பால் வளத் துறைத் தேர்தலில் த.மா.கா. வந்து இருக்கிறது. ம.தி.மு.க. வந்திருக்கிறது, அ.இ.அ.தி.மு.க. வெற்றி பெற்றிருக்கிறது, C.P.I. வெற்றி பெற்றிருக்கிறது, புதிய தமிழகம் வெற்றி பெற்றிருக்கிறது. ஆகவே, ஜனநாயக முறைப்படிதான் தேர்தல் நடைபெற்றிருக்கிறது என்பதை இந்தச் சபையிலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் ஏதாவது சொல்கிறீர்களா? சட்டமுன்வடிவை முன்மொழிந்த அமைச்சரைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தனி அலுவலர் நியமனம் தொடர்பாக ஒரேயொரு செய்தியை முன்வைக்க விரும்புகிறேன். 1976 ஆம் ஆண்டு வாக்கில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, குடியரசுத் தலைவர் ஆட்சியிருந்த காலத்திலிருந்து தனி அலுவலர் நியமனம் செய்யப்பட்டு வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு அந்த நியமனம் செய்யப்பட்டு, அது பிறகு பல்வேறு காரணங்களால் தொடர்ந்து வருகிறது, இப்போதும் அது தொடர்கிறது. இது தொடர்பாக, ஏற்கெனவே இடைக்காலத்தில் ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அவசரச் சட்டத்திற்கு மாற்றாகத்தான் இந்தச் சட்டமுன்வடிவே வைக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஏறத்தாழ 25 ஆயிரத்திற்கு மேற்பட்ட நிறுவனங்களில் முறையாகத் தேர்தல் நடந்து, பிறகு அந்தப் பொறுப்புகள் அந்தந்தக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. இன்னும் நடைபெற வேண்டிய இடங்களிலே சில சட்டச் சிக்கல்களும், சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளும் ஏற்பட்டதாலும், அதேநேரத்தில் சில இடங்களில் தேர்தலில் தடையாணை பெற்று, வேறு சிலர் நீதிமன்றத்தை நாடியிருப்பதாலும்தான் தனி அலுவலர் பணி நியமனம் நீடிக்கிறது. அந்தவகையில் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானம் பேரவையின்..........

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசும்வரை உட்கார்ந்து விட்டு, பேச்சை முடித்த பிறகு கையைத் தூக்கினால் எப்படி? திரு. கணேசன், நீங்கள் எல்லாம் முறையாக நடந்துகொள்ள வேண்டாமா?



**திரு. ஐ. கணேசன்:** கையைத் தூக்கிக் கொண்டேதான் இருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பக்கத்திலிருந்தவர் உங்களை மறைத்தாரா? சரி சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலைப் பொறுத்தவரை, திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு இந்தத் தேர்தல் ஒரு களங்கம் என்பதை நான் எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகச் சொல்லிக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்திலே, மத்தியக் கூட்டுறவு வங்கித் தேர்தல் நடந்தபோது, மாற்றுக் கட்சிக்காரர்களை உள்ளே விடாமல் அடித்து, சித்திரவதைப்படுத்தி, துரத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் யார் என்று கேட்கிறார். உங்களுக்கு மிகவும் வேண்டிய திரு. சுந்தரம் அவர்களின் 3 பற்களை அடித்து உடைத்து விட்டார்கள். அதுகுறித்துக் கேட்டபோது, 2 பல் கட்டிய பல்; ஒரு பல் சொந்தப் பல் என்றும் வசனம் பேசினார்கள். இவ்வளவு கேவலமாக இந்தத் தேர்தல் நடந்தது என்பதை மட்டும் அதற்கு உதாரணமாகக் கூறி, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக இந்தக் கூட்டுறவுத் தேர்தல்கள் நடத்தியதை நான் எதிர்த்து அமைகிறேன்.

முற்பகல் 10.15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1998 நவம்பர் 28

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



1998 நவம்பர் 28]

## 6. அறிவிப்பு

**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குமுறைப் படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள், தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

—தொடர்ச்சி

**(ஏ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 64/1998) மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் move செய்த பிறகு, நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 64/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

@27-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடலுழைப்புத் தொழிலாளர்கள் சட்டத்தைத் திருத்துவதற்கான இந்தச் சட்டமுன்வடிவை நான் பொதுவாக வரவேற்கிறேன். ஆனால், குறிப்பாக சில விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. 52 பிரிவுகளைச் சார்ந்த தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற விதத்திலே இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவர மாநில அரசு முடிவெடுத்தது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய விஷயமாக இருக்கிறது. ஒரு நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட இச்சட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டமுன்வடிவு சட்டமாவதற்கு முன்னால் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். குறிப்பாக, இந்தச் சட்டத்தினுடைய மூன்றாவது ஷரத்தின் உட்பிரிவு 'ஏ' பகுதியிலே, "ஊதியங்களில் நூற்றுக்கு மூன்று விழுக்காட்டிற்கு மேற்படாமல், அரசினால் அறிவிக்கையின் மூலமாக அறுதியிடப்படக்கூடிய விதத்திலான தொகையொன்றினை ஒவ்வொரு திங்களும் செலுத்துவதற்கு கடப்பாடுடையவராவர்" என்று வருகிறது. அதாவது, 'தொழிலாளியினுடைய ஊதியத்தினை அளவுகோலாகக் கொண்டு மூன்று சதவிகிதத்திற்கு மிகாமல் வைக்கலாம்' என்று வருகிறது. ஆனால், ஆரம்பத்திலே கொண்டுவரப்பட்ட விஷயம் இப்படியல்ல. எந்தத் தொழிலாளி வேலை செய்கிறாரோ, அவர் சார்ந்த நிறுவனத்தின் ஒட்டுமொத்த Turn-over-ல் கணக்கிட்டு வைக்கப்பட வேண்டும் என்பதுதான் அரசாங்கம்கூட ஒப்புக்கொண்டிருக்கிற விஷயம். ஆனால், அரசு ஒப்புக்கொண்டு இடையில் நழுவி, இத்தகைய முறையிலே ஒரு மாற்றத்தைச் செய்தது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. எனவே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்க விரும்புவது, அந்தத் தொழிலாளி வேலை செய்கிற அந்த நிறுவனத்தின் Turn-over-ல்தான் இந்தப் Premium கணக்கிட்டு வைக்கப்பட வேண்டுமே தவிர, தொழிலாளியினுடைய ஊதியத்தினை அளவாக வைத்து அதைப் பிடிக்கக்கூடாது, அதற்கு அளவாக வைக்க வேண்டியது Turn-over தான் என்பதை நான் இங்கே வலியுறுத்துகிறேன். ஏனென்று சொன்னால், இப்போதுகூட நாம் பார்க்கிறோம், சொத்து வரி கட்டுகிறபோது, நூலக வரி கட்டுகிறார்கள். ஆனால் நூலக வரி கட்டுகிற எல்லோரும் நூலகத்திற்குச் செல்வதில்லை. நான் நூலகத்திற்குச் செல்லவில்லை; எனவே எனக்கு நூலக வரியைத் திருப்பிக் கொடு என்று அதைத் திருப்பிக் கேட்க முடியாது. அவர் நூலகத்திற்குப் போகிறாரோ, இல்லையோ அவர் நூலக வரியைச் செலுத்துகிறார்; கல்வி வரியைச் செலுத்துகிறார்.



முற்பகல் 10-20

அதேபோல ஒரு நிறுவனத்தில் un-organised பிரிவைச் சார்ந்த ஒரு தொழிலாளி வேலை செய்கிறார் என்றால் அந்தத் தொழிலாளியினுடைய ஒட்டுமொத்த நலனைக் காப்பாற்றுவதற்கு அந்த நிறுவனத்தின் ஒட்டுமொத்த turn-over-லிருந்து தான் Premium கணக்கிடப்பட வேண்டுமே தவிர தொழிலாளி பெறுகின்ற ஊதியத்திலிருந்து கணக்கிடப் படக் கூடாது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்று சொன்னால் தமிழகத்திலும் சரி, இந்தியாவிலும் சரி, உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களில் 95 சதமானவர்கள் இந்த un-organised பிரிவிலேதான் இருக்கிறார்கள், அமைப்பு சாராத் தொழிலாளிகளாகத்தான் இருக் கிறார்கள். அவர்களின் நலன்களைக் காப்பாற்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வரும்போது அந்தச் சட்டத்தை மிக நுட்பமாகவும், பழுது இல்லாமலும் நிறைவேற்று வதற்கு நாம் பொறுப்பாக்கப்பட்டிருக்கிறோம். எனவே, அந்தச் சட்டத்தில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்று மாநில அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பார்த்தால் அதே சட்டத்தில் 'பி' பிரிவில் இன்னொரு விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. மோட்டார் துறையிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு மட்டும் அந்த நிறுவனம் செலுத்துகின்ற வரியில் ஒரு பகுதி அளவாகச் சொல்லப்படுகிறது. அதாவது நிறுவனம் செலுத்துகிற வரியில் ஒரு சதம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் 'ஏ' பிரிவில் தொழிலாளி பெறுகிற ஊதியத்தைக் கணக்கிடுகிறவர்கள் அதே ஷரத்தில் 'பி' பிரிவில் என்ன சொல்கிறார்கள் என்றால் போக்குவரத்துத் துறையிலே பணியாற்றக்கூடிய தொழிலாளியின் ஊதியத்தை அல்ல, நிறுவனதாரர் செலுத்துகிற வரியினுடைய அளவைத்தான் கணக்கெடுத்துக்கொண்டு அதில் 1 சதவிகிதம் என்று சொல்லப்படுகிறது. அங்கே நிறுவனம் செலுத்துகிற வரியில் ஒரு பகுதியை அளவாக எடுத்துக் கொண்டவர்கள், அதற்கு முன்புள்ள பிரிவில் தொழிலாளியின் ஊதியத்தை அளவாக எடுத்துக் கொண்டிருப்பது ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாகத் தோன்றுகிறது. 'பி' பிரிவில் செய்ததைப் போலவே 'ஏ' பிரிவிலும் அந்த மாற்றத்தைச் செய்ய வேண்டும். மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். இதை எப்படி மாநில அரசு செய்தது என்றே எனக்குப் புரியவில்லை.

[திரு. கே. சுப்பராயன்] [1998 நவம்பர் 28

நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்க விரும்புவது, இந்த 52 தொழில் பிரிவுகளில் தெருவிலே குப்பை பொறுக்குகிறார்களே, அந்தக் குப்பை பொறுக்குகிற தொழிலாளியும் உள்ளடக்கப்படுகிறான். குப்பை பொறுக்குகிற அந்தத் தொழிலாளி எப்படி மாதம் 20 ரூபாய் செலுத்த முடியும் என்பதை ஏன் இந்த அரசாங்கம் கவனிக்கவில்லை என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்த 52 பிரிவுகளில் seasonal work இருக்கிறது. மூன்று மாதம், நான்கு மாதம் வேலை செய்யக்கூடிய அந்தத் தொழிலாளி மாதா மாதம் 20 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று ஒரு நிலையை மேற்கொண்டிருப்பது பொருத்தமல்ல. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக, இந்தச் சட்டமுன்வடிவைப் பிரேரேபித்ததற்காக நான் மனம் திறந்து பாராட்டுகிறேன். ஆனால் அதேநேரத்தில் இது மூக்கும் முழியுமற்றதாக ஆகிவிடக் கூடாது. இந்தச் சட்டமுன்வடிவு முழுமைபெற வேண்டுமானால் தொழிலாளி மாதம் 20 ரூபாய் செலுத்த வேண்டுமென்பது கட்டாயம் மாற்றப்பட வேண்டும். இதில் 10 ரூபாய் செலுத்தினால் போதும் என்பதற்குரிய திருத்தத்தை அரசாங்கமே கொண்டுவர வேண்டும். அப்போதுதான் இது முழுமையடையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் அரசாங்கத்தினுடைய commitment என்ன? அரசாங்கத்திற்கும் இந்தத் திட்டத்திற்கும் என்ன commitment என்றால், ஒன்றுமேயில்லை. பங்களிப்பு இல்லை. ஆனால் கேரளாவை எடுத்துக் கொண்டோமேயானால் அமைப்பு சாராத் தொழிலாளியைக் காப்பாற்றுவதற்கு அவர்கள் வருடத்திற்கு 100 கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள். ஆனால் இங்கே நான் குறிப்பிட விரும்புவது தமிழகத்திலே நம்முடைய commitment என்பது ஒன்றும் இல்லை.

ஒன்றை நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். 10 ரூபாய் தொழிலாளியிடமிருந்து பிடித்தம் செய்யலாம். அதே அளவு அரசும் பங்களிப்பைச் செலுத்த வேண்டும். நிறுவனமும் பங்களிப்பைச் செலுத்த வேண்டும். அரசு பங்களிப்பைச் செலுத்தாமல் இருப்பது நல்லதல்ல. அரசு பங்களிப்பைச் செலுத்தும் என்று முன்கூட்டியே தெரிவித்துவிட்டு பங்களிப்பைச் செலுத்துவதிலிருந்து இடையிலே பறிக்கப்பட்டிருப்பது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. இவற்றைக் கட்டாயம் செய்ய வேண்டும். அரசாங்கம் தன் பங்களிப்பைச் செலுத்த வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேமாதிரி இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் இந்த 52 பிரிவுகளில் ஒன்று விடப்பட்டிருக்கிறது. அதுதான் வீட்டு வேலை செய்பவர்கள், Domestic Workers. வீட்டில் வேலை செய்கிற தொழிலாளிகள் இந்தச் சட்டத்திலே பாதுகாக்கப்படவில்லை.



1998 நவம்பர் 28] [திரு. கே. சுப்பராயன்]

இலட்சக்கணக்கான தொழிலாளிகள் வீட்டு வேலை செய்யும் தொழிலாளிகளாக இருக்கிறார்கள். இதில் பெரும்பகுதி பெண் தொழிலாளிகள்தான் இருக்கிறார்கள். எனவே அவர்களின் நலன்களைக் காப்பாற்றுவதற்கு இந்த உடலுழைப்புச் சட்டத்தில் வழிவகை செய்யப்படவில்லை. எனவே இந்த 52 பிரிவுகளோடு வீட்டு வேலை செய்கிற தொழிலாளர்களின் நலனையும் காப்பாற்றுவதற்கு அவர்களும் இந்த உடலுழைப்புச் சட்டத்தில் இணைக்கப்பட பொருத்தமான திருத்தத்தைச் செய்ய வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறைவாக ஒரே ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு முடித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது இந்தச் சட்டத்தை முன்வைப்பதன் மூலம், தமிழ்நாட்டில் இதை நடைமுறையில் அமலாக்குவதற்குரிய உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால் நமக்கு அனுபவம் உண்டு. சட்டங்களுக்குப் பஞ்சமே இல்லை. பஞ்சம் என்ன என்றால் சட்டத்தை நிறைவேற்றுவதில்தான் பஞ்சமே இருக்கிறது. சட்டங்கள் ஏராளமாக நிறைவேற்றப்பட்டுவிட்டன. ஆனால், அந்தச் சட்டங்கள் யாருக்காக நிறைவேற்றப்பட்டனவோ அவற்றை அந்தத் தொழிலாளி அனுபவிக்க முடியவில்லை என்பதை உணர்ந்து, அவற்றை அவர்கள் அனுபவிக்க வைப்பதற்குரிய உத்திகளை உருவாக்க அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. எனவே, மேற்சொன்ன நிலைமை இந்தச் சட்டத்திற்கும் வந்துவிடக்கூடாது. சட்டங்களை இயற்றிவிட்டு, அந்தச் சட்டங்கள் அமலாக்கப்படாமலேயே இருந்துவிடுவதைக் கண்டுகொள்ளாமல் இருந்துவிடுகின்ற நிலைமை ஏற்படுமேயானால், அது பொருளற்றதாகவும், பொறுப்பற்றதாகவும் ஆகிவிடும் என்பதைத் தெரிவித்து, இந்தச் சட்டத்தை நடைமுறையில் நிறைவேற்றுவதற்குரிய உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

அடுத்து, நிறுவனங்களிடமிருந்து Premium பெறுகின்றபோது, Turn-over-ஐ அடிப்படையாக வைத்துக் கணக்கிட வேண்டும்.

இன்னொன்று, தொழிலாளியிடமிருந்து 20 ரூபாய் வாங்கக்கூடாது. 10 ரூபாய்தான் வசூலிக்க வேண்டும். மீதம் 10 ரூபாயை அரசாங்கம் செலுத்த வேண்டும் என்பதையும் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

[ 1998 நவம்பர் 28

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடலுழைப்புத் தொழிலாளர்களுடைய நலன் காக்கின்ற சட்டம் கொண்டு வந்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிற அதேநேரத்தில், அதிலே ஒருசில திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்கிற வகையிலே என்னுடைய கருத்துக்களை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்திலே முழுமையாக வேலையிலே ஈடுபடாத தொழிலாளர்கள் ஒருசாரார் வருகின்றார்கள். குறிப்பாக, செங்கல் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் வருகின்றார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சங்கமும் கிடையாது. மூன்று அல்லது நான்கு மாதங்கள் அவர்களுக்கு வேலை என்பதே கிடையாது. மழைக் காலத்தில் வேலையே கிடையாது. அப்படி மழைக்காலம் வருகின்றபோது, மாதந்தோறும் 20 ரூபாய் தர வேண்டுமென்று சொல்வது அதிகம். இப்படிப்பட்ட தொழிலாளர்கள் பல ஸ்தாபனங்களில், Factoryகளில் வேலை செய்கின்றார்கள். அவர்களை part-time தொழிலாளர்கள் என்று கூறி, அவர்களுக்கு இப்படிப்பட்ட சட்டங்களின் பலன் கிடைக்காத வகையில் ஆக்கிவிடுகின்றார்கள். எனவே, 20 ரூபாய் என்பது அதிகம். அதை 10 ரூபாய் என்ற அடிப்படையிலே குறைத்துக்கொள்ள வேண்டும். அவர்களிடம் வசூல் செய்வது 10 ரூபாயாக இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன

அதேபோன்று, நிர்வாகத்தினுடைய பங்கு எந்த அளவு இதிலே இருக்கிறது என்பதும் தெளிவாக இங்கே குறிப்பிடப்படவில்லை. அதேபோன்று அரசாங்கத்தினுடைய பங்கு என்ன என்பது பற்றியும் இதிலே சொல்லப்பட வேண்டும். அரசாங்கத்தினுடைய ஒரு பங்கு இதிலே இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோன்று, இப்படிப்பட்டச் சட்டங்கள் எல்லாம் இயற்றப் படுகின்றபோது அவை சரிவர அமலாக்கப்படுகின்றனவா என்பதைக் கண்டறிவதற்கு ஒரு குழுவை அமைத்து, அதன்மூலம் அவற்றையெல்லாம் கண்காணிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தை வரவேற்று, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்



1998 நவம்பர் 28 ]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் வர்க்கத்தினுடைய வாழ்க்கையிலே இன்றையதினம் மகிழ்ச்சிக்குரிய ஒரு நன்னாள். ஸ்தாபன ரீதியற்ற முறையில் 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இப்பொழுது இருந்து கொண்டிருக்கிறார்கள். சாலையோரத்தில் இருக்கின்றவர்கள், மண்பாண்டங்கள் தயாரிப்பவர்கள், முடி திருத்துபவர்கள், கயறு திரிப்பவர்கள், பந்தல் போடுகிறவர்கள், தையல் தொழிலாளர்கள், சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா ஓட்டுகிறவர்கள், சுமை தூக்குகின்ற தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், இவர்களெல்லாம் தொழிலாளி வர்க்கத்தினுடைய கோவிலின் மூல விக்ரகங்களாக இருக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக, தொழிலாளர் நலச் சட்டங்கள், அவை E.S.I.ஆக இருந்தாலும், Provident Fund ஆக இருந்தாலும், Gratuity ஆக இருந்தாலும், இந்தச் சட்டங்களின் பலனை அவர்கள் அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். காரணம், அந்தச் சட்டங்கள் அவர்களுக்கு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பேசிய இரண்டு உறுப்பினர்களும் இந்தச் சட்டத்தை வரவேற்றுத்தான் பேசியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன திருத்தத்திற்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** பேரவைத் தலைவரவர்கள் மன்னிக்க வேண்டும். இரண்டு நிமிடங்களில் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய திருத்தங்களுக்கு என்னுடைய விளக்கத்தைச் சொல்லிவிட முடியும். ஆனாலும் எங்களுடைய துறையைப் பொறுத்தமட்டில், தமிழக மக்களைப் பொறுத்தமட்டில், தொழிலாளி வர்க்கத்தைப் பொறுத்தமட்டில், இந்தச் சட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, இந்தியத் துணைக் கண்டத்திலே பாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலராக இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இதனைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதன்மூலம் உறுப்பினர்களுக்கும், மக்களுக்கும் தெளிவாகத் தெரிய வேண்டுமென்பதற்காக அருள்கூர்ந்து ஐந்து மணித்துளிகள், இந்தச் சட்டத் திருத்தத்தை விளக்குவதற்கு, தெரியாது என்ற காரணத்தினால் அல்ல, இன்னும் தெளிவாக அதை நினைவுபடுத்த வேண்டுமென்பதால், அனுமதி அளிக்க வேண்டுமென்று பணிவன்போடு நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

25 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலையில், சட்டத்தினுடைய பலன்கள், நலன்கள் நமக்குக் கிடைக்கவில்லையே என்று வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற அவர்கள் வாழ்க்கையிலே இன்றுமுதல் ஒளியேற்றி வைக்கப்படுகிறது. அவர்களின் கண்ணீர் துடைக்கப்படுகிறது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று சொன்னாரே, அந்த அண்ணாவின் வாக்கியம், அண்ணாவின் மறுபதிப்பாக இருக்கக்கூடிய கலைஞர் அவர்களால் நிறைவேற்றப்படுகிறது, இந்த அரசால் நிறைவேற்றப்படுகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே சட்டசபையில்தான் நிதிநிலை அறிக்கையின்போது, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து, விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து ஆராய்ந்துவர மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டன. மூன்று குழுக்களும் கேரளாவிற்கும் மற்றும் பல்வேறு இடங்களுக்கும் சென்று தொழிற்சங்கத் தலைவர்களை, நிர்வாகிகளை மற்றும் பலரைச் சந்தித்து அறிக்கை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையை நடைமுறைப்படுத்துகின்ற விதத்திலே சில சட்டத் திருத்தங்கள் செய்வது இங்கே மிகவும் அவசியம். அந்த அடிப்படையிலேதான்—கட்டடத் தொழிலாளர்களுக்காக ஒரு வாரியம் இருக்கிறது—இப்போது முதன்முறையாக ஸ்தாபன ரீதியற்ற 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட, சட்டரீதியான பாதுகாப்பில்லாத தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற விதத்திலே ஒரு வாரியம் தேவைப்படுகிறது. இந்த வாரியம் அவர்களுக்கு பேறுகால உதவித் தொகை, நோய்க்கால உதவிக் காப்பீடு, ஓய்வூதியம், இன்னும் சட்டத்தில் என்ன என்ன அவர்களுக்கு நலன் தருவதாக இருக்கின்றதோ அவற்றையெல்லாம் அமல் நடத்த இருக்கிறது.

இதிலே மிக முக்கியமான ஒன்று, 43 தொழில்கள்—நம்முடைய உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியதைப்போல, ஸ்தாபன ரீதியற்ற தொழில்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே இங்கே எல்லோரும் வரவேற்றார்கள். ஆனால் சட்டச் சிக்கல் பற்றித்தான் இங்கே தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்கிறார்கள். ஏற்கெனவே Manual Labour Act என்று இருக்கிறது. உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்காக இந்தச் சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பொறுத்தமட்டில், manual worker என்றால் யார், உடலுழைப்பு செய்பவர் என்றால் யார் என்பதற்கு ஒரு விளக்கம் இருக்கிறது. கட்டடத் தொழிலாளர்கள் அதில் வருகிறார்கள். ஆனால் இப்போது சலவைத் தொழிலாளி என்று சொல்கிறோமே, முடி





திருத்துகிற தொழிலாளி என்று சொல்கிறோமே, பந்தல் போடுகிற தொழிலாளி என்று சொல்கிறோமே அவர்கள் manual worker என்ற அந்த இலக்கணத்திற்குள், இந்தச் சட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டால்தான் நல்லது. ஆகையினால் அந்த 43 தொழில்களைச் செய்பவர்களை manual workers என்ற அந்த இலக்கணத்திற்குள்ளே கொண்டு வருகிறோம். ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமானால், to enlarge the scope of the definition, அதற்குதான் ஒரு திருத்தம். அதை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

இரண்டாவது திருத்தம், வாரியம் அமைக்கிறோம். வாரியத்திற்கு ஒரு தொழிலாளர் நல நிதி வேண்டும். அந்த நல நிதி இருந்தால்தான் தொழிலாளர் நலச் சட்டங்களை அமல் நடத்த முடியும். அதுபோல கட்டடத் தொழிலாளர்களுக்கு ஒரு வாரியம் இருக்கிறது. நல நிதியாக ஏறத்தாழ ஐந்து இலட்சம் ரூபாய் இருக்கிறது. ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சந்தாவாக 25 ரூபாய் செலுத்தி, பதிவு செய்து இருக்கிறார்கள். இப்போது அவர்களுக்குப் பல நலத் திட்டங்களை இந்த அரசு செய்து இருக்கிறது. கட்டடத் தொழிலாளி விபத்தில் மாண்டால் 50,000 ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்போது ஓர் இலட்சம் ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதுபோல கர்ப்பவதிகளுக்குப் பிரசவத்திற்கு 1,000 ரூபாய், பிள்ளைகளுக்கு படிப்புச் செலவிற்காக, பிளஸ்-2 ஆக இருந்தால் அவர்களுக்கு 1,000 ரூபாய், 10 ஆம் வகுப்பாக இருந்தால் 750 ரூபாய், அவர்களுடைய ஈமச் சடங்குகளுக்கு 500 ரூபாய் என்று இந்த நல நிதியின் மூலமாகத்தான் செய்ய முடிகிறது. அதே அடிப்படையில்தான் இதற்கும் ஒரு நல நிதி வேண்டும். நல நிதி வேண்டுமானால், உறுப்பினர்கள் சொல்லியதுபோல, அரசின் பங்கும் இருக்க வேண்டும்; தொழிலாளர்களின் பங்கும் இருக்க வேண்டும், நிர்வாகத்தினுடைய பங்கும் இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலே ஏற்கெனவே இருக்கக்கூடிய Manual Labour Act-இல் இந்த வாரியம் அமைப்பதற்கு தொழிலாளர் நல நிதி பற்றி இதிலே சேர்க்கப்பட வேண்டும். அதிலே contribution தொகை எவ்வளவு என்பது சேர்க்கப்பட வேண்டும். அதற்குத்தான் இந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றன. இப்போது உறுப்பினர்கள் சொல்கின்ற கருத்து contribution இல்லை என்பது ஒன்று.

முற்பகல் 10-35

அடுத்தது, 20 ரூபாய் மாதம் தொழிலாளி கொடுக்க முடியுமா என்ற கேள்வியை திரு. சுப்பராயன் அவர்களும், திரு. மணி அவர்களும்

[திரு. அ. இரகுமான்கான்] [1998 நவம்பர் 28

கேட்டிருக்கிறார்கள். எனக்கு விந்தையாக இருக்கிறது. Manual Labour Advisory Committee என்ற ஒரு ஆலோசனைக் குழு இருக்கிறது. அந்த ஆலோசனைக் குழுவிலே திரு. சுப்பராயனுடைய கட்சியினுடைய உறுப்பினர் இருக்கிறார், திரு. மணியினுடைய கட்சியினுடைய உறுப்பினர் இருக்கிறார். எல்லாத் தொழிற்சங்கங்களுடைய தலைவர்களும், பிரதிநிதிகளும் அந்தக் குழுவிலே இருக்கிறார்கள். இதை நிர்ணயித்தது அரசாங்கமா, நீங்களா? நிர்ணயித்தது நீங்கள்தான். Advisory Committee-யிலே நிர்ணயித்துவிட்டு, சட்டசபைக்குள்ளே வந்து.....

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Advisory Committee-இல் தொழிற்சங்கத் தரப்பில் சொல்லப்பட்ட விஷயங்கள் முழுவதையும் ஏற்றுக்கொள்ள அமைச்சர் தயாராக இருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன், நீங்கள் பிரச்சினையை திசை திருப்பக் கூடாது. 20 ரூபாய் என்பது நீங்கள் ஏற்றுக்கொண்ட ஒன்று.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திசை திருப்புவதல்ல. நான் கேட்க விரும்புவது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 20 ரூபாய் என்பது நீங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்ட ஒன்று என்கிறார். அது உண்டா, இல்லையா என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். எனக்காக நீங்களே வாதாடியதற்காக நன்றி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 20 ரூபாய் என்பதை ஏற்றுக்கொண்டார். இப்போது இங்கு கேள்வி கேட்கிறார். குழுவில் சொல்லியிருப்பதையெல்லாம் ஒத்துக்கொள்வது, ஒத்துக்கொள்ளாதது என்பது வேறு விஷயம். ஆனால், நீங்கள் சொல்லியது அது, அவ்வளவுதான்.

அடுத்து, குறிப்பாக, turnover விஷயமாக, wages விஷயமாகச் சொன்னார். Contribution—பங்களிப்பு எப்படி என்று கேட்டார். நான் சொல்கின்றேன். இதை நீண்டகாலமாக நாங்கள் சிந்தித்தோம். Advisory Committee-லே நீங்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருந்தாலும் சரி, சொல்லப்போவதானாலும் சரி, அதைப் பற்றி சிந்திக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. மூட்டை தூக்குபவர்களாக இருந்தாலும்,



1998 நவம்பர் 28] [திரு. அ. இரகுமான்கான்]

ரிக்ஷாக்காரர்களாக இருந்தாலும், சமையல்காரர்களாக இருந்தாலும் இவர்களுக்கு Employer கிடையாது. மூட்டை தூக்குபவர் அவராகத் தூக்கிச் சம்பாதிக்கிறார். ரிக்ஷா இழுப்பவர் அவராகச் சம்பாதிக்கிறார், Self-employed. எனவே, அவருக்கு ஒரு பங்கீடு கொடுப்பதற்கு முதலாளி இல்லை, Self-employed என்று இருக்கின்ற காரணத்தினாலே. இதில் என்ன turnover, என்ன சம்பளம் என்று பார்ப்பது? இரண்டுமே கஷ்டமான விஷயங்கள்தான். எனவே, அவருக்குச் சம்பளமும் வராது, turnover-ம் வராது. சிலருக்கு turnover வரும். பொற்கொல்லருக்கு turnover வரும். ஆனால், பெரும்பாலான விஷயங்களில் எல்லாம், இன்னும் சொல்லப்போனால், சில விஷயங்களிலே wages வராது. இந்த இரண்டிலே எது சாத்தியம் என்று ஆராய்ந்துதான் அதிகாரிகள் மூலமாக, சட்ட வல்லுநர்கள் மூலமாக ஆராய்ந்து, இதுதான் சரியாக இருக்குமென்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது.

அடுத்து, இன்னொன்றை இங்கே குறிப்பிட்டார்கள். அரசு ஏன் contribution-ஐக் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். அவருக்குச் சொல்கிறேன். Contribution-ஐ அரசாங்கம் கொடுக்காமல் இல்லை. உதாரணமாக, பல நலத் திட்டங்களை நிறைவேற்றுகிறபோது, அரசு மானியம் கொடுக்கத் தயாராக இருக்கிறது. உதாரணமாக, கட்டடத் தொழிலாளர்கள் வாரியம் இருக்கிறது. அதிலே அரசு contribution கொடுக்கவில்லை. கேரளாவிலே மோட்டார் தொழிலாளர்கள் நல நிதிக்காக Board இருக்கிறது. கேரள அரசாங்கம் அதற்கு contribution கொடுப்பதாக நான் கேள்விப்படவில்லை. ஆகையினால், contribution இல்லையென்று சொன்னாலும், அரசு grants தருகிறது. அந்த grants மூலமாக தொழிலாளர் நலத் திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்ற முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்வார் என்று நான் நம்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற விஷயத்திலே ஒரே ஒரு விளக்கத்தைப் பெறுவதற்காக நான் கேட்க விரும்புகிறேன். அரசு contribution கொடுக்க வேண்டியதில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், அரசாங்கமே தயாரித்த draft-ல் contribution இருக்கிறதே, அதை அமைச்சர் மறுக்கிறாரா? Draft-லே அரசு contribution செலுத்த வேண்டுமென்று போடப்பட்ட விஷயம் இடையில் யாரால், ஏன் எடுக்கப்பட்டது என்பது புரியவில்லை.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாசகம் தெளிவாக இருக்கிறது. Grants to contribution நேரடியாக கொடுத்தே தீர வேண்டும் என்பது ஒரு நிலை. ஆனால், அரசுதான் இந்த வாரியத்தைக் கொண்டு வருகிறது. அரசுதான் இந்தத் தொழிலாளர் நலத் திட்டங்களை அமல் நடத்த வேண்டுமென்று சொல்கிறது. அப்படியிருக்கும்போது அரசு தன்னுடைய நிதியாக, grants-ஆக, மானியமாகத் தருகிறது. பெயர்தான் contribution என்று இல்லையே தவிர, grants to contribution என்றுதான் இதிலே போடப்பட்டிருக்கிறது. ஆகையினால் அதுகுறித்து சந்தேகம் வேண்டாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

The domestic labourers பற்றிச் சொன்னார்கள். அதுகுறித்துப் பரிசீலிக்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையினால் மொத்தத்தில் இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். Employer side-ல் 3% பற்றி இங்கு சொன்னார்கள். Not exceeding 3% on the wages of the employee, என்றுதான் இருக்கிறது. Transport-லே வேலை கொடுப்பவர்கள் மோட்டார் வாகன வரிச் சட்டத்தின்படி 1% கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. இதனைப் பொறுத்தவரையில், நடைமுறையில் எல்லா இடங்களிலும் இருக்கக்கூடிய விஷயங்கள்தான். ஆகையினாலே திருத்தங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொழிலாளி வர்க்கத்தினுடைய வரலாற்றிலேயே ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக, புதிய பொன் ஏடாக, ஏழைத் தொழிலாளர்களின் கண்ணீரைத் துடைக்கின்ற விதத்திலே இதனைக் கொண்டு வந்திருப்பதால், அத்தனைபேரும், இதனை மனப்பூர்வமாக வரவேற்க வேண்டுமென்று கேட்டு, இதனை சட்டபூர்வமாக்கித் தர வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அரசினுடைய contribution இதற்கு இருக்கிறது என்று கூறினார்கள். இங்கே, சட்டத்தினுடைய நோக்கத்தில் சொல்கின்றபோதுகூட, இந்தச் சட்டத்திலே செலவிட நேரிடக்கூடும் தொகையை எவ்வளவு contribution என்றும், எந்த அளவிற்கு என்றும் துல்லியமாக மதிப்பிட்டுக் கூற இயலாது என்றும் கூறப்பட்டிருக்கிறது. நான் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இப்போதைக்கு,



அரசு இந்தச் சட்டத்திற்காக எவ்வளவு contribution செய்ய இருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளி 25 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் சுமார் 25 இலட்சம் பேர் இருக்கக்கூடும் என்று மதிப்பிடப்படுகிறது. அப்படியானால், தோராயமாக 60 கோடி ரூபாய். அதுமாதிரி 10 ரூபாய் என்றால் 25 கோடியும்; 5 ரூபாய் என்றால் 12 கோடி ரூபாய். கடந்த காலத்திலே பல இடங்களிலே தொழிலாளர் நல நிதியில் நிதி ஒதுக்கப்பட்டும்கூட செலவழிக்கப்படாமல் இருந்திருக்கிறது. ஆகையினால் நிகழ்வுகளுக்குத் தகுந்தபடி, திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு தொகை தேவையோ அதனை அரசு contribution-ஆக, தன் பங்களிப்பாக மானியம் என்ற பெயரில் வழங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** ஒரே ஒரு வேண்டுகோளை, திரும்பவும், அதனுடைய அவசியத்தையும், தேவையையும் கருதி, மாநில அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து சொல்கிறேன், இது நடைமுறையில் பெரும் சிக்கலைத் தோற்றுவித்துவிடும். unorganised workers-களிடமிருந்து 20 ரூபாய் வசூலிப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. எனவே, தயவுசெய்து அதனை 10 ரூபாய் என்று மாற்றியமைக்க வேண்டுமென்று திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை எடுத்துச் சொல்லி, அவர்களுடைய ஆலோசனையின்படி உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [ 1998 நவம்பர் 28

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண் 64/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



1998 நவம்பர் 28 ]

**(ஏ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு 1998 —தொடர்ச்சி.**

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அதற்குள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, இன்னும் நான்கு தீர்மானங்கள் இருக்கின்றன.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** தலைவர் அவர்களே, கணேசன் அவர்கள் கூட்டுறவுத் தேர்தலில் முறைகேடு நடந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அதுகுறித்துப் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேலம் மாவட்டக் கூட்டுறவுத் தேர்தலைப் பற்றித்தானே, சரி அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடு) அவர்கள் விளக்கம் சொன்ன பிறகு உங்களைக் கூப்பிடுகிறேன். அமைச்சர் விளக்கம் கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு அனுமதி கிடையாதா? இது அரசாங்கத்திற்கு, பொது மக்களுக்காக. இதில் என்ன சட்டப் பிரச்சினையாகக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்?

முற்பகல் 10-45

**திரு. சி. ஞானசேகரன்:** இதை அப்போதே கொடுத்திருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் இருந்தார், இல்லை. வந்து கொடுக்கிறார், உட்காருங்கள். அவர் அப்போது அவையில் இல்லை. மக்களுக்கு விளக்கம் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலே ஏதோ முறைகேடுகள் நடந்திருப்பதாக இங்கே எடுத்துச் சொன்னார்கள் என்று சொன்னார்கள். நான் ஏற்கெனவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னபோதுகூட அதற்கான விளக்கமான பதிலைச் சொல்லியிருக்கிறேன்.

குறிப்பாக சேலம் மாவட்டத் தேர்தலைப் பற்றி இங்கே திரு. கணேசன் தெரிவித்ததாகச் சொன்னார்கள். சேலம் மாவட்டம் மத்தியக்

[திரு. கா.நா. நேரு] [ 1998 நவம்பர் 28

கூட்டுறவு வங்கியினுடைய தேர்தல் காலை 10-00 மணியளவிலே ஆரம்பித்து, 11-00 மணி வரையில் யார் யார் எல்லாம் வேட்பாளர்களாக நிற்கிறார்கள் என்கின்ற மனுவை வாங்குகின்றபோது, நமது சுந்தரம் அவர்கள் அது முடிகின்ற நேரத்திலே அங்கே சென்று, உடனடியாக தேர்தல் அதிகாரி யார் என்று கேட்டதாகவும், தேர்தல் அதிகாரி அங்கேயிருக்கின்ற மனுக்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறார் என்று சொன்னபோது, நீங்கள் தேர்தலில் போட்டியிடுகிறீர்களா, வேட்பு மனு தருகிறீர்களா என்று கேட்டபோது, இல்லை நான் உடனடியாகத் தேர்தல் அதிகாரியைப் பார்க்க வேண்டுமென்று இவர் வேகமாக உள்ளே சென்றபோது, அங்கே நின்றவர்களுக்கும் இவருக்கும் ஏதோ பேச்சுவார்த்தையிலே தகராறு முற்றியிருக்கிறது. அதிலே ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டதிலேதான் கீழே விழுந்து அவருக்கு ஏற்கெனவே கட்டியிருக்கின்ற பல் என்று சொன்னார். நான் அதைத் தவறாகச் சொல்லவில்லை. அது சொந்தப் பல்லோ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினருக்கு அடிபட்டது உண்மை, நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** சுந்தரம் அவர்களே என்னிடம் பேசினார்கள். நானும் அவரிடம் விளக்கம் சொன்னேன். அவர் சமாதானம் அடைந்து சென்றார். ஆனால் தேர்தலில் அங்கே முறைகேடு என்று சொல்கிறார். அதே சேலம் மாவட்டத்தில் பால் கூட்டுறவு ஒன்றியத்திலே தேர்தல் நடைபெற்றது. தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 10 உறுப்பினர்களுக்கு, எதிர் கட்சியிலே மட்டும் 10 பேர் நின்றார்கள். அவர்கள் நின்றபோதும், தேர்தல் முடிவுகள் என்னவென்றால், பத்து இடங்களிலுமே திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் தோழமைக் கட்சியைச் சார்ந்தவர்களும்தான் வெற்றி பெற்றார்களே தவிர வேறு ஒன்றுமில்லை.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள், தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். எங்களுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் இருப்பது 7637 சங்கங்கள், இந்தச் சங்கங்கள் நேரடியாக கூட்டுறவுத் துறையின் பதிவாளருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன. கைத்தறித் துறை அமைச்சரின்கீழ் 10,000 சங்கங்களும், பால்வளத் துறை அமைச்சரின்கீழ் 10,000 சங்கங்களும், இங்கே இருக்கின்ற ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சரின்கீழ் சங்கங்களும்



1998 நவம்பர் 28 ] [திரு. கா.நா. நேரு]

இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களுடைய இலாகாவின் சார்பிலே சங்கங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் இந்த நேரடி 7637 சங்கங்களிலே வெற்றி பெற்றவர்களின் பிரதிநிதிகளுடைய எண்ணிக்கையை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் 3661 பேர்; தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக வெற்றி பெற்றவர்கள் 492 பேர்; அ.இ.அ.தி.மு.க. சார்பாக வெற்றி பெற்றவர்கள் 546 பேர்; ம.தி.மு.க. சார்பாக வெற்றி பெற்றவர்கள் 205 பேர்; பா.ம.க. சார்பாக வெற்றி பெற்றவர்கள் 124 பேர்; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வெற்றி பெற்றவர்கள் 57 பேர்; இதர கட்சிகள் 145 பேர்; கட்சி சாராதவர்கள் 2407 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

அடிப்படை அளவிலே தேர்தல் ஆரம்பிக்கின்ற காலத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் இதிலே ஆர்வம் காட்டியிருப்பார்களேயானால், இதைவிட இன்னும் கூடுதலாகக்கூட வெற்றி பெற்றிருக்க முடியும், அன்றைக்கு யார் ஆர்வம் காட்டினார்களோ, அவர்கள்தான் வெற்றி பெற முடிந்தது, தொடக்க அளவிலே. தொடக்க அளவிலே யார் வெற்றி பெறுகிறார்களோ, அவர்கள்தான் இறுதி வரை வர வாய்ப்பு இருக்கிறதே தவிர, இடையிலே வந்து எங்களை நீங்கள் அனுமதிக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. அதே நேரத்தில், அவர்கள் ஆரம்பத்திலேயே தேர்தலில் போட்டியிட்டிருப்பார்களேயானால் தொடர்ந்து அந்த வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்திருக்கும்.

தேர்தலைப் பொறுத்த அளவில் அரசாங்கத்தின் சார்பாக, துறையின் சார்பாகச் சொல்லப்படுகின்றபோது கிட்டத்தட்ட 90 சதவீதம் அல்லது 100 சதவீதம் நாங்கள் நேர்மையாக நடத்தியிருக்கிறோம். உறுப்பினர்கள் குறிப்பிட்டு இந்த இடத்தில் இவர் இன்ன தவறு செய்தார். என்றால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீதுப் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். அதேநேரத்தில் தவறு செய்திருந்தால், நீக்கிவிட்டு, புதிய தேர்தலைக்கூட வைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். வேண்டுமென்றே தொடர்ந்து கூட்டுறவுத் தேர்தலிலே ஏதோ முறைகேடு, கூட்டுறவுத் தேர்தலிலே முறைகேடு என்று இதையே சொல்லிக்கொண்டிருக்காது, குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று கேட்டு, என்னுடைய விளக்கத்தைத் தந்து, அமைகிறேன், வணக்கம்.

[ 1998 நவம்பர் 28

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், இராசிபுரம் தொகுதியை உறுப்பினர் சுந்தரம், அவர்களும், அவரைச் சார்ந்தவர்களும் மனு தாக்கல் செய்யப் போகும்போது, அங்கே உள்ள காவல் துறை அதிகாரிகளும். மற்ற அடி ஆட்களும் அவர்களை மனு தாக்கல் பண்ணவிடாமல் அடித்திருக்கிறார்கள். இதுமாதிரி தமிழ்நாடு மட்டத்தில் எல்லா பால் வள கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலேயும் ஆளும் கட்சிக்காரர்கள் வர வேண்டுமென்று சொல்லி, காவல் துறையைக் கையில் வைத்துக்கொண்டு, அடி ஆட்களை வைத்து, Collector-ஐ வைத்து நடத்தியிருக்கிறார்கள் என்பது தமிழ்நாட்டு மக்கள் எல்லோருக்கும் தெரியும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் தெரியும். அவரும் பத்திரிகையில் அறிக்கை கொடுத்திருக்கிறார். நீங்கள் சாக்குபோக்கிற்காக முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கிற மாதிரி, ஜனநாயக முறைப்படி தேர்தல் நடந்தது என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படி உண்மையிலேயே நடக்கவில்லை. இது நாட்டு மக்களுக்கே தெரியும். ஆகவே, எல்லாத் தேர்தல்களையும் நீங்கள் இரத்து பண்ணிவிட்டு மறுபடியும் தேர்தலை நடத்தினீர்கள் என்றால் உங்கள் ஆட்சிக்கு நல்ல பெயர் இருக்கும். இல்லையென்றால் உங்களுக்கு நல்ல பெயர் இருக்காது. நீங்கள் Nomination முறையில் நியமித்திருக்கலாம். ஆனால், எல்லா இடங்களிலேயும் மனு தாக்கல் பண்ண விடவில்லை. போலி சங்கம் ஆரம்பித்திருக்கிறீர்கள். போலி உறுப்பினர்களை....

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியது போதும்

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொஞ்சம் இருங்கள், திரு. ஐ. கணேசனும் பேசி விடட்டும். அப்புறம் நீங்கள் சொல்லுங்கள். திரு. ஐ. கணேசன்

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே பேசியபோது தெளிவாகக் கூறியிருந்தேன். சேலம் மாவட்டத்திலே அந்தத் தேர்தல் 10 மணிக்கு ஆரம்பம் என்றால் சுமார் 8 மணி அளவிலே ஆயிரக்கணக்கான தி.மு.க உறுப்பினர்களை அந்தக் கட்டடத்திற்கு முன்னால் நிறுத்தி வைத்து, பேட்ஜ் குத்தி, பேட்ஜ் குத்தியவர்களை மட்டும்தான் உள்ளே அனுப்பினார்கள். பேட்ஜ் குத்தாதவர்களை இரத்தம் சிந்த, சிந்த அடித்து வெளியே



1998 நவம்பர் 28 ] [திரு. ஐ. கணேசன்]

தரதரவென்று இழுத்துக் கொண்டுபோய் விட்டார்கள். இதை அனைத்துப் பத்திரிகைக்காரர்களும் பார்த்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நேரிடையாகப் புகார் செய்யப்பட்டிருக்கிறது. இதில் எந்தவிதமான தவறு இருந்தாலும், நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று தெளிவாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். அதன்பிறகுதான் அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த மாவட்டச் செயலாளரும், சுந்தரம் அவர்களும் சென்று Form கேட்டதற்கு, தகராறு ஆகி பல் உடைந்து, வெளியே வந்திருக்கிறார் என்ற விளக்கத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கு நம்முடைய பிரதான எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே, முதன் முதலாக கூட்டுறவுத் தேர்தலைப் பற்றி மிகத் தெளிவாக அறிக்கை கொடுத்தார். இரண்டு நாட்களுக்கு முன்னால், இங்கே பேசிய அருமை அண்ணன் பழனிசாமி அவர்கள்கூட நாணயத்தை உதாரணமாகக் காட்டிப் பேசியது இந்த அவைக் குறிப்பிலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். எதிர்க் கட்சித் தலைவர் பேசினார், பழனிசாமி பேசினார், பேரவைத் தலைவர் சொன்னார் என்பதா உங்கள் பிரச்சினை? நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** சரி, சேலத்தில் இதுபோல் தகராறு நடந்தது என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களை வைத்துக்கொண்டு மட்டுமே தேர்தலை நடத்தியதாகவும், காவல் துறையினரை உதவிக்கு அழைத்து தேர்தலை நடத்தியதாகவும் சொன்னார். உதாரணத்திற்கு அவருடைய கட்சியைச் சேர்ந்தவரே ஊரக வளர்ச்சி வங்கியிலே தலைமைத் தேர்தலிலே கலந்து கொள்வதற்கு வருகிறார். வருகின்றபோது, நீதிமன்றத்திலே அவருக்கு உத்தரவு இருக்கிறது, அவருடைய வேட்பு மனுவை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று. அவருக்குக் காவல் துறையினுடைய கூடுதல் பாதுகாப்பு தர வேண்டும் என்று நீதிமன்ற உத்தரவோடு அவர் தேர்தல் களத்திற்கு வருகிறார். தேர்தல் களத்திற்கு வந்தவர், 10 மணிக்கு வந்தவர் 11 மணி வரை வேட்பு மனுவே தாக்கல் செய்யாமல், வெறுமனே அமர்ந்து இருந்துவிட்டு, வேட்பு மனுவைத் தராமல், திரும்பச் சென்று மீண்டும் நீதிமன்றத்திலே போய் எங்களை வேட்பு

[திரு. கா.நா. நேரு] [ 1998 நவம்பர் 28

மனுவைத் தாக்கல் செய்ய விடவில்லை, அங்கிருக்கிற அதிகாரிகள் தி.மு.க. காரர்களைப்போல் செயல்பட்டார்கள் என்று சொல்லி, இன்றைக்கு அதற்குத் தடையாணை பெற்றிருக்கிறார்கள்.

சேலம் மாவட்டத்திலே நடந்ததைப்பற்றி இங்கே சொன்னார்கள், ஒரு வேட்பாளர் 10 மணியிலிருந்து 11 மணிக்குள் வேட்பு மனுவைத் தாக்கல் செய்ய வேண்டுமென்றால், உள்ளபடியே அவர் சென்று அதிகாரியிடம் வேட்பு மனுவைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லலாம். ஆனால் மாவட்டச் செயலாளர் 50 பேரை அழைத்துக்கொண்டு அதிகாரிகளிடம் சென்றால், தகராறு செய்யப் போனது இவரா அல்லது அங்கே இருப்பவர்களா என்பதை உறுப்பினர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

இதிலே இன்னும்கூடச், சொல்ல முடியும், தூத்துக்குடி மாவட்டத்திலே மத்தியக் கூட்டுறவு வங்கியிலே தேர்தல். மாவட்டச் செயலாளர், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர், அந்தத் தேர்தலிலே போட்டியிடுகிறார். அங்கிருக்கின்ற அரசு அதிகாரி, மாவட்ட வருவாய் அலுவலர் எதிர்க் கட்சியினர் தந்த Nomination அவ்வளவையும் 11 மணிக்குப் பிறகும்கூட வாங்கிக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிடுகிறார். 11 மணிக்கு மேல் வாங்க முடியாது என்று சொன்ன பிறகு, நீதிமன்றத்திலே அவர் தந்த அந்த அறிக்கையின்படி, நீதிமன்றத்திலே மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும் என்று சொல்லி, மீண்டும் தூத்துக்குடியிலே, மறுதேர்தல் நடத்தப்பட்டது. பல உதாரணங்களை எங்களால் சொல்ல முடியும். எங்களுடைய கவனத்திற்கு வருமேயானால், நடவடிக்கை எடுக்கிறோம். முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த அளவில் நேர்மையான முறையிலே தேர்தல் நடத்த வேண்டும் என்றுதான் உத்தரவிட்டிருக்கிறாரே தவிர, அதிலே மாறுபாடான கருத்தில்லை. ஆங்காங்கே இருக்கின்ற சொந்த, தனிப்பட்ட பிரச்சினையை வைத்துக் கொண்டு கூட்டுறவுத் தேர்தலிலே முறைகேடு என்று சொன்னால், அது பொருத்தமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு நாளைக்கு 10 தடவை எழுந்து நின்றால், நான் அனுமதிக்க முடியாது.



1998 நவம்பர் 28 ]

**திரு. இரா. தாமரைக்கனி:** உண்மைக்கு மாறான செய்தியைச் சொல்லுகின்றபோது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது உண்மைக்கு மாறான செய்தி என்பது உங்கள் கருத்து.

**திரு. இரா. தாமரைக்கனி:** அமைச்சர் விளக்கம் கொடுக்கிறார்கள். நான் பதில் சொல்ல வேண்டாமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியதற்கு அமைச்சர்தான் விளக்கம் கொடுப்பார். அரசாங்கம் விளக்கம் கொடுக்காமல், வேறு யார் கொடுப்பது?

**திரு. இரா. தாமரைக்கனி:** ஒரு சின்ன விளக்கம்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சின்ன விளக்கம்?

*முற்பகல் 10-55*

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முற்பகல் 10-லிருந்து 11 மணிக்குள்ளே மனு தாக்கல் பண்ண வேண்டும் என்று இருக்கிறது. இது எல்லா தேர்தல் அதிகாரிகளுக்கும் தெரியும். ஆகவே அதிகாரிகள், காவல் துறை, மாவட்ட ஆட்சியர் எல்லாம் திட்டமிட்டு இந்த 10, 11 மணிக்குள்ளே மனு தாக்கல் பண்ணக்கூடாது என்று சொல்லி, காவல் துறை, அதிகாரிகளை அடியாட்களை வைத்து எல்லோரையும் விரட்டிவிட்டுத்தான், மனு தாக்கல் யாரையும் பண்ணவிடாமல் செய்திருக்கிறார்கள். இது விவசாய சங்க உறுப்பினர்கள், பால்வள சங்க உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். சில இடங்களிலே நடந்தது என்றால் அங்கே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், பொதுமக்கள் Forceஆக இருந்தால் அந்த இடங்களில் தேர்தல் நடத்தியிருப்பீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பொதுவாக உறுப்பினர்கள் சொல்கிறபோது மாவட்ட ஆட்சியர்கள் மற்ற அதிகாரிகள் எல்லாம் சேர்ந்து விரட்டினார்கள் என்று சொல்வது பொதுக் கூட்டத்திலே

[திரு. துரைமுருகன்] | 1998 நவம்பர் 28

வேண்டுமானால் பேசலாம். ஆனால் எந்த மாவட்ட ஆட்சியர், எப்படி விரட்டினார் என்று ஆதாரத்தோடு பேச வேண்டும். பொத்தாம் போக்கிலே பேசுவதற்கு தாங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா என்று கேட்கிறேன். பொதுக் கூட்டத்திலே அவர் என்ன வேண்டுமானாலும் பேசலாம். அதுபற்றி பிரச்சினை இல்லை. ஆனால், சபையிலே பேசுகிறபோது, இந்த மாவட்ட ஆட்சியர், இந்த அதிகாரி இப்படி ஈடுபட்டார் என்று சொல்ல வேண்டுமே தவிர, அதிகாரிகளும், போலீஸ்காரர்களும், எல்லோரும் சேர்ந்து விரட்டிவிட்டார்கள் என்று சேற்றை வாரி இறைப்பதற்கு இந்த மன்றம் இடம் தரக்கூடாது என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாவட்ட ஆட்சியர் போன் மூலமாக வாய்வழி உத்தரவு இட்டிருக்கிறார். தகராறு நடக்கிறது. காவல் துறை அதிகாரி இப்படிச் செய்கிறார், J.R. இப்படிச் செய்கிறார் என்று மாவட்ட ஆட்சியரிடம் போய் முறையிட்டால் அவர் பேசாமடந்தையாக இருக்கிறார். அதனால்தான் எல்லோருடைய ஒத்துழைப்பின் பேரிலேதான் இப்படி முறைகேடாகத் தேர்தல் நடந்தது என்று நான் சொல்வேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானங்கள். (குறுக்கீடு) நீங்கள் அடிக்கடி எழுந்து நிற்கிறீர்கள், உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** சேலம் மாவட்டத்தில் நடந்தது நேர்மையான தேர்தல்தான் என்று நீதிபதியைக் கொண்டு நீதிவிசாரணை வைக்கத் தயாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நீங்கள் என்னைக் கேட்டு பிரயோசனம் இல்லை, உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நீங்கள் அந்தமாதிரி நீதிவிசாரணை பண்ணுங்கள். தமிழ்நாட்டிற்கு மட்டும் நீதிவிசாரணை பண்ணுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நீங்கள் வம்பை விலைக்கு வாங்காதீர்கள். தேவையில்லாமல் எழுந்து நின்றீர்கள் என்றால் நான் நடவடிக்கை எடுப்பேன். இது கடைசி முறை (குறுக்கீடு) நீங்கள் இதோடு நான்குமுறை பேசியாகிவிட்டது. ஐந்தாவது தடவை எழுந்திருப்பதற்கு நான் அனுமதிக்க முடியாது, உட்காருங்கள், மாண்புமிகு உறுப்பினர் கணேசன் என்னைப் பார்த்து கோபமாகப் பேசுவது, மந்திரியைப் பார்த்து சிரித்துப் பேசுவது இதெல்லாம் முறையல்ல, உட்காருங்கள்.



1998 நவம்பர் 28 ]

## 7. அரசினர் தனித் தீர்மானங்கள்

### (அ) சென்னை மாநகராட்சிச் சட்டம், 1919, பிரிவு 347, உட்பிரிவு (3)-க்குத் திருத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானங்கள். சென்னை மாநகராட்சிச் சட்டம் குறித்த தனித் தீர்மானம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு மேதகு ஆளுநர் அவர்களால் 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) 347 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி, மேற்சொன்ன சட்டத்திற்கான IV-வது இணைப்பு பட்டியல் பகுதி I-A-இல் 3 ஆம் விதியில் (1) ஆம் கூறினை மாற்றித் திருத்தம் செய்வதற்காக கொண்டு வரப்படும் பின்வரும் வரைவுத் திருத்தமானது மேற்சொன்ன 347 ஆம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவின்படி கோரப்படுகிறவாறு ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க: (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 305, உட்பிரிவு (1)-க்குத் திருத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் குறித்த தனித் தீர்மானம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[திரு. கோ.சி. மணி] [ 1998 நவம்பர் 28

*__மாண்புமிகு திரு. கோ. சி. மணி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு மேதகு ஆளுநர் அவர்களால் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 305 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, மேற்சொன்ன சட்டத்திற்கான IV-வது இணைப்புப் பட்டியலில் பகுதி I-இல், 14-ம் விதியில் (2) ஆம் கூறினை மாற்றி திருத்தம் செய்வதற் கக் கொண்டு வரப்படும் பின்வரும் வரைவுத் திருத்தமானது மேற்சொன்ன சட்டத்தின் 305-A எனும் பிரிவின்படி கோரப்படுகிறவாறு ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க: (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (இ) மதுரை மாநகராட்சிச் சட்டம், 1971, பிரிவு 431, உட்பிரிவு (3)-க்குத் திருத்தம்

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மதுரை மாநகராட்சிச் சட்டம் குறித்த தனித் தீர்மானம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

*__மாண்புமிகு திரு. கோ.சி. மணி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு மேதகு ஆளுநர் அவர்களால் 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 431-ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி, மேற்சொன்ன சட்டத்திற்கான II ஆம் இணைப்புப் பட்டியலில் பகுதி II இல் 6-ஆம் விதியில் (1) ஆம் கூறினை மாற்றித் திருத்தம் செய்வதற்காகக் கொண்டு வரப்படும் பின்வரும் வரைவுத் திருத்தமானது மேற்சொன்ன 431 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்படி கோரப்படுகிறவாறு ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.



1998 நவம்பர் 28 ]

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்பப்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (ஈ) கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம், 1981, பிரிவு 430, உட்பிரிவு (3)-க்குத் திருத்தம்

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ கோயம்புபத்தூர் மாநகராட்சிச் சட்டம் குறித்த தனித் தீர்மானம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

முற்பகல் 11-00

*__மாண்புமிகு திரு. கோ.சி. மணி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு மேதகு ஆளுநர் அவர்களால் 1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 430 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி மேற்சொன்ன சட்டத்திற்கான II ஆம் இணைப்புப் பட்டியலில் பகுதி II-ல் 6 ஆம் விதியில் (1) ஆம் கூறின மாற்றித் திருத்தம் செய்வதற்காகக் கொண்டுவரப்படும் பின்வரும் வரைவுத் திருத்தமானது மேற்சொன்ன 430-ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்படி கோரப்படுகிறவாறு ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

—தொடர்ச்சி

### (அ) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு, 1998—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** ஏற்கெனவே அவையினால் அனுமதிக்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு விவாதம் இல்லாமலேயே நிறைவேறிவிட்டது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலே பேச வேண்டும் என்று தங்கள் விருப்பத்தைத் தெரிவித்ததால் சுருக்கமாகத் தங்கள் கருத்துக்களைச் சொல்லுமாறு உறுப்பினர்களை அழைக்கின்றேன். யாருக்குமே 7 நிமிடங்களுக்கு மேல் பேச அனுமதி கொடுக்கப்படமாட்டாது. நண்பகல் 12 மணி அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். இதிலே திருத்தங்களுக்கு இடம் கிடையாது. கருத்துக்களைச் சொல்லுங்கள், அவற்றிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் திருத்தச் சட்டத்தினை வரவேற்று, என்னுடைய உரையை ஒருசில நிமிடங்களில் முடித்துக்கொள்கின்றேன்.

நேற்றையதினம் Eve teasing தொடர்பாக சட்டமுன்வடிவு கொண்டு வந்து நிறைவேற்றியதற்கு நான் என் சார்பிலும், இங்கே அமர்ந்திருக்கின்ற அத்தனை உறுப்பினர்களின் சார்பிலும் அரசுக்கு என்னுடைய நன்றியறிதலை முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

உள்ளாட்சி முறைக்கு ஒரு புதிய ஊக்கம் அளிக்க வேண்டுமென்பதற்காகத்தான் ராஜீவ் காந்தி அவர்கள் உள்ளாட்சித் துறைக்கு, உள்ளாட்சி அமைப்புக்கு ஒரு புதிய சட்டத்தை உருவாக்கினார்கள். அவர்கள் 64-வது திருத்தத்தைக் கொண்டுவந்து அதன்மூலமாக ஒரு சட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தார்கள். அதாவது, உள்ளாட்சி அதிகாரங்கள் ஒரு ஜனநாயக நாட்டில் ஜனநாயக ரீதியிலே மக்களாலேயே செயல்படுத்தப்பட வேண்டும். மக்கள்தான் அந்த அதிகாரத்தை நல்லமுறையிலே பயன்படுத்த வேண்டும் என்பதற்காக அவர்கள் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் கொண்டு வரும்போதுகூட பாராளுமன்றத்திலே பேசினார்கள், 1989 ஆம் வருடம் மே மாதம் 15 ஆம் தேதி என்று நினைக்கின்றேன். அந்த நேரத்திலே அவர்கள், ``For the people of India, let us ensure maximum democracy, let there be an end to the power-brokers; let us give powers to the people.", என்று அன்றைக்குச் சொன்னார்கள். அந்த அளவிற்கு இந்த அதிகாரங்கள் மக்கள் மத்தியிலே செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் அவர்கள் சிறப்பான முறையிலே அந்தச் சட்டத்தினைக் கொண்டு வந்து, இப்போது ஜனநாயக முறையிலே இந்த நாட்டிலே மிகச் சிறப்பான முறையிலே அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.





நம்முடைய மாநிலத்திலே 3 அடுக்கு முறை தற்போது இருந்து கொண்டிருக்கின்றது. இந்த 3 அடுக்கு முறையிலே பஞ்சாயத்துக்களுக்கு உள்ள அதிகாரங்கள் ஒன்றியங்களுக்கு அவ்வளவாக இல்லை. அதனால் அந்த ஒன்றியம் என்பதே வேண்டாம் என்று நான் கருதுகின்றேன். காரணம், ஒன்றியம் என்பதை ஏற்கெனவே மைய அரசு கொண்டு வந்தாலும்கூட, 3 அடுக்கு முறை வரும்போது நாமே அதை எதிர்த்தோம். இந்த ஆட்சியிலுள்ளவர்கள் அத்தனை பேர்களும் எதிர்த்தார்கள். எதிர்த்து, 2 அடுக்கு முறை திட்டம்தான் வேண்டுமென்று நாம் கொண்டு வந்தோம். பிறகு மைய அரசு 3 அடுக்கு முறைதான் வேண்டுமென்று கட்டாயப்படுத்தவில்லை. அதேபோன்று, இந்த 3 அடுக்கு முறை இருக்கின்றதே அது உண்மையிலேயே இந்த நேரத்திலே நாட்டிற்குத் தேவையில்லை என்று கருதுகின்றேன். காரணம், நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். சட்டமன்ற உறுப்பினராக இருந்துகொண்டிருக்கின்ற என்னை Councillor ஆக்கி Union Chairman ஆக்கிவிட்டார்கள். Union Chairman ஆக ஆக்கிய நேரத்திலே எந்தவிதமான அதிகாரங்களும் இல்லாமல் ஏதோ போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். ஏதோ தீர்மானங்களை நிறைவேற்றுகின்றோம். E.A.S. என்ற திட்டத்திலேயிருந்து வரக்கூடிய பணத்தை ஒதுக்கி அங்கங்கே கட்டடங்களைக் கட்டுங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றோம். ஏற்கெனவே, காங்கிரஸ் ஆட்சியின்போது ஒன்றியத்திற்கு 29 அதிகாரங்கள் இருந்தன. அந்த அதிகாரங்களில் ஒன்றுமே இன்றைக்கு இல்லை. கல்வி, விவசாயம், சுகாதாரம் இப்படிப் பல அதிகாரங்கள் அன்றைக்கு அந்த Union Chairman உடைய கையிலே இருந்தன. இன்றைக்கு அவைகள் எல்லாம் இல்லாமல், ஏதோ போகிறோம், வருகிறோம், அவ்வளவுதான். ஒரு பஞ்சாயத்தில் தேர்தல் நடக்கும்போது, 300 பேர் மக்கள்

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்][ 1998 நவம்பர் 28

தொகையுள்ள இடத்திலேகூட ஒருவர் தலைவராக வந்து விடுகிறார். ஆனால் 5000 பேர் மத்தியிலே வாக்குகளை வாங்கிச் சென்று, அந்த Councillor அந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ள முடியவில்லை என்று பல இடங்களிலேயிருந்து எங்களுக்குத் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகையினாலே இந்த முறை தேவைதானா? ஒன்று, அந்த 29 அதிகாரங்களையும் ஊராட்சி ஒன்றியத்துக்குக் கொடுங்கள், அல்லது அது அறவே வேண்டாம் என்று அதைக் காலி செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 11-05

மாநகராட்சி அதிகார அமைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கலந்துகொள்ளலாம். அது உண்மையிலேயே வரவேற்கக்கூடிய ஒன்றுதான். ஆனால், கலந்துகொண்டால், அவர்களுக்கு ஓட்டுரிமை இருக்கக்கூடாது, அது இல்லையென்றும் இருக்கிறது, அதையும் நான் வரவேற்கின்றேன். ஏனென்றால், இவர்கள் அந்த மன்றங்களினுடைய கூட்டங்களுக்குச் சென்று, அதனால் அங்கே ஏதாவது கோளாறு வந்துவிடக்கூடாது என்பதற்காக இதை நாம் வைத்திருக்கிறோம். ஆகையினாலே இதுவும் பாராட்டக்கூடிய ஒன்றாகக் இருக்கிறது என்று எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

இப்போது ஒன்றியத்திலே இருக்கக்கூடியவர்களுக்கு மாதம் 200 ரூபாய் கொடுக்கிறோம். அதை 300 ரூபாயாக ஆக்க வேண்டும். அதேபோல, நகராட்சியிலே உள்ளவர்களுக்கு 500 ரூபாயாகக் கொடுக்க வேண்டும். அதேபோல மாநகராட்சியிலே உள்ளவர்களுக்கு 1000 ரூபாய் கொடுக்க வேண்டும். அந்த அளவிலே கொஞ்சம் அதிகரித்து அந்த ஊதியத்தை நாம் கொடுப்போமேயானால் அது நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதேமாதிரி, நாம் ஜாதி, மத பேதமில்லாமல் எல்லா மக்களுக்கும் உரிமை வழங்க வேண்டும் என்ற காரணத்தினாலேதான் எல்லா துறைகளிலேயும் பெண்களுக்கு சமத்துவம் கொடுத்து 33 சதவீதம் என்ற ஒரு நிலைமையை உருவாக்கியிருக்கிறோம்.

ஆதிதிராவிட மக்களுக்கு நாம் உரிமை கொடுத்த காரணத்தாலேதான் அவர்களும் தழைத்து வாழக்கூடிய ஒரு நிலைமை இருக்கின்றது. இப்போது, கன்னங்குடி ஒன்றியத்திலே, பெங்களூர் பஞ்சாயத்தில் ஒரு S.C. ஜெயித்து 4 மாதங்கள் ஆகின்றன. அவரை இயங்கவிடாமல் அந்த ஆணையர் தடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. எனவே,



1998 நவம்பர் 28 ] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

அந்த ஆணையர் தடுக்கின்ற காரணத்தாலே, அவருடைய பதவிக்காலத்திலே எதையுமே செய்ய முடியாது என்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஜாதி, பேதமற்று இந்த ஆட்சியை நடத்தக்கூடிய நிலைமையிலே சில பேர்களிடம் ஜாதி உணர்வு இருக்கிறது. நானே அனுபவித்திருக்கிறேன். அதை நான் சொல்லத் தயாராகயில்லை. அது யார் என்று எனக்குத் தெரியும். அவரைப் பார்க்கச் சென்றாலும் உட்காருங்கள் என்று கூடச் சொல்வதில்லை. நாங்கள் அதையெல்லாம், பொருட்படுத்துவதில்லை. ஆகையினாலே அந்த ஜாதி வெறி இருக்கக்கூடாது. ஜாதி வெறி இல்லாதவர்கள் பொறுப்பேற்று, அந்த நிலைமையை உருவாக்கி, ஜாதியைப் பற்றி நினைக்காமல், யார் பதவிக்கு வருகிறார்களோ, அவர்களுக்கு முழு அதிகாரம் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், மேலவளவிலே என்ன ஆயிற்று. மேலவளவிலே ஒரு ஹரிஜன் வெற்றிபெற்று வந்தார். அவருடைய நிலைமை வேறு விதமாக ஆயிற்று. நேற்றையதினம் பதிலிலேகூட, இதுவரைக்கும் யாருமே மனு செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நியமனம் மூலமாக அந்த மேலவளவு பஞ்சாயத்திற்கு ஆட்களை நியமித்து, அந்தப் பஞ்சாயத்து இயங்கக்கூடிய அளவிலே செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

வரிவிதிப்பிலே, சாரக்குடி பஞ்சாயத்திலே ஓட்டு வீட்டுக்கு 50 சதவீதம், வாடகை வீட்டுக்கு 100 சதவீதம், வணிக வளாகத்திற்கு, லாட்ஜுக்கு 150 சதவீதம் என்று வைத்திருக்கிறோம். அது நல்லதல்ல. அது மக்கள் மத்தியிலே ஒரு வெறுப்பை உண்டாக்கும். அரசாங்கம் இந்தமாதிரி வரி போட்டிருக்கிறது என்று ஒரு வெறுப்பை ஏற்படுத்தும். ஆகையினாலே அவர்களே தீர்மானம் போட்டு அதை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். ஓட்டுவீட்டுக்கு 50 சதவீதம்...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக பேரூராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள் இவை அனைத்திலுமே தீர்மானம் நிறைவேற்றி அவர்கள் தாங்களே வசூலிப்பதாக முடிவு எடுத்து அறிவித்திருக்கிறார்கள். இதற்கிடையில் யாரோ ஒருசிலர் பத்திரிகையில் எழுதி புதியதாகக் கொண்டுவரப்பட்ட திட்டத்தைக்கூட கைவிட்டு பழைய முறையிலேயே வசூல் என்றும், 50 விழுக்காட்டை அவர்கள் உச்சபட்சமாக, 50 விழுக்காட்டிற்கு மேல் விதிக்கக்கூடாது என்றுதான் கட்டுப்படுத்தியிருக்கிறோமே தவிர, அதற்கு உட்பட்டு, அந்த நகராட்சிகள் தீர்மானமிட்டு வசூலிக்கலாம் என்பதைத்

[திரு. கோ.சி. மணி] [1998 நவம்பர் 28

தெரிவித்திருக்கிறோம். தெளிவாகப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. இங்கே கொடுத்திருக்கிற அந்த அறிவிப்பில்கூட, நாங்கள் அதைத்தான் கொடுத்திருக்கிறோம். கட்டாயமாக 50 விழுக்காடு என்றுகூட அல்ல; அதுவும் வீட்டுச்சொந்தக்காரர்கள் வசிக்கும்போது 100 ரூபாய் என்று வசூலிக்கும் வரியை 5 ஆண்டுகளுக்குப் பிறகு, 50 விழுக்காடு சேர்த்து வசூலிப்பது குறித்துப் பரிசீலிப்பதிலே என்ன தவறு?

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கேயே இந்தமாதிரி 50 விழுக்காடு, 100 விழுக்காடு, 150 விழுக்காடு என்று இருப்பதை மாற்ற வேண்டும் என்று கூறி அவர்களே தீர்மானம் நிறைவேற்றி...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மறுபடியும் நான் சொல்வது, 100 விழுக்காடு போடுங்கள், 150 விழுக்காடு போடுங்கள் என்று வலியுறுத்தவில்லை. இந்த விழுக்காடுகளுக்கு மேல் போகக்கூடாது என்று வரையறுத்திருக்கிறோம். அதற்குட்பட்டு வசூலிக்கலாம். அதுதானே தவிர, 50 விழுக்காடு போடுங்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. அதைவிடக் கூடுதலாகப் போடக்கூடாது. நான் இன்னும்கூடச் சொல்கிறேன். 50 விழுக்காடு என்று இருந்தாலும்கூட என்ன தவறு? 100 ரூபாய் வரி விதித்தவர்களுக்கு 5 ஆண்டுகளுக்குப் பிறகு 50 ரூபாய் உயர்த்தாமல், இன்றைக்கிருக்கிற பொருளாதார வீக்கத்தை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது 50 விழுக்காட்டிற்குக் குறைவாகக்கூட, அந்தந்த நகரமன்றங்கள் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றன என்று தெரிவித்தார்கள். அதை அரசு ஏற்றுக்கொள்ளுமா என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் குறிப்பிடுவது அவர்கள் வரி போட்டுக் கொண்டு வரும்போது சில slabs கொடுத்திருக்கிறோம், அதன் அடிப்படையில் போடும்பொழுது, அந்த வரி உயர்ந்துவிடுமானால், அந்த 50 விழுக்காட்டிற்கு மேல் அது இருந்தால் அதைக் கட்டுப்படுத்துகிறோம். அதற்காகத்தான் 50 விழுக்காடு. 45 விழுக்காடு இருந்தால் அதைப்பற்றிக் கவலை இல்லை. நாங்கள் கேட்க முடியாது. குறைவாக இருந்தால் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளலாம். அதில் ஒன்றும் தப்பு இல்லை.



1998 நவம்பர் 28]

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே நகராட்சியிலேயிருந்தே ஓட்டு வீட்டுக்கு 20 சதவீதம்; வாடகை வீட்டுக்கு 30 சதவீதம்; வணிக வளாகத்திற்கு 40 சதவீதம் என்று ஒரு தீர்மானமே கொண்டுவந்து நிறைவேற்றி அரசினுடைய அனுமதிக்காக அனுப்பியிருக்கிறார்கள். அதற்கு நீங்கள் அனுமதி கொடுங்கள். அனுமதி கொடுத்தால் சரிதான். (மணியடிக்கப்பட்டது) ஒன்றே ஒன்றுதான். இப்பொழுது பேரூராட்சிகளில் உள்ளவர்களுக்கு I.R.D.P. கடன் கிடையாது. கிராமங்கள் சேர்ந்துதான் இன்றைக்குப் பேரூராட்சியாக வந்திருக்கிறது. அங்கே இருப்பவர்களுக்கு வீடு கட்டுவதற்கு I.R.D.P. கடன் இல்லை. எப்படி கிராமப் பஞ்சாயத்தில் உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறோமோ, எப்படி I.R.D.P. திட்டத்தின் மூலமாகக் கடன் கொடுக்கின்றோமோ அதேபோன்று பேரூராட்சிகளிலுள்ள அந்த ஏழை மக்களுக்கும் I.R.D.P. திட்டத்தின் மூலமாக கடன் கிடைப்பதற்கும்....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** துணைத் தலைவரவர்களே, பஞ்சாயத்து ராஜ்யத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்தான் முதலிலே தொடங்கி வைத்தார்கள். ராஜீவ் காந்தி அறிவித்த திட்டத்தைத் தெரிவித்தார். அவர் தெரிவித்தபடி ஊராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்கு, நகராட்சிகளுக்கு என தனித்தனியாக மத்திய அரசாங்கத்திலிருந்து அதற்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டு அனுப்பியதன் அடிப்படையிலேதான் பேரூராட்சிக்கு இவற்றைக் கொடுப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** தலைவரவர்களே, ஒன்றை மட்டும் நான் கேட்டுக்கொள்கிறேன். மும்மொழித் திட்டத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் விட்டுவிட்டீர்கள், அதேபோன்றுதான் இதுவும். மும்மொழித் திட்டத்தை மத்திய அரசு அமல் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். நாம் இந்த மன்றத்திலே என்ன செய்தோம்? இருமொழித் திட்டத்தைத்தான் நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என்று நாம் தீர்மானம்....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அதற்கும் இதற்கும் பொருத்தமே கிடையாது. இப்படித்தான் சட்ட விதிமுறைகள் அமல்படுத்தப்பட வேண்டுமென்று விதியை அறிவித்து, அதற்கு உட்பட்டுத்தான் இயங்க முடியுமே தவிர, இந்திய அரசியல் சட்டத்திற்கு மாறாக இயங்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. தீரன். (குறுக்கீடு) 12 நிமிஷங்கள் ஆகிவிட்டன.

[ 1998 நவம்பர் 28

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** உரையை முடித்து விடுகிறேன். நமது நிதியாதாரத்திற்குத் தகுந்தபடி நாமும் சட்டங்களைத் திருத்திக் கொள்ளலாம் என்ற ஒரு விதி இருக்கிறது அல்லவா? அந்த வகையில் திருத்திக் கொண்டு.....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசுக்கு என சில விதிமுறைகளை மட்டும்தான் அங்கிருந்து அனுப்பியிருக்கிறார்கள். அதைத்தான் திருத்திக்கொள்ளலாம், மாற்றிக் கொள்ளலாம். இதிலே அது இல்லை.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** சரி, அமைச்சரவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். பெண்களும் மேயராக வரலாம்; ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த பெண்களும், ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த மற்றவர்களும் விகிதாச்சார அடிப்படையிலே மேயராக வருவதற்கு இதிலே வழிவகை செய்யப்பட்டு.....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** திருநெல்வேலி மாநகராட்சியினுடைய மேயர் யார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துகொண்டு பேச வேண்டும்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** வரலாம் என்று சொன்னேன். வர வேண்டுமென்று போட்ட சட்டத்தை வரவேற்கிறேன் என்றுதான் சொன்னேன். ஆகையினாலே இதை வரவேற்று....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமர்கிறேன் என்று சொல்லுங்கள். திரு. தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவை வரவேற்கிற அதேநேரத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு ஒரு செய்தியைக் கொண்டுவர விரும்புகிறேன். தற்போது தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலமாகத் தமிழகத்திலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் குடிநீர் வழங்குவது, கழிவு நீர் அகற்றுவது போன்ற பணிகளெல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. சென்னைப் பெருநகருக்கு மட்டும் சென்னைக் குடிநீர் வாரியத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கின்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடைய



1998 நவம்பர் 28 ] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

சட்டமுன்வடிவிலே, சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு மட்டும் 153-வது பிரிவிலே விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. ஏற்கெனவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டம் 1970-இன்படி ஏறத்தாழ 27 ஆண்டு காலமாக மிகச் சிறப்பாகக் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அந்தப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

*மு'ற்பகல் 11-15*

ஓர் உள்ளாட்சி அமைப்பிற்கு மேற்பட்ட இரண்டோ அல்லது இரண்டுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் வழங்குவதாக இருந்தாலும் சரி, அல்லது சிறிய மற்றும் பல ஊராட்சிகளை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டமானாலும் சரி அல்லது உலக வங்கி நிதியுதவியோடு செய்யப்படும் பெரிய திட்டமாக இருந்தாலும் சரி, அவையெல்லாம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவே செய்யப்பட்டு வருகின்றன. அதனால்தான் சாத்தியப்படும் என்கின்ற நிலைமையினாலே. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற ஒரு மைய அமைப்பினால் மட்டுமே இத்தகைய செயல் திட்டங்களைச் செய்ய முடியும். காரணம் என்னவென்று சொன்னால், ஒரு பகுதியிலே குடிநீர் வசதி செய்து தர வேண்டுமென்று சொன்னால்,, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, வருவாய்த் துறை, இரயில்வே துறை, உள்ளாட்சித் துறை, மின்சாரத் துறை போன்ற பல்வேறு துறைகளின் அனுமதிகளையும் பெற வேண்டியிருக்கிறது. அதுமட்டுமின்றி, நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலே, தொலைதூரத் நீராதாரத்தைப் பெற்றிருக்கிறதால் நீர்வளம் குறைவாக இருக்கிற காரணத்தால் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியிருக்கிற காரணத்தால் இதைப் போன்ற பணிகளைச் செய்வது குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச் செய்வதுதான் இதுவரையிலே சிறப்பாக அமைந்திருக்கிறது. சில சமயங்களிலே 2, 3 மாவட்டங்களினுடைய எல்லைகளைக் கடந்துகூட, குடிநீர் வசதி செய்து தர வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. நான் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவென்று சொன்னால், தற்போதுள்ள இந்தச் சட்டத் திருத்தத்திலே 1970 ஆம் ஆண்டிலேயிருந்து செயல்பட்டு வருகின்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய பணியாளர்கள், ஏறத்தாழ 2,000 பொறியாளர்களும் மற்றும் ஏறத்தாழ 10,000 அலுவலகப் பணியாளர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு பணியிலே ஏதேனும்

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1998 நவம்பர் 28

பிரச்சினைகள் ஏற்படுமானால். அவர்களுக்கு இந்தச் சட்ட திருத்தத்தின் மூலமாக பணிப் பாதுகாப்பு ஏற்படுத்தித்தர, வழிவகை காணப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதைப்போல, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டமோ அல்லது பெரிய குடிநீர்த் திட்டங்களோ ஏற்கெனவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச் செய்யப்பட்டு வருவதைப்போல, தொடர்ந்து செய்வதற்கு வழிவகை இருக்கிறதா என்பதையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே நகராட்சிப் பகுதிகளிலே ரூபாய் 50 இலட்சத்திற்கு உட்பட்ட குடிநீர்த் திட்டங்களை அவர்களே நிறைவேற்றிக்கொள்ளலாம் என்ற அனுமதி இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இத்தகைய திருத்தங்களைச் செய்கின்றபோது, அந்தப் பணியாளர்களுக்கு எந்தவிதமானப் பிரச்சினைகளுக்கும் வராத அளவுக்கு பாதுகாப்பு இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் அல்லது தனித் திட்டம் அல்லது குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச் செய்யப்படுகிற திட்டங்கள் எதுவாக இருந்தாலும், திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறபோது, இந்த ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு மாற்றப்பட்டு, Special Division ஏற்படுத்தப்பட்டு ஏதாவது செய்வோமே தவிர, யாரையும் வீட்டிற்கு அனுப்புவதாகவோ அல்லது வேலையில்லை என்று சொல்வதாகவோ நிச்சயமாக இந்த அரசு செய்யாது என்பதை மீண்டும் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தினை வரவேற்று ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சென்னை மாநகராட்சி சொத்து வரி சீராய்வுக் குழு என்ற ஒரு குழுவை அமைத்து, ஏற்கெனவே வரி கட்டாதவர்கள், வரி ஏய்ப்பு செய்பவர்கள் ஆகிய இவர்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் வரி அதிகமாகச் செலுத்துகிறவர்களை ஒழுங்காகச் சீரமைத்தல் ஆகியவற்றைக் கவனித்து 'சொத்து வரியை' சிறப்பாகக் கவனித்து, ஒரு சிறப்பான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், அதை அரசியலாக்கி, ஏதோ



1998 நவம்பர் 28] [திரு. செங்கைகை சிவம்]

சென்னை மாநகராட்சியில் இருப்பவர்களுக்கு 100 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் அளவுக்கு சொத்து வரியை ஏதோ மாநகராட்சி உயர்த்தியிருப்பதாகச் சொல்லி, மக்கள் மத்தியிலே தவறான எண்ணத்தை ஏற்படுத்தி.....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I am standing on a point of order. மாண்புமிகு உறுப்பினர் செங்கை சிவம் அவர்கள் Select Committee-யிலே ஓர் உறுப்பினர் என்று கருதுகிறேன். Select Committee-யிலே உறுப்பினராக உள்ள ஒருவர் இந்த அவையில் விவாதிக்கக் கூடாது என்பது நாம் பின்பற்றி வருகிற மரபு. ஆகவே அந்த மரபை இந்த அவை மீறலாமா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**திரு. செங்கை சிவம்:** உறுப்பினர்களால் எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு பதில் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்பதால் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே இதை ஒரு அரசியலாக்கி.....

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசக் கூடாது என்பது மரபல்ல. Select Committee-யிலே இருப்பவர்கள், அதனுடைய விவாதத்திலே முழுமையாகக் கலந்து கொண்டிருப்பார்கள். மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் Select Committee உறுப்பினர்கள் பேச வாய்ப்பளிக்கப்படுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** It is only a convention. Thiru Chengai Sivam.

**திரு. செங்கை சிவம்:** சென்னையின் சார்பாக நான் ஒருவன்தான் பேசுகிறேன். ஆகவே, அந்தச் சீராய்வுக் குழு அமைக்கப்பட்டதன் நோக்கமே இந்த அடிப்படையிலேதான் அமைந்தது. இதன்மூலம் ஏதோ 100 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் நம்முடைய மாநகராட்சிக்கு வருவாய் வந்துவிடவில்லை; ஒழுங்குபடுத்துவதற்காகத்தான் இது செய்யப்பட்டது. எனவே, தயவுகூர்ந்து அரசியலாக்க வேண்டாம். இதை சென்னை நகர மக்கள் நிச்சயம் ஏற்கமாட்டார்கள். அதை கடந்த காலத் தேர்தல்கள் நினைவுபடுத்துகின்றன என்பதை மட்டும் அந்த அரசியல் கட்சிகளுக்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

இன்றைக்கு இன்னொரு கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு ஊழியர்கள் சம்பளத்திற்கு ஈடாக மாநில அரசு ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்க வேண்டுமென்று நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் முடிவு எடுத்து அதற்கான எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து, மாநில அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தை ஏற்றிக்கொடுத்து இருக்கிறார்கள். அப்படி மாநில அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தை ஏற்றிக் கொடுக்கிற நேரத்தில், மாநகராட்சியினுடைய பணியாளர்களுக்கும் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தாக வேண்டும். இதன்மூலம் மாநகராட்சிக்கு 60 கோடியிலிருந்து 70 கோடிவரை செலவாகும். இன்றைக்கு மாநகராட்சி மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பது உங்களுக்கெல்லாம் தெரியும். சிங்கப்பூரைப்போல, இந்தோனேஷியாவைப்போல, ஜப்பானைப்போல, சென்னையிலே இன்றைக்கு 11 மேம்பாலங்கள் மிகச் சிறப்பாக அமைக்க வேண்டும் என்பதற்காக, நமமுடைய வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்கள் அதற்கான பெரு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். 11 மேம்பாலங்களைக் கட்டுவதற்கு 100 கோடி ரூபாய் செலவாகும். அந்த 100 கோடி ரூபாயை Hudco மூலமாகவோ அல்லது மற்ற நிறுவனங்கள் மூலமாகவோ கடனாகப் பெற்று இப்போது அந்தப் பணிகள் மிக வேகமாக நடைபெறுகின்றன. வருகின்ற 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பை இலக்காகக் கொண்டு, இப்படிப்பட்ட மேம்பாலங்கள் கட்டப்படவில்லை என்று சொன்னால், சென்னை மாநகரம் மிகுந்த நெரிசலுக்குரிய இடமாக மாறக்கூடிய ஒரு சூழ்நிலை வரும். எனவே, அதைத் தவிர்ப்பதற்கு, இப்போதே பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிற மேயர் அவர்களை இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் பல சட்டமன்றக் குழுக்களில் இருக்கிறோம்; பல மாநிலங்களுக்கு நாம் சென்று வந்திருக்கிறோம்; கல்கத்தா, மும்பை போன்ற பல மாநகரங்களுக்குச் சென்று வந்திருக்கிறோம். இன்றைக்கு சென்னையிலே குடிசைப் பகுதிகள் நிறைந்த என்னுடைய தொகுதியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களுக்குத் தெரியும்; என்னுடைய தொகுதியில் வியாசர்பாடி பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருந்தது; ஆனால், அதை இப்போது வந்து பாருங்கள்; ஓர் ஊசி போட்டால்கூட சாலையில் தெரியக்கூடிய அளவுக்கு. the conversion of tube-lights to sodium vapour lamps—அங்கே





சோடியம் ஆவி விளக்குகளை எல்லாம் போட்டு மிகப் பிரகாசமாககக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அதற்காக சற்றேறக்குறைய 75 ஆயிரம் குழல் விளக்குகளை மாற்றி சோடியம் ஆவி விளக்குகள் சென்னை மாநகரத்தில் போடப்பட்டு இருக்கின்றன; இன்னும் 1000 அல்லது 2000 விளக்குகள் போட வேண்டி இருக்கும் என்று கருதுகிறேன்; அதையும் உடனடியாகப் போடுவதற்காக மேயர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு அவல நிலையைச் சொல்ல நான் விரும்புகிறேன். இதை எல்லா உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். இந்தியாவிலே இருக்கிற அனைத்து மாநகராட்சிகளில் இருக்கிற மேயர்களுக்கும் கவுன்சிலர்களுக்கும் சம்பளம் உண்டு; ஆனால் நம்முடைய சென்னை மாநகராட்சியிலும், நம்முடைய மாநிலத்தில் இருக்கிற 6 மாநகராட்சிகளிலும் இருக்கிற மேயர்களுக்கும் கவுன்சிலர்களுக்கும் சம்பளம் கிடையாது. அவர்களுக்கு 100 ரூபாய் பேட்டா வழங்கப்படுகிறது; அது எந்தக் காலத்தில் போடப்பட்டதோ? அந்த 100 ரூபாயை வைத்து அவர்கள் போன் செய்வார்களா அல்லது டிவிஷனை சுற்றிப் பார்ப்பார்களா? ஆனால், இன்றைக்கு சென்னை மாநகராட்சி கவுன்சிலர்கள் எல்லாம் பெரும்பாலும் எங்களுடைய வேலைகளைக் குறைத்து இருக்கின்றார்கள். நம்முடைய மேயர் அவர்களும் நம்முடைய வேலைகளைக் குறைத்து இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கு பேட்டாவை உயர்த்திக் கொடுக்க வேண்டும்; சம்பளமும் கொடுக்க வேண்டும். நம்முடைய மேயர் அவர்களுக்கு P.A. மட்டும் கொடுத்து இருக்கிறார்கள்.....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் தேர்தலில் நின்றபோது இதையெல்லாம் ஒரு கோரிக்கையாக வைத்து தேர்தல் நடத்தி இருந்தால் நன்றாக இருந்திருக்கும். என்னுடைய வேண்டுகோள், இனிமேல் வரப்போகிற தேர்தலிலாவது இந்தமாதிரி கோரிக்கைகளை அவர்கள் வைப்பார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தேர்தலில் நிற்பதற்கு முன்னால் வேலையை resign பண்ணிவிட்டு அவர்கள் வந்துவிட்டார்கள்.

**திரு. செங்கை சிவம்:** இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், மற்ற மாநிலங்களிலே சம்பளம் கொடுக்கிறார்கள். இங்கே மத்திய அரசு ஊழியர்களுக்கு ஈடாக மாநில அரசு ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறதா இல்லையா? அதுபோல் மாநகராட்சி ஊழியர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமா இல்லையா? அதுபோல, மற்ற மாநில மாநகராட்சிகளில் இருப்பதைப்போல நம்முடைய மாநகராட்சிகளிலும் சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். எனவே, கருணை உள்ள நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்தக் கோரிக்கையை கருணைகூர்ந்து ஏற்று செயல்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி திருத்த மசோதாமீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு நன்றி கூறி, ஒருசில கருத்துக்களை இங்கே எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒட்டப்பிடாரம் தொகுதியில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக கொடியங்குளத்தைச் சுற்றி இருக்கக்கூடிய 12 கிராமங்களுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில் ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக செலவழித்து உருவாக்கப்பட்ட அந்தத் திட்டம் கடந்த 6 மாத காலமாக, தரமற்ற பைப்புகள் பதிக்கப்பட்டதன் காரணமாக செயல்படாமல் இருக்கிறது என்பதை இந்த அவையின் மூலமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-25*

ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம் ஆகிய பகுதிகளிலுள்ள 144 கிராமங்களும் பயனடையக்கூடிய வகையில் கொண்டுவரப்பட்டுள்ள சீவலப்பேரி குடிநீர்த் திட்டம், ஒட்ட ப்பிடாரம் ஒன்றியம், கயத்தாறு ஒன்றியம் மற்றும் விளாத்திகுளம் பகுதியிலுள்ள அனைத்து கிராமங்களும் ஏற்கெனவே திட்டமிட்டபடியே பயனடையக்கூடிய வகையிலே அமைய வேண்டுமென்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தீர்மானத்தின்மீது பேசுகின்றபொழுது, நான் வேறு ஒரு மிக முக்கியமான பிரச்சினையைப் பற்றி, அது நகராட்சி பற்றிய விஷயமாக





இல்லாவிட்டாலும்கூட, சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டு தமிழகத்தில் ஏறக்குறைய பல இலட்சம் ஆடுகள் நீலநாக்கு நோயால் பாதிக்கப்பட்டு இறந்தன. அந்த இலட்சக்கணக்கான ஆடுகள் இறந்தவுடனேயே தமிழக அரசின் மூலமாக ஆடுகளை இழந்தவர்கள் அத்தனை பேருக்கும் நட்டஈடு வழங்கப்படும் என்ற முதல் அறிக்கை வந்தது. அதற்குப் பிறகு சில நாட்களிலேயே சிறு விவசாயிகளுக்கு மட்டும் நட்டஈடு தரப்படும் என்று அறிவிப்பு வந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Selecte Committee கொடுத்திருக்கிறது. அதன் திருத்தப்பட்ட சட்டமுன்வடிவைக் சொன்னால் நன்றாக இருக்கும். அடிப்படையில் உங்கள் கருத்தைச் இன்னும் பல்வேறு உறுப்பினர்கள் பேச வேண்டும். இப்படியே நேரத்தை நீட்டித்துக் கொண்டே போனால், மற்றவர்களுக்குப் பேச வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இதைப் ற்றிப் பேசுவதற்காகத்தான் அனுமதி வாங்கினேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை நீங்கள் கவன ஈர்ப்பாகக் கொடுத்துவிட்டுப் பேசலாம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இதைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் அனுமதி பெற்று பேசுகிறேன். இப்பொழுது நட்டஈடு பெற்றிருப்பவர்கள்—கொடுக்கப்பட்டிருப்பது—ஒருசில ஆயிரம் பேர்கள் மட்டும்தான். ஆடுகளை இழந்த இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு, நட்டஈடு கொடுக்க வேண்டுமென்று அரசு அறிவித்துவிட்டு, ஒருசிலருக்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் வேண்டப்பட்டவர்களுக்கு அல்லது ஆளும்கட்சிக்கு நெருக்கமானவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருப்பதாக சில புகார்கள் எல்லாம் எழுந்திருக்கின்றன. எனவே, ஒட்டுமொத்தமாக முறையாக கணக்கு எடுத்து, யார் யாரெல்லாம் ஆடுகளை இழந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு உரிய நட்டஈட்டை இந்த அரசு கொடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளுக்குச் செல்கின்றபோது, எல்லா இடங்களிலும் இதே புகார்கள் வருகின்றன. (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** இந்த மாதிரியெல்லாம் பேசக்கூடாது.

[ 1998 நவம்பர் 28

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நானும் அவருக்குச் சொல்லிவிட்டேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அப்புறம் எங்களுக்கு நேரம் இல்லாமல் போய்விடும் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் சட்டமுன்வடிவையொட்டி உங்கள் கருத்தைச் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதற்கு அனுமதி பெற்றுதான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் மற்றவற்றைப்பற்றி பேசுவதாக இருந்தால், தனியாக கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துவிட்டு, அமைச்சரிடம் பதில் வாங்கிக்கொள்ளலாம் அல்லது நேரடியாகப் போய் கேளுங்கள். இப்பொழுதுள்ள பிரச்சினை, ஆய்வுக்குழுவின் திருத்தியமைக்கப்பட்ட சட்டமுன்வடிவு இருக்கிறது. அதையொட்டிப் பேசுங்கள். நீங்கள் அதைப்பற்றி பேசினால் நான் அனுமதிப்பேன். வேறு ஏதாவது பேசினால் நிறுத்திவிடுவேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இது கூட்டுப் பொறுப்புதானே. எல்லா அமைச்சர்களும் பதில் சொல்ல....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கூட்டுப் பொறுப்புதான். அது அதற்கு என்று நேரம் இருக்கிறது. இந்த நேரத்தில் வந்து, Selecte Committee திருத்தப்பட்ட சட்டமுன்வடிவில் மற்ற விவகாரங்களைப் சக் கூடாது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவை என்பது கூட்டுப் பொறுப்பாக இருந்தாலும், எதைப் பற்றி வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசலாம் என்ற ஒரு நடைமுறை நம்முடைய அவையில் இல்லை. இன்றையதினம் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சருடைய சட்டமுன்வடிவைப் பொறுத்துத்தான் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுடைய பிரச்சினை எதுவாக இருந்தாலும், எழுதிக் கொடுத்தால் அரசு அதற்கு பதில் தரத் தயாராக இருக்கிறது. அவர் பேசுகிறேன் என்று சொல்ல ஆரம்பித்து, பிறகு ஆளும்கட்சிக்காரர்கள் யாருக்குப் பரிந்துரை செய்கிறார்களோ அவர்களுடைய ஆடுகளுக்குத்தான் இழப்பீட்டுத் தொகை தரப்படுகிறது



1998 நவம்பர் 28 ] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

என்று சொல்வதெல்லாம் உண்மையிலேயே உண்மைக்குப் புறம்பானது. இந்த விவாதத்தை அனுமதித்துக்கொண்டே போனால், நிச்சயமாக இந்த அவையின் நேரம், இன்றைய அலுவல்களை முடிப்பதற்குப் போதாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி சட்டமன்றப் பேரவை விதிகள் என்ற புத்தகம் இருக்கிறது. முதலில் நீங்கள் அதை முழுவதும் படித்துவிட்டு வந்து பேசுங்கள், இப்பொழுது உட்காருங்கள். அடுத்து திரு. டி. மணி.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி நின்றுகொண்டே இருந்தார்.)

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின்மீது சில கருத்துக்களை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, உள்ளாட்சி மன்றங்களின் கடந்த இரண்டு ஆண்டுகளின் அனுபவத்தை வைத்துக்கொண்டு, சில யதார்த்தமான நிலைகளை நான் இங்கே அமைச்சருக்கும், அரசுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த உள்ளாட்சி மன்றங்கள் என்று வருவதற்கு முன்னால், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொள்ளும் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெறும். (குறுக்கீடு)

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் கிருஷ்ணசாமி, ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது எழுந்து நின்று இடையூறு செய்வது நன்றாக இல்லை. முதலில் விதிமுறைகளையும், மரபுகளையும் கட்டிக் காக்க வேண்டும், உட்காருங்கள். உங்களுக்கு அமைச்சரின் விளக்கம் தேவை என்றால் தனியாக ஒரு கவன ஈர்ப்பு கொண்டு வாருங்கள். அதற்கு, இது நேரம் அல்ல.

**திரு. ஜி. பழனிசாமி:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன Point of order ? சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் கிருஷ்ணசாமி பேச வேண்டும் என்று சொல்லுகிறார். இது உள்ளாட்சி அமைப்புகள் மீதான சட்டமுன்வடிவு. இதில் கால்நடைத் துறை அமைச்சர் இலாகா பற்றிப் பேசுவது

அவைக்கு ஒரு தவறான முன் உதாரணமாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி இது சட்டமுன்வடிவு பற்றிய விவாதம் என்று தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறார் என்று பத்திரிகைகளில் நாளையதினம் செய்திகள் வந்தால், தெரியாத்தனமாக அவர் நடந்து கொண்டிருக்கிறார் என்ற அர்த்தத்தில் அதன் பொருள் அமைந்துவிடும். ஆகவே, அப்படி இல்லாமல் சம்பந்தப்பட்ட சட்டமுன்வடிவிலே அவர் பேச வேண்டும். அவர் பேச விரும்பும் பொருள் குறித்து தனியாக ஒரு கவன ஈர்ப்பு கொடுத்து, அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பது நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனுமதி பெற்று பேசுகிறேன், அனுமதி பெற்று பேசுகிறேன் என்று சொல்லுகிறார். அனுமதி பெற்றது இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த சட்டமுன்வடிவுபற்றி விவாதிப்பதற்காகத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி அனுமதி பெற்றேன் என்று சொல்லுவது இந்தச் சட்டமுன்வடிவில் பேசுவதற்காகத்தான். வேறு ஏதாவது தனியாக் அறிவிப்பு கொடுத்தால் அதை Zero Hour-ல் எடுத்துக்கொள்வார்கள். இப்போது அது இல்லை, உட்காருங்கள். நீங்கள் தெரியாமல் பேசுகிறீர்கள் என்று பத்திரிகைகளில் செய்தி வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்லுகிறேன். பேரவை விதிமுறைகள் குறித்த புத்தகத்தைப் படித்துவிட்டு வாருங்கள். திரு. டி. மணி. தொடரலாம்.

**திரு. டி. மணி:** உள்ளாட்சி மன்றங்களுடைய கடந்த இரண்டு ஆண்டு கால அனுபவத்தை வைத்துக்கொண்டு நாம் பார்த்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் அமைப்பு என்ற அடிப்படையிலே, மாதத்திற்கு ஒரு முறை, இரண்டு மாதத்திற்கு ஒரு முறை என்று கூட்டம் நடத்துகின்ற D.D.C. என்ற ஓர் அமைப்பு இருந்தது. எல்லா அதிகாரிகளும் அந்தக் கூட்டத்திற்கு வருவார்கள. எந்த எந்தக் காரியங்கள் நடந்தன, எவை எவை நடக்கவில்லை என்று நீண்ட தெளிவான விவாதம் நடத்துவதற்கு அது பயனுள்ளதாக இருந்தது. ஆனால், இப்போது நம்முடைய ஜனநாயக சம்பிரதாயப்படி, சட்டத்தின்படி மாவட்டப் பஞ்சாயத்து என்று வந்ததற்குப் பிறகு ஏற்பட்டிருக்கின்ற ஒரு கசப்பான அனுபவம் என்னவென்றால், எல்லா அதிகாரிகளும் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை. ஏதோ பெயரளவுக்கு ஒருசில அதிகாரிகள் வந்து, உறுப்பினர்கள் கேட்கும்





விவரங்களைச் சொல்லிவிட்டுப் போகிறார்களே தவிர, முழுப் பொறுப்பு என்பது சரிவர இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதை எப்படி சரி செய்வது என்பது குறித்து ஆராய வேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டத்தினுடைய பின்னணியில் பேரூராட்சிகள் என்றும் சிற்றூராட்சிகள் என்றும் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் கடையங்காடு என்ற பேரூராட்சி இருக்கிறது. அந்தப் பேரூராட்சிக்கும், அதற்குப் பக்கத்தில் இருக்கின்ற சிற்றூராட்சிக்கும் எந்த வேறுபாடும் இல்லை. அது முழுமையாக மலைப்பாங்கான பகுதியாகும். அது பேரூராட்சி என்ற காரணத்தால் அங்குள்ள பழங்குடியினர், ஆதிவாசிகள் மற்றும் ஆதிதிராவிட மக்களுக்கு எந்தவிதமான பயனும் சென்று அடைவது இல்லை. சட்டம் குறுக்கே இருக்கிறது. அதை எப்படி நாம் சரி செய்யப் போகிறோம்?. எப்படியும் மின்சாரம் கொடுத்தாக வேண்டும். ஏற்கெனவே நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அப்படிப்பட்ட பகுதிகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் தவறு இல்லை என்று சொல்லியிருந்தாலும்கூட, சட்டச் சிக்கலின் காரணமாக, பேரூராட்சி என்ற காரணத்தால், ஆதிவாசிகள், பழங்குடியினருக்குக்கூட மின்சாரம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியாக இருந்தாலும், ஊராட்சியாக இருந்தாலும் மின் இணைப்பு கொடுப்பதில் ஒன்றும் தவறு இல்லை. அதற்கென தனித்தனி கட்டணங்கள் இருக்கின்றன. அதை விதித்து, கம்பத்திற்கு இவ்வளவு தொகை என்று கட்டி மின் இணைப்பு கொடுக்கலாம், அதை விஸ்தரிக்கலாம், ஒரு விளக்கும் போடலாம். அதில் ஒன்றும் மாறுதல் இல்லை. ஆனால் கிராமப் பஞ்சாயத்தில் நடைபெறுகின்ற பல திட்டங்களை பேரூராட்சிக்கும் நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லுவதுதான் சட்டப்படி செய்ய முடியாததாகும். அதனால்தான் நாங்கள் அவற்றைச் செய்ய முடியாமல் இருக்கிறோம்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும் நான் தெளிவுபடுத்த விரும்புவது, பேரூராட்சி என்ற காரணத்தால் மின்சாரத் துறை மறுக்கிறது. நான் அந்த அதிகாரிகளிடத்தில் மீண்டும் சொன்னேன். பழங்குடியினருக்கு தனிச் சலுகை, தனி உரிமை உண்டு என்றும், அந்த அடிப்படையில் பரிசீலிக்க வேண்டும் என்றும் நான் கருத்து தெரிவித்தேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் யாராவது மின் இணைப்பு கேட்டாலோ அல்லது தெரு விளக்கு வேண்டுமென்று கேட்டாலோ தர முடியாது என்று சொல்லுவது இல்லை. அதேபோல பழங்குடியினர் என்று பெயர் வைத்துக்கொண்டு, ஒரு பேரூராட்சியில் 20 கம்பங்களை நட்டு மின் விளக்கு தாருங்கள் என்று கேட்டாலும் நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் அதற்குரிய கட்டணத்தைச் செலுத்த வேண்டும். அந்தக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு பேரூராட்சிகள் முன்வருவது இல்லை. எனவேதான், கொடுக்க முடியவில்லையே தவிர, கொடுக்கக்கூடாது என்பதல்ல இந்த அரசாங்கத்தின். நிலை.

*முற்பகல் 11-35*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பேரூராட்சியிலே வந்ததனால்தான் இந்தச் சிக்கல். அவை சிற்றூராட்சிகளாக இருந்திருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. அதற்கு விதிமுறையை . . .

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, இதற்காக ஏதாவதொன்று செய்யக்கூடாதா, ஒரு சட்டம் இயற்றக்கூடாதா என்று கேட்டு, நானும் பல உறுப்பினர்களுக்குப் பதில் அளித்திருக்கிறேன். சட்டத்திற்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டுமே தவிர, புதிதாக நாம் ஏற்கமுடியாது என்று சொல்லியாகிவிட்டது. ஆனால், இதற்கிடையில், பேரூராட்சிகள் விரும்பினால், வருமானம் குறைவாக இருப்பதையொட்டியும், ஏற்கெனவே அவை பேரூராட்சிகளாக ஆக்கப்பட்டது தவறு என்பதை உணர்ந்தும், அவற்றைச் சிற்றூராட்சிகளாக ஆக்குவதற்கு முடிவெடுத்து, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுப்பப்படுமானால் அதை ஏற்றுக்கொண்டு, அவற்றைச் சிற்றூராட்சிகளாக்குகிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து, அதை இந்த அவையில் அறிவித்தேன் அப்படி அறிவித்ததற்குப் பிறகு, அதற்குரிய திட்டப்படி Notice அனுப்பப்பட்டது. ஏறத்தாழ 102 பேரூராட்சிகளுக்கு மேல் தீர்மானம் போட்டு அனுப்பினார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பேரூராட்சிகளெல்லாம் ரொம்ப நலிவாக இருப்பதைக் கருத்தில்கொண்டு, சிறப்பாக ஒரு நிதியை ஒதுக்கி, அவர்களுக்குக் கொடுங்கள் என்று எங்களுக்கு ஆணையிட்டு, நாங்களும் கொடுத்தோம். உடனே அதைப் பார்த்துவிட்டு, இப்படி நிதி வந்துகொண்டேயிருக்கும்





என்று கருதினார்களோ, என்னவோ, 102 பேரூராட்சிகளில், ஏறத்தாழ 70 பேரூராட்சிகளுக்கு மேல்—மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களுடைய மாவட்டத்தில்தான் அதிகமான அளவில் பேரூராட்சிகள் இருக்கின்றன—நாங்கள் பேரூராட்சிகளாகவே இருக்கிறோம்; ஊராட்சிகளா வர மாட்டோம் என்று தீர்மானம் போட்டு நிறைவேற்றி எங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். நாங்கள் என்ன செய்வது? சட்டத்திற்குட்பட்டு, செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்கில் நாங்கள் பண்ணுகின்றபோது, இப்படி இடையூறு செய்தால்; யார் தவறு செய்கிறார்கள்? தயவு செய்து சொல்லுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெருவிளக்கு பொருத்துவது என்பது பரவலாக தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பிரச்சினை. இதிலே, அதிகமான கட்டணம் செலுத்த வேண்டும் என்று மின் வாரியம் சொல்வதற்குக் காரணம், மின் வாரியம் அந்த நஷ்டத்தைத் தாங்கிக்கொள்ள முடியாது. அந்தக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு உள்ளாட்சி அமைப்புகளிடம் போதிய நிதியாதாரம் இல்லை. ஆகவேதான், அரசிடமிருந்து, அரசு நிதியிலிருந்து 75,000, 80,000 விளக்குகள் பொருத்துவதற்காக தனி நிதியொதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இதிலே இரண்டு பிரச்சினைகள். ஏற்கெனவே இருந்த மின் கம்பத்தில் மின் விளக்கு பொருத்த வேண்டுமானால், மின் வாரியத்திற்கு அதிகச் செலவு ஏற்படாது. அந்த விளக்கைப் பொருத்துவதற்கு 20 அல்லது 30 ரூபாயைச் செலுத்தினால் போதும் என்ற முறை முன்பு இருந்தது. அதை நீங்கள் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே இருக்கக்கூடிய கம்பத்தில் விளக்குகளைப் பொருத்துவதற்கு 100 அல்லது 120 ரூபாய்தான் ஆகும். அதை உள்ளாட்சி அமைப்புகள் கட்டினால், அதைப் பொருத்துவதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டும். புதிதாக மின் கம்பங்களை அமைத்து, விளக்குகள் போட வேண்டுமானால், அரசாங்க நிதியுதவியை, மானியமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொக்கர்

அவர்கள் சொல்வது ஒரு நல்ல யோசனை. மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், புதிதாக கம்பங்கள் வைத்து, புதிதாகவே இணைப்பு கொடுப்பதற்கு என்று ஒரு கட்டணத்தை நாங்கள் வசூல் செய்கிறோம். எங்கோ ஒரு கம்பம் நடப்பட்டிருந்து, அதற்கு மின் இணைப்பும் இருந்து, பல்பு மட்டும் போட வேண்டும் என்ற ஒரு நிலை இருக்குமானால், இப்போது பல்புகளையெல்லாம் அந்தந்த ஊராட்சிகளே, பேரூராட்சிகளே வாங்கித் தந்துவிடுகின்றன. அதற்குத் தனியாகக் கட்டணம் வசூலிப்பதில்லை, அதில் பிரச்சினையில்லை. ஆனால், பிரச்சினை எங்கே வருகிறதென்றால், சில இடங்களில் கம்பம் இருக்கிறது; மின் இணைப்பு இல்லை. அப்படிப்பட்ட இடங்களிலே மின்சார இணைப்பு கொடுப்பதற்கு நாங்கள் கட்டணத்தை வசூல் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், வெறும் பல்பை மட்டும் மாற்றுவதற்கு மின்சார வாரியம் எங்காவது பணம் கட்ட வேண்டுமென்று சொன்னால், அதைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதையும்- இரண்டையும்- விட்டுவிட்டு, இடையிலே நான் ஒன்று சொல்கிறேன். அதாவது, பல்பை மாட்டுவதற்கு உங்களை அழைக்கவில்லை. அதற்கு அங்கே ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால், ஒரு கம்பம் இருக்கிறது. அந்தக் கம்பத்திலே வளைவான ஒரு fitting வைத்து, அதோடு சேர்த்துப் போடுவதற்கு அதிகமான தொகை கேட்கிறார்கள். எங்களால் கட்டமுடியவில்லை என்பது அவர்களுடைய வாதம். இப்போது பல்பை போடுவதாக அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். நாங்கள் இரண்டு பேரும் பேசிக்கொண்டு இருக்கிறோம். அவர்கள் துறையும், எங்கள் துறையும் கலந்து பேச வேண்டும் என்பது முதலமைச்சருடைய ஆணை. நாங்கள் இரண்டு பேருமே மத்தியஸ்தத்துக்கு நடுவிலே வந்தோம். ஒன்று முடிந்திருக்கிறது. அவர் சொல்கின்ற கோரிக்கையும் முடிவதுமாதிரி இருக்கிறது. பேசிவிட்டு, இந்த சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்தவுடன் இதனை முடிக்கிறோம் என்ற ஒரு உறுதியினைத் தருகிறேன்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி, சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.





**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** துணைத் தலைவரவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இராமன், உட்காருங்கள். திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். அதிலே ஒன்று, பேரூராட்சியினுடைய அதிகாரிகள்.—ஏற்கெனவே அரசாங்கம் கொஞ்சம் பணம் கொடுத்து உதவியது. இதனால் அதைத் தொடர வேண்டும் என்பது அல்ல. முழுக்க முழுக்க நடந்திருக்கிற ஒரு சூழ்ச்சி என்னவென்றால், இந்தப் பேரூராட்சியினுடைய அதிகாரிகள். தங்களுடைய பணியைத் தொடர முடியாது என்பதால், இவர்கள் சில பஞ்சாயத்திலே சில உறுப்பினர்களைப் பிடித்து, தீர்மானத்தை இப்படி மாற்றி வைத்து இருக்கிறார்கள்; அது சரியல்ல. இந்தப் பஞ்சாயத்தினுடைய அலுவலர்கள்தான் இந்த முறைகேடான நடவடிக்கைகளுக்குத் துணை போய் இருக்கிறார்கள் என்பதை என்னுடைய அனுபவத்தின் வாயிலாக இங்கே சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, சிற்றூராட்சிகள் பூராவையும் ஊராட்சி ஒன்றியம்தான் கண்காணிக்கிறது. முறைகேடுகள் நடந்தால் என்னவென்று கண்டுகொள்வதில்லை. ஊராட்சி ஒன்றியத்தினுடைய அதிகாரிகள் கணக்கை ஒருநேரம் தணிக்கை செய்கிறார்கள். மருதங்கோடு சிற்றூராட்சியிலே இப்படியொரு கோளாறு வந்து, ஏற்கெனவே விசாரணையில் இருந்து வருகிறது. இந்தப் பணம் செல்கிறபோது, இந்தப் பணத்தை ஏதோ தாராளமாக, முறைகேடாகப் பயன்படுத்துகிற ஒரு போக்கு இருக்கிறது. அதை தடை செய்வதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

நம்முடைய நகராட்சிகளைப் பொறுத்தமட்டில், ஏற்கெனவே பல்வேறு சட்டத் திருத்தங்கள் எல்லாம் வந்திருந்தாலும், இப்போது 10 இலட்சம் ரூபாய்க்கான ஒரு வேலையை எங்கள் பகுதியிலுள்ள நகராட்சி செய்ய வேண்டுமென்று சொன்னால், அந்த நகராட்சி முறையாகத் தீர்மானம் நிறைவேற்றி, அதிலே இருக்கின்ற பொறியாளர்கள் எல்லாம் பணியை முடித்ததற்குப் பின்னால், அதை எடுத்துக்கொண்டு, நெல்லை மாவட்டத்திலே இருக்கின்ற R.D.-யினுடைய அனுமதி பெற வேண்டும்; மூன்று மாதங்கள் அதற்குப் பின்னால் நடக்க வேண்டும். இதற்கு ஒரு வரம்பை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[ 1998 நவம்பர் 28

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன். (குறுக்கீடு) திரு. டி. மணி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. டி. மணி:** 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் ரூபாய் வரை அந்தந்த நகராட்சிகளினுடைய பொறியாளர்களே பணியைச் செய்வதற்கு உரிமையைத் தர வேண்டும். இதன்மூலம் வேலைகளைத் துரிதமாக செய்வதற்கு முடியும்.

இன்னொன்று, களியக்காவிளை பேரூராட்சியினுடைய கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முந்தைய சட்டமன்றக் கூட்டத்தில், டிசம்பரில் தண்ணீர் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பழைய ஆட்சிக் காலத்திலே நடந்த அநியாயத்தால், குழாய்களைப் பதித்ததிலே நடந்த கொள்ளை காரணமாக, குழாய்களை எல்லாம் புதுப்பிக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. எனவே, அதையும்கூட கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பகுதி மிக வறண்ட பகுதி. ஆகவே, குடிநீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன். (குறுக்கீடு) டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், நீங்கள் உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. சி. வேலாயுதன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் குறித்த சட்டமுன்வடிவை வரவேற்பதோடு, அனுபவ ரீதியாக உள்ள ஒருசில பிரச்சினைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

தெருவிளக்கு என்பது, பஞ்சாயத்திற்கும் மின்சார வாரியத்திற்கும் இடையே இருக்கக்கூடிய பணியானது, கிராமப்புறங்களிலே, "நாயைக் கண்டால் கல் லக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்" என்று சொல்வார்களே, அந்த நிலையில் இருக்கிறது. காரணம், மின்சார வாரியத்தினுடைய ஆட்கள் பஞ்சாயத்திலிருந்து குழல் விளக்குகளைப் பெற்று அதைப் பொருத்த வேண்டும். அதற்கு பஞ்சாயத்தினுடைய உதவியாளர்கள் உடன் செல்ல வேண்டும் என்ற நிலை இருக்கிறது. தெருவிளக்கு இல்லை என்று பஞ்சாயத்திலே சொல்லும்போது, மின்சார வாரிய ஆட்கள் வரவில்லை, ஒத்துழைக்கவில்லை என்று



1998 நவம்பர் 28 ] [திரு. சி. வேலாயுதன்]

சொல்கிறார்கள். அதேபோன்று, மின்சார வாரியத்தைக் கேட்கும்போது, "நாங்கள் செல்கிறோம், பஞ்சாயத்து ஆட்கள் குழல் விளக்குகளைக் கொண்டுவரவில்லை, ஒத்துழைக்கவில்லை" என்று சொல்கிறார்கள். இந்தப் பிரச்சினை தமிழகம் முழுக்க இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று கருதுகிறேன். இது கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகம் இருக்கிறது. ஆகவே, மின்சார வாரியமும், உள்ளாட்சித் துறையும் இதுகுறித்துப் பேச வேண்டும். முன்பு இருந்ததுமாதிரி, மின்சார வாரியத்திடமே மொத்தப் பணிகளையும் அளிக்க முடியுமா என்பதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நிலை இருந்தபோது, ஓரளவுக்கு நன்றாக இருந்தது.

உள்ளாட்சித் துறையினுடைய சாலைகளைச் செப்பனிடும்போது சாலையை செப்பனிட்ட ஒருசில வாரங்களுக்குள்ளாகவே, மின்சார இணைப்பை சாலையின் வழியே கொண்டு செல்வதற்கும், குடிநீர் இணைப்பைக் கொண்டு செல்வதற்கும், தொலைபேசி இணைப்பைக் கொண்டு செல்வதற்கும், அந்தச் சாலைகளை உடைக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. எனவே, ஒருசில மாதங்களில் குறிப்பிட்ட சாலையை செப்பனிட இருக்கிறோம் என்று தெரிந்த உடனேயே, மின்சார வாரியத்தினிடம் இந்தச் சாலையில் ஏதாவது பணி செய்ய வேண்டியுள்ளதா என்பதைக் கேட்டு, அதேபோல் தொலைபேசித் துறையிடமும், குடிநீர் வடிகால் வாரியத்திடமும் கேட்டு, அதற்குப்பிறகு சாலையைப் போடுவது என்று சொன்னால், அச்சாலை பல ஆண்டுகள் நன்றாக இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும்.

முற்பகல் 11-45

எனது பத்மநாபபுரம் தொகுதியில், சுப்பியறை பஞ்சாயத்தில் கிட்டத்தட்ட ஓராண்டிற்கு முன்னால், பனங்குழி என்று சொல்லக்கூடிய ஊருக்குக் குடிநீர் கொண்டு செல்வதற்காக குழாய் அமைக்கப்பட்டு, இன்னும் தண்ணீர் கொடுக்கக்கூடிய சூழ்நிலை அங்கு ஏற்படவில்லை. கேட்டால், அது உயர்வான இடம்; தண்ணீர் கொண்டு செல்வது மிகக் கடினமாக இருக்கிறது; அதற்குத் தனியாக டாங்க் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படி ஏதாவது பிரச்சினைகளைச் சொல்லி, அந்த ஊருக்குத் தண்ணீர் கிடைப்பது என்பது தீராத பிரச்சினையாக இருக்கிறது.

அரசினுடைய பொதுவான கொள்கை, தனியார் கட்டடங்களிலுள்ள அரசு அலுவலகங்களை அரசு கட்டடத்திற்கு மாற்றுவது என்பது. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஊரக வளர்ச்சித் திட்ட

[திரு. சி. வேலாயுதன்] [1998 நவம்பர் 28

அலுவலகமானது, Collector's Office Compound-க்குள்ளேயே இருந்தது. இப்போது தனியார் கட்டடத்திற்கு அது மாற்றப்பட்டிருக்கிறது. அதைத் திரும்பவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்குள்ளேயே கொண்டு வருவதற்கு வேண்டிய கட்டட வசதியை ஏற்படுத்த வேண்டும். அல்லது என்ன பிரச்சினை என்பதை ஆராய்ந்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

இன்னொன்று, நெடுஞ்சாலைத் துறையைப் பற்றியது. கன்னியாகுமரி மாவட்டத்தில், எந்தெந்த இடங்களிலெல்லாம் நெடுஞ்சாலையையொட்டி தண்ணீர் பாயக்கூடிய வாய்ப்பு இருக்கிறதோ அல்லது தண்ணீர் வடியக்கூடிய வாய்ப்பு இருக்கிறதோ, அந்த இடங்களிலெல்லாம், சாலைகளெல்லாம் செப்பனிடப்பட்டு பெருமழையிலேகூட எந்தவிதமான பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆனால், பிரச்சினை எப்படி வருகிறது என்று பார்த்தால், நெடுஞ்சாலைத் துறை, சாலையைச் செப்பனிட்டு விடுகிறது; ஆனால், பக்கத்திலே இருக்கக்கூடிய ஓடையை அமைப்பதற்கு உள்ளாட்சித் துறையிடம் அந்தப் பொறுப்பு இருக்கிற காரணத்தினால், இரண்டும் ஒத்து நடக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. எனவே, சாலையை அமைக்கும்போதே, சாலையின் ஓரங்களில் வாய்க்காலையும் அமைக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி அமைகிறேன். பாரத் மாதா கி ஜே !

## 8. விதி 110-ன்கீழ் அறிக்கை

**சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தேர்தல் தொடர்பான நிகழ்வுகள் குறித்தும் காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலை பாதுகாப்பு குறித்த விளக்கமும் அடங்கிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை வைப்பதற்காக அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மற்றவர்கள் பிறகு தொடர்ந்து பேசலாம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையும்,



1998 நவம்பர் 28] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள், காட்பாடியிலே இருக்கக்கூடிய வெடிமருந்து நிறுவனம் குறித்து தெரிவித்த கருத்து குறித்தும் இரண்டு விவரங்களையும் இந்த அவைக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவை விதி 110-ன்கீழ், சேலம் நகரில், மத்திய கூட்டுறவு வங்கித் தேர்தல் வேட்புமனுத் தாக்கலின்போது, சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் தாக்கப்பட்டது குறித்து, இந்த அறிக்கையை அவைமுன் அளிக்கிறேன்.

சேலம் மாவட்டம், மத்திய கூட்டுறவு வங்கியின் இயக்குனர் பதவிகளுக்கான தேர்தலையொட்டி, வேட்புமனுத் தாக்கல், 19-8-1998 அன்று, சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் நடைபெற இருந்தது. வேட்பு மனுக்களைப் பெற 6 Counters திறக்கப்பட்டிருந்தன. 3 காவல் துறை உதவி ஆணையர்கள், 6 ஆய்வாளர்கள் மற்றும் 60 காவலர்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்த நியமிக்கப்பட்டிருந்தனர். வங்கி வளாகத்திற்கு வெளியே, ஓர் உதவி ஆணையாளர் தலைமையில் 100 காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். சேலம் நகர காவல் துறை துணை ஆணையாளர் (சட்டம்-ஒழுங்கு) பாதுகாப்புப் பணியை மேற்பார்வையிட்டார். வேட்புமனுத் தாக்கல் செய்ய வந்தவர்கள் சோதனையிடப்பட்டு வங்கி வளாகத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர். முதலாவது Counter முன்பு பலர் வரிசையில் காத்திருந்தபோது, காலை 10 மணியளவில், இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் தனது ஆதரவாளர்களுடன் அங்கு போய், வரிசையில் முந்திச் சென்று, தேர்தல் அதிகாரியிடம் மனுவைப் பெற முயற்சித்தார். அதேசமயத்தில், வரிசையில் நின்று கொண்டிருந்த கொங்கணாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த மாவட்ட பஞ்சாயத்துக் குழு உறுப்பினர் குண்டு சுப்பிரமணியம் என்பவர், 'மற்றவர்கள் வரிசையில் நின்று கொண்டிருக்கும்போது, திரு. சுந்தரம் எப்படித் தேர்தல் அதிகாரி அறைக்குள் நுழையலாம்' என வினவியுள்ளார். அதனையடுத்து அவர்களுக்கிடையே வாய்த் தகராறும், கைகலப்பும் ஏற்பட்டதில், சட்டமன்ற உறுப்பினரின் மேல்தாடையில் காயம் ஏற்பட்டது. அதுகுறித்து சட்டமன்ற உறுப்பினர் கொடுத்த புகாரின்மீது, சேலம் நகரக் காவல் நிலையத்தில் குற்ற எண் 1262/98, இந்திய தண்டனைச் சட்டம் 341, 326, 506, துணைப் பிரிவு (2) ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. குண்டு சுப்பிரமணியம், 19-8-1998 அன்றே கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [ 1998 நவம்பர் 28

வைக்கப்பட்டார். சட்டமன்ற உறுப்பினர், சேலம், அரசு குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டார். இந்த வழக்கில், 13-11-1998 அன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. மேலும், எடப்பாடி வட்டம், கோனேரிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு. முருகேசன் என்பவர் 19-8-1998 அன்று நடந்த சம்பவத்தின்போது, தன்னையும் மற்றும் இருவரையும் திரு. சுந்தரமும், அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த சிலரும் தாக்கியதாகக் கொடுத்த புகாரின்மீது, சேலம் நகரக் காவல் நிலையத்தில் மற்றொரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டுள்ளது. விசாரணைக்குப் பின்னர், இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் பிழையானது எனத் தீர்மானிக்கப்பட்டு, நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

*முற்பகல் 11-50*

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி எழுப்பிய பிரச்சினைக்கு இன்று விளக்கம் தருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருந்தார்கள். அதன்படி பின்வரும் விளக்கம் அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த நிறுவனத்தில் பாதுகாப்புக்கு மிகவும் முக்கியத்துவமும், முன்னுரிமையும் தரப்பட்டு வருகிறது. பாதுகாப்புத் துறையில் மொத்தம் 49 பேர் பணிபுரிகிறார்கள். அதில் 30 பேர் முன்னாள் இராணுவத்தினர். மீதமுள்ள 19 பேர் பயிற்சி பெற்று பணியில் சேர்ந்தவர்கள். இதில் உயர் பாதுகாப்பு அதிகாரி ஒருவர், பாதுகாப்பு ஆய்வாளர்கள் நான்கு பேர், பாதுகாப்புக் காவலர்கள் 44 பேர் இருக்கிறார்கள். இந்த 49 பணியாளர்களும் மூன்று பணிமுறை (Three shifts) பணிகளிலே பணியாற்றி வருகிறார்கள். ஒவ்வொரு பணிமுறை மாற்றத்தின்போதும் ஒரு பாதுகாப்பு ஆய்வாளர், 12 பாதுகாப்புக் காவலர்கள் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். இவர்களுக்கு Air-Gun துப்பாக்கியும், Metal Detector கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. வெடிமருந்து தொழிற்சாலைக்குள் நுழையும்போதும், வெளியேறும்போதும் அனைத்துத் தொழிலாளர்களும், வாடிக்கையாளர்களும் நன்கு பரிசோதிக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். வாகனங்களும் பரிசோதிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன. இரவுநேர பாதுகாப்பு கருதி, காட்பாடி காவல் நிலையத்திலிருந்து ஆய்வாளர், காவலர்களடங்கிய குழு இரவில் ரோந்துப் பணி செய்கிறது.



1998 நவம்பர் 28 ] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பாதுகாப்புப் பணிக்கென தேவையான பணியாளர்கள் இருப்பதால் தொழிற்சாலைக்கு எவ்விதக் குந்தகமும் ஏற்படாவண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. எனவே, பாதுகாப்புப் பணிக்கென காவல் துறையிலிருந்து I.P.S. அந்தஸ்தில் உயர் அதிகாரியைப் பணி நியமனம் செய்ய எவ்வித சந்தர்ப்பமும் எழவில்லை. தேவைப்பட்டால், அதுகுறித்து ஏதாவது சந்தேகம் ஏற்படுமேயானால், அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி தெரிவித்த கருத்துபற்றி பரிசீலிக்கப்படும்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (அ) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு, 1998—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி, ஊராட்சி, பஞ்சாயத்து, பேரூராட்சி, மாநகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நகர்பாலிகா சட்டம், பஞ்சாயத்துராஜ் சட்டப்படி அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்கிறோம். இந்தியா முழுவதும், அனைத்து மாநிலங்களும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதற்காக இந்திய அரசு இயற்றிய சட்டம் நகர்பாலிகா சட்டம். அதை அண்டை மாநிலங்கள் அனைத்தும் தவறாமல் கடைபிடித்து வருகின்றன. ஆனால் தமிழக அரசு தனது சுயநலத்திற்காக இந்தச் சட்டத்தைத் திருத்தி, உள்ளாட்சி, நகராட்சிகளுடைய அதிகாரத்தைப் பறிக்க சட்டத் திருத்தம் செய்துள்ளது

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இதில் உள்நோக்கம் இருப்பதுபோல உறுப்பினர் பேசுவது அவ்வளவு நல்லதல்ல. இந்தச் சட்டப் பிரச்சினையிலேபோய் சுயநலம் என்றெல்லாம் சொல்லலாமா?

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் சொல்லித்தான் ஆகவேண்டும். உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று Select Committee போட்டீர்கள். ஆய்வுக் குழு அறிக்கையை கொடுத்திருக்கிறது. அந்த அறிக்கையில் சொன்னதைவிட நீங்கள் மேற்கொண்டு விஷயங்களைச் சேர்த்து மசோதா அளவிலே கொடுத்திருக்கிறீர்கள் . . . .

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** அதிகாரம் வேண்டும் என்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. சட்டங்களை எல்லாம் வகைப்படுத்தி

பொதுவாக ஒரு சட்டம் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளுக்கு வேண்டும் என்று இந்த அவையில் கொண்டு வந்து வைத்து, அதற்குப் பிறகு Select Committee அனுப்ப வேண்டும் என்று விரும்பி, அனுப்பி, அது தீர்மானிக்கப்பட்டு, அதனுடைய திருத்தத்தோடு இங்கே வந்திருக்கிறது. அது வேறு, இது வேறு. புரிந்து கொண்டு சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு அமைச்சர், அமைச்சராக இருப்பதால், அவருக்கு எல்லாம் புரியும் என்று சொல்ல முடியாது. நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தால் எனக்கு எதுவும் புரியாது என்றும் சொல்ல முடியாது. எனக்குத் தெரிந்த விஷயம் இதுதான். நீங்கள் வந்து குழப்பக்கூடாது. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். ஆகவே, அதிக அதிகாரங்களை நீங்கள் குறைத்திருக்கிறீர்கள். இந்த மசோதா நகர்மன்றங்களின் அதிகாரத்தைக் குறைக்கிற அளவிலே இருக்கிறது. இந்திய அரசின் சட்டமான பஞ்சாயத்துராஜ் சட்டத்திற்கு எதிர்ப்பாக இது இருக்கிறது . . . .

**யாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இப்போது நடக்கிற விவாதம் பஞ்சாயத்துராஜ் சட்டத்தைப் பொறுத்து அல்ல. நகர்பாலிகாவைப் பற்றியது இது. அதை மட்டும் விளக்கினால் நன்றாக இருக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நகர்பாலிகா பற்றி, நகராட்சிகள் பற்றிதான் பேசுகிறேன். நகராட்சியை இந்த மசோதாவில் சேர்த்திருக்கிறீர்கள். இதில் திருத்தம் வேண்டும் என்றுதான் சொல்கிறேன். நகர்மன்றத் தலைவர் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். மன்றத் தலைவர் வந்து அரசுக்கு ஆமாம் சாமி போட்டால் அவர் மன்றத் தலைவராக இருப்பார். இல்லையென்றால், பதவி நீக்கம் செய்ய விரும்பினால், நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் மனுக் கொடுத்தால்போதும் என்று சொல்லப்பட்டிருப்பது, மன்றத் தலைவருக்கு எதிராகக் கத்தியைத் தீட்டும் வண்ணம்தான் இந்த மசோதா அமைந்திருக்கிறது என்று சொல்லவேண்டிய நிலை இருக்கிறது.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே இதுபோன்று இரண்டு சட்டங்கள் இருந்திருக்கின்றன. ஆனால், இப்போது, Select Committee விரும்பியது, அடிக்கடி இதுமாதிரியான பிரச்சினைகள் வந்தால் அது நன்றாக இருக்காது என்று கருதி, உறுப்பினர்களில் 50 சதவிகிதத்தினர் அதை ஏற்றுக்கொண்டு மனு



அளித்தால், அதை அரசு ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்று இருந்ததைக்கூட, நான்கில் மூன்று பங்கு பேர் மனுக் கொண்டுவந்து கொடுத்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டால்தான், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, இந்தப் புதிய சட்டத்தில் திருத்தியிருக்கிறோம். எனவே, அது கூடுமானவரையில் தவிர்க்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் பரிசீலித்து முடிவெடுத்து இருக்கிறார்களேயொழிய, அந்தமாதிரி நடைபெற வேண்டும், அதன்மூலம் அரசு பழிவாங்க வேண்டுமென்ற நோக்கம் நிச்சயமாக இந்த அரசுக்கு இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசியல் சட்டம் 356 ஆவது பிரிவைப் பயன்படுத்தக்கூடாது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** உங்களுடைய ஆட்சியில், 1994 ஆம் ஆண்டு சட்டத்திலே அது வரையறுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அதைவிடத் தெளிவாக, அடிக்கடி இதுமாதிரி வரக்கூடாது என்பதற்கு, பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் இந்தச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** அரசியல் சட்டம் 356-ஆவது பிரிவைப் பயன்படுத்தக்கூடாது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரை நீக்க வேண்டுமென்பதற்கான மனுவை சில உறுப்பினர்கள் இயக்குநரிடம் கொடுத்தால், அவரை உடனே நீக்கிவிடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசால் நியமிக்கப்படும் அதிகாரியிடம் நீங்கள் கருத்துக் கேட்கும் வகையில் இது இருக்கிறது. மன்றத் தலைவரை நீக்கும் அதிகாரம் நீதிமன்றத்திடம்தான் ஒப்படைக்கப்பட வேண்டுமே தவிர, அந்த அதிகாரம், இயக்குநருக்கோ, செயலாளருக்கோ, மந்திரிக்கோ இருக்கக்கூடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** 102 நகராட்சிகளுக்கும், அறுநூற்றுச் சொச்சம் பேரூராட்சிகளுக்கும், இதுமாதிரி நீதிமன்றத்திற்குப் போய்த்தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நிலை இருந்தால், அது சீக்கிரமாக முடியாது, பல ஆண்டுகளாகிவிடும். முதலிலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, இதில் அவருக்கு ஏதாவது சுயநல நோக்கமிருந்தால்கூட அதைத் தெளிவாகத் தெரிவிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவரும் ஒரு நகர மன்றத் தலைவர்.

[ 1998 நவம்பர் 28

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதி முறைகளைச் சேர்க்க வேண்டும். என்ன முறையில் சேர்க்க வேண்டுமென்றால்—மாநில அரசின் ஆலோசனையின் பேரில் மாநில ஆளுநரை நியமிக்கிறார்கள். மத்திய சர்க்கார் ஆளுநரை நியமிக்கும்போது, மாநில அரசுக்கு எந்த கவர்னர் வேண்டுமோ அவரை நியமிப்பதுபோல—"மன்றத் தலைவ்ருக்கு விருப்பமானவரை ஆணையராக நியமிக்க வேண்டும்" என்று சேர்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி**: அதற்கு ஒரு ஆணையரே வேண்டியதில்லையே? அவர்களே நடத்திக்கொண்டு போய்விடலாமே?

**திரு. இரா. தாமரைக்கனி:** அதாவது, வருகின்ற ஆணையர், அரசின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, நகர சபைத் தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் ஒத்துழைப்புக் கொடுக்கவில்லையென்றால், எப்படி நிர்வாகம் சரியாக அமையும்?

அதேமாதிரி, நகர மன்றம் கலைக்கப்பட்டால், நிர்வாகத்தை I.A.S. அதிகாரியிடம் ஒப்படைக்க மசோதா வகை செய்கிறது. அப்படியானால், நகர சபைத் தலைவர் ஓர் I.A.S. அதிகாரிக்கு சமமாகிறார். இப்படி நகர சபைத் தலைவரை சுலபமாகப் பதவி நீக்கம் செய்வதற்கு மசோதாவில் வழிசெய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** யாண்புமிகு உறுப்பினருடைய கட்சியின் ஐந்தாண்டு கால ஆட்சியில்தான் சுலபமாக நீக்க வேண்டுமென்ற பிரிவு இருந்ததேதவிர, நாங்கள் இப்போது அதைக் கடுமையாக்கியிருக்கிறோம். அதைப் புரிந்துகொள்ளாமல் பேசுவது நல்லதல்ல.

**திரு. இரா. தாமரைக்கனி:** இப்போதுள்ள நிலவரத்தைதான் நாம் பார்க்க வேண்டும். அதற்கான திருத்தத்தைக் கொண்டுவரச் சொல்லலாம். நகராட்சியில் Appointment Committee என்று இருக்கிறது. அதில், நகர சபைத் தலைவர் மற்றும் 3 பேர் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, தேர்ந்தெடுக்கப்பட்ட நகர மன்றத் தலைவருக்கோ, உறுப்பினர்களுக்கோ அதிகாரத்தைக் கொடுக்காமல், அரசாங்கம், மூப்பு அடிப்படையிலே Employment Exchangeலே பதிந்தவர்களை நியமிக்கச் சொல்லியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி**: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த G.O.-.வைப் பொறுத்தவரையில், அரசு சிலவற்றை நியமனம் செய்து, இதை இதை ஆலோசனை செய்து, இன்னின்ன முறையில் குழுவை நடத்துங்கள் என்று சொல்லுகின்ற



1998 நவம்பர் 28 ] [திரு. கோ.சி. மணி]

உரிமை எப்போதும், எந்த அரசுக்கும் உள்ளது. அதன் அடிப்படையிலே, இந்த G.O. போடப்பட்டது. இந்த G.O. தவறு என்று எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்கும் வழக்கு போன்து. நேற்றையதினம் அந்த வழக்கு முடிவுற்றது. அரசு போட்ட G.O. சட்டப்படி செல்லும், அதைத்தான் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நேற்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*நண்பகல் 12-00*

**திரு. இரா. தாமரைக்கனி:** தேர்ந்தெடுக்கப்படுகிற அந்தப் பணியாளர்கள் எப்படி தகுதியுடையவர்களாக இருப்பார்கள். ஆகவே, நகரசபையினுடைய Appointment Committeeக்கு நீங்கள் அதிகாரத்தைக் கொடுப்பதற்கு பரிசீலனை செய்ய வேண்டும். மசோதாவிலே திருத்தம் செய்ய வேண்டும். இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்தால் தி.மு.க. நகர மன்றத் தலைவர்கூட சந்தோஷப்படுவார்கள். அடுத்து, நகராட்சி மன்றக் கூட்டம் கூடும்போது ஏதாவது சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டால், காவல் துறையை அணுகுகிறார்கள். தமிழ்நாட்டில் சட்டம்- ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டால் பாதுகாக்க வேண்டியது காவல் துறையினுடைய கடமை. ஆனால் இதற்கான செலவை நகராட்சியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. இதற்கு ஒரு திருத்தத்தைச் சேர்க்க வேண்டும்.

அடுத்து, சொத்து வரி என்பது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. மாநிலம் முழுவதும் அரசாங்கமே நிர்ணயம் செய்தால் சரி. சொத்து வரியாக இருந்தாலும் சரி, வீட்டு வரியாக இருந்தாலும் சரி, மற்ற தொழில் சம்பந்தப்பட்ட வரியானாலும் சரி, அதனால் எங்களுக்குக் கெட்ட பெயர் வருகிறது பாருங்கள். சொத்து வரியைத் திருத்த வேண்டுமென்று சொல்லி, அப்படித் திருத்தும்போது, பொது மக்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், '30-ஆம் தேதி கடை அடைப்பு, உண்ணாவிரதம்' என்று சொல்வார்கள். இதனால் எங்களுக்குத்தான் கெட்ட பெயர் வருகிறது. நகரசபைத் தலைவர் களுக்குத்தான் கெட்டபெயர் வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட Councillorsக்குக் கெட்ட பெயர் வருகிறது. நீங்கள் ஏழு வருடம் சொத்து வரி சம்பந்தமாக எதுவும் செய்யாமல் விட்டுவிட்டு, தனி அதிகாரிகள் காலத்தில் செய்ய முடியாமல் விட்டுவிட்டு, இப்போது செய்வதால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரசபைத் தலைவர்களுக்கு, உறுப்பினர்களுக்குக் கெட்ட பெயர் வருகிறது. அதனால் நீங்களே சொத்து வரி, வீட்டு வரி, கடைகளுக்கு விதிக்கப்படுகின்ற வரி

எல்லாவற்றையும் நிர்ணயித்துக் கொடுங்கள். ஏன் சொல்கிறேன் என்றால், கடைசியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்குத்தான் கெட்ட பெயர் வருகிறது. ஆகவே, இதையும் பரிசீலனை செய்ய வேண்டும். அடுத்து, நகராட்சி ஆணையர்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியிருக்கிறீர்கள். விதிமுறைகளை மீறி கட்டடம் கட்டினால் அதை மாற்றுவது, இடிப்பது போன்ற அதிகாரம் ஆணையருக்குக் கொடுத்திருக்கிறீர்கள், அது எப்படி?

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்லுவது எனக்குப் புரியவில்லை. இருக்கின்ற அதிகாரங்களை வரைமுறைப்படுத்தி இனிமேல் இப்படிதான் கட்டடம் கட்ட வேண்டுமென்று C.M.D.A. சொல்லியிருக்கிறது. இதுசம்பந்தமாக ஒரு திருத்தமும் வந்தது. அஃதன்னியில், அதிகாரிகளுக்கு, நினைத்தவுடன் கட்டடத்தை இடிக்கவோ, மாற்றவோ அதிகாரம் கொடுக்கவில்லை, ஏற்கெனவே இந்த அதிகாரம் அவர்களுக்கு இல்லை. விதிமுறைகளை மீறினால், அதுபற்றிய நடவடிக்கையை முன்நின்று அவர்கள் செய்ய வேண்டுமே தவிர, இறுதி முடிவு அவர்களுடையது அல்ல.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான், தலைவர் வந்து உட்கார்ந்திருக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மன்னிக்கவும், நகராட்சித் தலைவர், நகராட்சித் தலைவர் என்று வருகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (சிரிப்பு) அதாவது நகராட்சியிலே வரி குறைப்புக் குழு இருக்கிறது. அந்த வரி குறைப்புக் குழுவிடம் பொதுமக்கள் மனு கொடுக்கிறார்கள். வரி குறைப்பது அல்லது கூட்டுகிற அதிகாரம் அதற்கு இருக்கிறது. ஆனால் மேல்முறையீடு ஆணையரிடம் என்று சொன்னால், வரி குழுவினுடைய உறுப்பினர்கள், தலைவர் விதித்தது செல்லுபடியாகாது என்று சொன்னால், ஆணையருக்கு அதிக அதிகாரம் கொடுத்திருப்பதுபோல் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வந்திருக்கின்ற புதிய சட்டத்தின்படி பார்த்தால், வரி விதிப்பில் தவறு இருந்தால், ஒருகால் ஆணையர்கூட ஏதாவது தவறு செய்திருந்தால், ஆணையருக்கு Appeal பண்ணலாம்; ஆணையருக்கு Appeal செய்வது பிடிக்காமல் இருந்தால், விரும்பினால்



'Appeal Committee'க்கு வரலாம், அதுவும் அவருக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னால் நீதிமன்றத்திற்கும் போகலாம். இவ்வளவு வாய்ப்பு இருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மசோதா பக்கம் 75-ல், Cycle Stand-ஐ ஏலம் விடுகின்ற அதிகாரத்தை Commissioner-க்குக் கொடுத்திருக்கிறோம். பக்கம் 73-ல், பூங்கா பராமரிப்பும் Commissioner மூலமாகத்தான் என்று கூறப்பட்டிருக்கிறது. பக்கம் 67-ல், நகராட்சிக் கழிப்பிடம் ஏலம் விடுவதும் Commissionerதான் முடிவு செய்கிறார் என்று இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, மாநகராட்சி மன்றங்கள் கூடி எடுக்கின்ற முடிவுகளை நடைமுறைப்படுத்துவது, ஆணையர், நிர்வாக அதிகாரி, அவ்வளவுதான்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tender விடுகிறார்கள். Tender விட்டவுடன் குறைந்த Tenderகளுக்கு முறைப்படி, அரசாங்க விதிமுறைகளின்படி, Councilல் வைத்து நாங்கள் Sanction செய்கிறோம். Councilக்கே வராமல் Commissioner மூலமாக அதைச் செய்வது என்பது . . .

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்டது மாதிரி, அப்படி நடந்திருக்குமேயானால் உறுப்பினர் அவர்கள் உரிய நேரத்தில் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*பிற்பகல் 12-05*

**திரு. இரா. தாமரைக்கனி:** இதேமாதிரி பக்கம் 64-ல், நகராட்சிப் பகுதிகளில் கழிப்பிடம் வழங்குவது குறித்து இருக்கிறது, அதையும் ஆணையருக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அதேமாதிரி பக்கம் 67 மற்றும் 68-ல், கறிக்கடை ஏலம், கட்டணம் வசூல் ஆகியவற்றை ஆணையரிடம் கொடுத்திருக்கிறீர்கள். ஆணையருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறீர்கள் என்பது நேரடியாக அமைச்சரே தலையிட்டு காரியங்களைச் செய்கின்ற மாதிரி இருக்கிறது. இது பல தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர். . . .

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து ஆண்டுகள் நான் நகரமன்றத் தலைவராக இருந்தேன். தற்போது

மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களும் நகரமன்றத் தலைவராக இருக்கிறார். ஆணையருக்கு அந்தமாதிரி அதிகாரத்தைக் கொடுப்பது, Elected Chairman, தம்முடைய அதிகாரத்தை Surrender பண்ணுவதுமாதிரி, அப்படியில்லை சட்டத்தில். Elected council தலைவருக்குத்தான் அந்த அதிகாரம் முழுமையாக இருக்கிறது. ஒருவேளை, அவருடைய நகராட்சியில் அவர், அவருக்கு அறியாமலேயே அந்த அதிகாரங்களையெல்லாம் ஆணையருக்குக் கொடுத்துவிட்டாரோ என்னவோ தெரியவில்லை. அப்படிக் கொடுத்திருந்தால் அருள்கூர்ந்து கொடுக்கப்பட்ட அதிகாரத்தை நீங்கள் திரும்ப எடுத்துக்கொள்ளுங்கள். சட்டம் அப்படித்தான் சொல்கின்றது.

**திரு. இரா. தாமரைக்கனி:** அதாவது இந்த மசோதா, அரசினுடைய ஒரு சர்வாதிகாரப் போக்கைக் காட்டுகிறது. அதிகாரங்கள் பூராவையும் அமைச்சரே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறீர்கள். மந்திரி, டைரக்டர், செகரட்டரி எல்லோரும் ஆணையரிடம் நேரிடையாகத் தொடர்புகொண்டு செய்வதுமாதிரிதான் மசோதா இருக்கிறது. ஆகவே, நீங்கள் நகர்பாலிகா சட்டத்தின்கீழ் தலைவருடைய அதிகாரத்தைக் குறைத்துவிட்டீர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர்கூட வருத்தப்படுவார்கள் என்று நினைக்கிறேன், அடிக்கடி எழுந்திருக்கிறேன் என்று. ஏதாவது இருக்கின்றதை படித்துவிட்டு, உள்ளதைச் சொன்னால், பதில் சொல்லலாம். நான் என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை. நேரம் அதிகமாகிக்கொண்டே போகிறது. இன்னும் நிறைய மசோதாக்கள் இருக்கின்றன. அதோடு விட்டுவிடுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நானும் ஒரு நகரமன்றத் தலைவராக இருக்கிறேன். எனக்குத் தெரிந்த விவரங்களை, எங்கள் நகராட்சிக்கு இந்த அரசாங்கத்திலிருந்து வருகின்ற . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பல விளக்கங்கள் அமைச்சர் கொடுத்துவிட்டார். இதிலே நீங்களும் ஏற்கெனவே கோட்டைவிட்டு, இப்போது நான் சிறப்பு அனுமதி கொடுத்து பேசவிட்டிருக்கிறேன். அதை மனதில் வைத்துக்கொண்டு பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு மற்ற துறைகள்—நகராட்சி அரசாங்கத்தினுடைய ஓர் அங்கம்—எங்களுக்கு காவல் துறை, Highways, Revenue, Electricity Board போன்ற இலாகாக்கள் எல்லாம் ஒத்துழைப்பு கொடுப்பதே கிடையாது. இன்றைக்குப் பாருங்கள், எங்கள் Director Officeலிருந்து





Eviction-ஐ அப்புறப்படுத்த வேண்டுமென்று சொல்லி கடிதம் வந்திருக்கிறது. ஒரு வருடமாக, Revenue, Highways, Police . . (குறுக்கீடு) Encroachment-ஐ அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டால் . . . (குறுக்கீடு) நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுகின்றீர்கள். வார்த்தையைத் தவறாகச் சொல்லிவிட்டீர்கள் என்று மாற்றுகிறார். Eviction-ஐ அப்புறப்படுத்த முடியாதல்லவா?

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்துவதற்கு மற்ற துறைகள் ஒத்துழைப்பு தருவது கிடையாது. காவல் துறை ஒத்துழைப்பு கொடுப்பது கிடையாது. மாவட்ட ஆட்சித் தலைவர் ஒத்துழைப்பு தருவது கிடையாது. இதுசம்பந்தமாக Director of Municipalities, Secretary, அவர்களிடமெல்லாம் கூட்டத்திற்கு வரும்போது சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வேண்டாம் என்று இருந்தேன். அவர் மற்ற துறைகள் ஒத்துழைப்பு தருவதில்லையென்று குறிப்பிடுகிறார். இன்றைக்குக்கூட, சீர்காழியிலே நடந்துகொண்டிருக்கிறது. நேற்று மாயவரத்திலே நடந்தது. அந்த அதிகாரிகளை இவர்கள் கேட்கவில்லை. அப்படி ஏதாவது அவர்களாக நடவடிக்கை எடுத்தால், அவர்கள் சார்பாக இவர் தடுக்கிறார் என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** அவைக்குத் தவறான தகவலை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் சொல்கிறார். இதுசம்பந்தமாக எங்களுடைய நகராட்சி ஆணையர், ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள D.S.P., Tahsildar மற்றும் Highways அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், S.P.-க்கு கடிதம் எழுதியிருக்கிறார். நான் வந்து தடுத்தேன் என்று சொன்னால், ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாக இருந்தேன் என்று சொன்னால், இந்தப் பதவியை ராஜினாமா செய்கிறேன். அதுமட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர் ஆகிய நான் தவறான தகவலைக் கொடுக்கவில்லை. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்தான் ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதற்கு நான் தடையாக இருக்கிறேன் என்று தவறான தகவலைக் கொடுக்கிறார். இதற்கு நீதி விசாரணை வையுங்கள் நீங்கள். யார் தவறு செய்தார்கள்? அமைச்சராக இருந்தால், என்ன வேண்டுமானாலும் சொல்லலாமா? நீங்கள் சொல்வதுதான் உண்மையா? நான் சொல்வது

[திரு. இரா. தாமரைக்கனி] [ 1998 நவம்பர் 28

உண்மைக்குப் புறம்பானதா? * நீதிவிசாரணை வையுங்கள். யார் உண்மை சொல்லியிருக்கிறார்கள். யார் உண்மைக்குப் புறம்பாக* சொல்லியிருக்கிறார்கள் என்று பார்க்கலாம். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் பதவியை ராஜினாமா பண்ணட்டும். உண்மைக்குப் புறம்பாக* எல்லாம் சொல்லக் கூடாது. அதுமட்டுமல்ல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வார்த்தைகளை அப்படியே விளையாட்டாக விட்டுக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? உண்மைக்குப் புறம்பாக என்று சொல்ல வேண்டுமென்றால் ** என்று இடையிலே நீங்கள் பேசிக்கொண்டே இருக்கிறதா?

**திரு. இரா. தாமரைக்கனி:** உண்மைக்குப் புறம்பான என்று வைத்துக்கொள்ளுங்கள்.

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, இன்று மாலை அவர் என்னுடைய அறைக்கு வரட்டும். S.P.-யிடமும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும், நகராட்சியில் உண்மையான ஆக்கிரமிப்புகள் எதுவாக இருந்தாலும் அவைகளை அப்புறப்படுத்த வேண்டும், அதற்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று உறுப்பினர் முன்னிலையிலேயே நான் கூறத் தயாராக இருக்கின்றேன். உறுப்பினரும் இதுகுறித்து ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறாரா?

**திரு. இரா. தாமரைக்கனி:** பாரபட்சமில்லாமல் நடவடிக்கை எடுத்தால் சரி. யாராக இருந்தாலும், அந்த ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துங்கள். ஆளுங்கட்சியிலுள்ளவர்கள் D.S.P. இடமும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் சொல்லி...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, நான் இப்போது குறிப்பிடுவது அவர் என்னுடைய அறைக்கு வந்தால், நான் அவரை வைத்துக்கொண்டே சட்டப்படி. கட்சி பாகுபாடு இல்லாமல் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதுபோல தீர்மானம் எல்லாம் போட்டு நடவடிக்கை எடுக்க முன்வருவாரா?

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1998 நவம்பர் 28 ]

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானம் எல்லாம் போட்டு ஒரு வருடத்திற்கு மேலாகிறது. கூட்டம் முடிந்தவுடன் அமைச்சர் அறைக்குப் போகிறேன். பாரபட்சமில்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலே அரசியல் இருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த உறுதியை அமைச்சர் சொல்லிவிட்டார். உங்களுடைய பேச்சை சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** உயர்நீதிமன்றம்கூட சென்னை மாநகராட்சியை, நடைபாதைக் கடைகளை அப்புறப்படுத்தும் விஷயத்தில் கண்டிருத்திருக்கிறது. சென்னை மாநகராட்சி தூங்கிக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறது. இதனால் எங்களைப் போன்றவர்களுக்கு எல்லாம் அவப்பெயர் வருகிறது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** எதற்கு எதைச் சொல்வது என்று அவருக்குத் தெரியவில்லை. இன்றைக்கு வந்திருக்கின்ற தீர்ப்பு, எந்த அடிப்படையிலே வந்திருக்கிறது என்று அவருக்குத் தெரியவில்லை. அவர்களுக்கு கடைகளையெல்லாம் மாற்றித் தருகிறேன் என்று சொன்னீர்களே, அதைக் கொடுத்தீர்களா, கொடுக்கவில்லையா, அதைப் பார்த்துக் கொடுங்கள். அதை நீங்கள் ஏன் எடுத்துக் கொண்டீர்கள், கொடுக்காமல்கூட இருந்திருக்கலாம் என்றுகூடச் சொல்லியிருக்கிறார்கள். ஆகையினால் அதையும் இதையும் முடிச்சுப் போடுவது நல்லதல்ல. அது வேறு தீர்ப்பு, இது வேறு நடவடிக்கை.

**திரு. இரா. தாமரைக்கனி:** நீதிமன்றத் தீர்ப்பிலேயே, சென்னை மாநகராட்சி எல்லா துறைகளிலும் தூங்கிக்கொண்டிருக்கிறது என்று நீதிபதி தீர்ப்பு கொடுத்திருக்கிறார். தலைநகரத்திலேயே மாநகராட்சி நிர்வாகம் தூங்கிக் கொண்டிருக்கிறது என்று நீதிமன்றம் கண்டனம் தெரிவித்திருக்கிறது. எனவே, எல்லா வகையிலேயும் ஒத்துழைப்போடு செயல்படுவதற்கு துறைகளுக்கு நீங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி

[திரு. நா. பெரியசாமி] [ 1998 நவம்பர் 28

அமைப்புகளுக்கான சட்டமுன்வடிவின்மீது ஒருசில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடைய செயல்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக, ஜனநாயகப் பூர்வமான முறையிலே ஓர் ஆய்வுக் குழு அமைக்கப்பட்டு, அந்த ஆய்வுக் குழுவால் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, இந்தச் சட்டமுன்வடிவு இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவு சிறப்பான முறையிலே அமைவதற்கு அரசு எடுத்த நடவடிக்கையை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவில் மேலும் கவனம் செலுத்த வேண்டிய ஒருசில கருத்துக்களை, எதிர்காலத்திலே கவனம் செலுத்தப்பட வேண்டிய கருத்துக்களை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை பெருநகரிலிருந்து தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு இருக்கின்ற மிகப் பெரிய பிரச்சினை, அங்கீகரிக்கப்படாத மனைகளில் அமைந்துள்ள வீடுகளில் குடியிருப்பவர்கள் பற்றிய பிரச்சினையாகும். அங்கீகரிக்கப்படாத மனைகளில் குடியிருப்பவர்கள், நகரத்திலே வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு கிராமத்திலிருந்து வந்த ஏழைகள். அவர்கள் சிறிது சிறிதாகச் சேர்த்து, சேமித்த பணத்தை வைத்து வீடுகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் அமைத்து கொண்ட இடங்களுக்கு தெருவிளக்கு வசதி, தெரு வசதி, சாக்கடை வசதி போன்ற எந்த அடிப்படை வசதியும் இல்லாமல் அவர்கள் படுகின்ற கஷ்டத்தைப்பற்றிச் சொன்னால் மிகவும் உருக்கமாக இருக்கும். அப்படி அவதிப்பட்டுக்கொண்டு அங்கீகரிக்கப்படாத மனைகளில் குடியிருக்கின்ற மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கத்தக்க வகையிலே இந்தச் சட்டத்திலே வழிவகை காண வேண்டும் என்கின்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தமாதிரி இலட்சக்கணக்கான மக்கள் அரசு நடவடிக்கைகளின் மூலமாக ஒரு தீர்வு வர வேண்டுமென்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு முறையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இந்தப் பிரச்சினையை எல்லா மட்டங்களிலும் வலியுறுத்தி வருகிறது. இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கு, சிறப்புப் பிரச்சினையாக



1998 நவம்பர் 28 ] [திரு. நா. பெரியசாமி]

பிற்பகல் 12.15

இதைக் கருதி, அரசு தனியாக ஓர் உத்தரவிட்டு, இதுவரையிலும் அங்கீகரிக்கப்படாத மனைகளிலே அமைந்திருக்கிற அந்தக் குடியிருப்புகளை முறைப்படுத்தி, அங்கீகாரம் கொடுத்து, தெருவிளக்கு, சாலை வசதி, சாக்கடை வசதி, குடி தண்ணீர் வழங்கல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்றும், அதற்காக ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சொத்து வரியைப் பொறுத்தவரையில், சொத்தின்மீது வரி விதிக்கக் கூடாது, வரியை உயர்த்தக் கூடாது என்ற கருத்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு இல்லை. ஆனால் வரி உயர்வைச் செய்கிறபோது, அந்த வரி உயர்வை தாங்கக்கூடிய மக்கள் பகுதியினர் யார் என்பதையும் நீங்கள் கருத்திலேகொள்ள வேண்டும். நகரப் பகுதியை நீங்கள் எடுத்துக்கொண்டீர்களேயானால், வாடகை வீட்டில் குடியிருப்பவர்கள்தான் அதிகம். மாநகரங்கள் என்றாலும் சரி, பேரூராட்சிப் பகுதிகள் என்றாலும் சரி, நகராட்சிகள் என்றாலும் சரி, வாடகை வீட்டிலே குடியிருப்பவர்கள்தான் அதிகம். வரி உயர்வு எந்த அளவிற்கு உயர்கிறதோ, அதைக்காட்டிலும் பல மடங்கு வாடகை உயரும் என்பதை நாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். வாடகை வீட்டிலே குடியிருப்போருக்கு இந்த வரி உயர்வு மட்டுமல்லாமல் ஏற்கெனவே விலைவாசி உயர்வு, பல்வேறு துறைகளுக்கான சேவைக் கட்டணங்கள் உயர்வு போன்ற உயர்வுகளால் வருமான இழப்பு ஏற்பட்டு வருகின்ற நிலையில் சம்பள உயர்வுகூட பல்வேறு விலை உயர்வு சேவைக் கட்டணங்கள் உயர்வின் காரணமாக வருமான மதிப்பை இழந்துவிட்ட நிலையிலே இருக்கிற வாடகை வீட்டிலே இருப்பவர்கள், பெருமளவிற்கு இதிலே பாதிக்கப்படுவார்கள் என்ற ஒரு கருத்தைக்கொண்டு, அரசு ஒரு குறைந்தபட்ச அளவிற்கு...

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்து வரி சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இது மிக மிக முக்கியமான ஒரு பிரச்சினை என்ற காரணத்தினால் இந்த ஒரு கருத்தையொட்டிச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள்...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** Point of Order, Sir. எந்த உறுப்பினராக இருந்தாலும், சபாநாயகருடைய கவனத்தை ஈர்க்கிறபோது, ஏதாவது ஒரு Point-ல் நின்றுதான் ஈர்க்க வேண்டும். Either point of order or point of clarification or point of information. அதைச் சொன்னதற்குப் பிறகுதான் Chair decide பண்ண வேண்டும் அதில் என்ன Point of Order அல்லது Clarification என்று. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள் இப்போது எழுந்து பேசினார். எதன் அடிப்படையில் பேசினார் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் சபாநாயகருடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு மகிழ்ச்சி.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** Sorry. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சபாநாயகர் பொறுப்பை ஏற்கவில்லை. இந்த அவையிலே நான் உட்கார்ந்து பார்க்கிறேன். சில நடைமுறைகள், அவை இல்லாமலே போய்க்கொண்டிருக்கின்றன என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்தேனே தவிர, தங்களுடைய பொறுப்பை நான் ஏற்கக் கூடிய அளவிற்கு நான் பெரியவன் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** இதை நான் சொல்ல ஆரம்பிக்கும்போதே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொத்து வரி சம்பந்தமாக பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி, சொத்து வரி சம்பந்தமாகப் பேச ஆரம்பித்து, அதற்குள் பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நான் ஒன்றைச் சொல்கிறேன், கொஞ்சம் இருங்கள். ஒவ்வோர் உறுப்பினர் பேசும்போதும் நீங்கள் அமைச்சர் மாதிரி எழுந்து கருத்துச் சொல்வது என்ன முறை? அதற்கு நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். அதற்கு என்று ஒரு துறை இருக்கிறது. ஓர் அமைச்சர் இருக்கிறார். அவர் ஏற்கெனவே ஏகப்பட்ட கருத்துக்களைப் பேசிவிட்டார். இனிமேல் கடைசியாக அவர் பேச அனுமதி கொடுக்கப்போவது இல்லை. ஏனென்றால் ஒவ்வொரு முறையும் அவர் எழுந்திருந்து பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். இடையில் நீங்கள் வேறு பதில் சொல்கிறீர்கள். அது ஏன் என்று கேட்கிறேன். நான் விட்டுவிட்டேன் உங்களை. இருந்தாலும் பதில் சொல்லுங்கள்.

**THIRU R. CHOKKAR:** If that is the case, I resume my seat.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன என்று சொல்லுங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** இல்லை. ஒரு முறையை நானே மீற விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி சொல்லுங்கள், பரவாயில்லை. இப்போது உங்களை எழுந்து நிற்க விட்டேன். சரி, இனிமேல் இதுமாதிரி வைத்துக்கொள்ளாதீர்கள். இப்போது சொல்லுங்கள்.

**திரு. ஆர். சொக்கர்.** பொதுவான நல்ல கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வது நல்ல கருத்து இல்லை என்று நான் சொல்லவில்லை.

**திரு. ஆர். சொக்கர்:** பொதுவான கருத்து என்ற காரணத்தினால்தான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் சொல்லும்போதுகூட, சொத்து வரி நிர்ணயிக்கக்கூடிய பொறுப்பை உள்ளாட்சியிடத்திலே நீங்கள் விட வேண்டும். எங்களுக்குக் கெட்ட பெயர் வருகின்றது என்று சொன்னார்கள். அதேபோல், அனைத்து நகரமன்றத் தலைவர்களும் நினைப்பார்களேயானால், அவர்கள் சங்கத்திலிருந்து தீர்மானம் அனுப்புவார்களேயானால், இப்போது தொழில் வரி நிர்ணயம் செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு நிர்ணயம் செய்வதுபோல் இதற்கும் அமைக்கப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்டால், நகராட்சிகளுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிரந்தர வருமானம் உடனே இதிலே கிடைப்பதற்கான ஒரு வழிவகையை, மற்றவர்கள் குறை சொல்லாமல் நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு நடைமுறையைக் கையாள முடியும் என்ற ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெரியசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 12-20

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரிவித்துக்கொண்டிருந்த கருத்து, வரி உயர்வைக் குறித்தது. வாடகைக்கு வீட்டிலே குடியிருப்பவர்களுக்கு இந்த வரி உயர்வின் காரணமாக ஏற்படுகின்ற சிரமங்கள் குறித்தது. இந்த சொத்து வரி உயர்வைப் பொறுத்தவரையில் அரசே ஒரு வழிகாட்டு நெறிமுறையாக ஒரு குறைந்தபட்ச அளவையும், உயர்ந்தபட்ச அளவையும் நிர்ணயித்து,

இந்த அளவிற்கு மன்றங்கள் தீர்மானித்துக்கொள்ளலாம் என்று தெரிவிப்பதற்குப் பதிலாக, மன்றத்திற்கே பரிபூரண உரிமையைக் கொடுத்துவிடலாம் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து, ஏற்கெனவே, இந்த மாமன்றத்திலே இது தொடர்பாக உரையாற்றுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் அவர்கள் குறப்பிட்ட கருத்தை நானும் வலியுறுத்துகிறேன். குடிநீர் வழங்கல் பணிக்காக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இந்தப் புதிய சட்ட விதிமுறைகளின்படி எந்த வகையிலும் அதன் பணிக்கான பாதிப்போ, பணியாளர்களுக்கான பாதிப்போ வராத வகையிலே நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இன்னொரு பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினை. அது, பேரூராட்சிகளிலே குறிப்பாக இருக்கிற பிரச்சினை, மின் கம்பம் அமைத்து, தெரு விளக்குகள் அமைக்கிற பிரச்சினை. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களும் விளக்கம் தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே, இந்தக் குடிநீர்ப் பிரச்சினையிலே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வருவதை எந்தப் பிரிவுகளிலும் காண்பிக்கவே இல்லையே. அதனால், இந்தக் குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரையில் Section 153-ன்படி நாங்கள் நடவடிக்கை எடுத்தாலும், எந்தப் பாதிப்பும் இல்லாமல், எந்த ஒருவரும், எந்த அதிகாரியும், அலுவலரும் நிச்சயம் நீக்கப்பட மாட்டார்கள். ஆனால், அதிலே ஒன்று. ஒரு Special Division ஏதாவது ஏற்பாடு பண்ணுகிறபோது, இங்கே இருக்கிறவர்களை அதிலே கொண்டுபோய் வைத்து வேலை வாங்கி, அந்தத் திட்டம் முடிந்தவுடன் அவர்களை அந்தத் துறைக்கே அனுப்பி விடுவோம், அவ்வளவுதான். அது தவிர வேறு ஒன்றும் கிடையாது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைக் குறித்து வெளியிலே விவாதிக்கிறபோது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பணியாளர்கள் மத்தியிலே நிலவி வருகிற, பொறியாளர்கள் மத்தியிலே நிலவி வருகிற அச்சம், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தின் மூலமாக தெளிவாகும் என்ற நம்பிக்கையோடு அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பேரூராட்சிகளிலே இருக்கக்கூடிய பிரச்சினை மின் கம்பம் குறித்த பிரச்சினை. அமைச்சர் உறுதியளித்திருக்கிறார்கள், தெரு விளக்கு அமைப்பதிலே, கிராமப்புற பேரூராட்சியாகட்டும், நகர்ப்புற



பேரூராட்சியாகட்டும், எந்தப் பேரூராட்சிகளிலும், அந்தத் தெரு விளக்கை அமைத்துக்கொள்கிற அளவிற்கு நிதி ஆதாரம் போதுமான அளவிற்கு வருவதில்லை. இந்த நிதி ஆதாரத்தை உருவாக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருந்தாலும்கூட, நடைமுறையிலே பல்வேறு சிரமங்களை ஏற்றுக்கொள்கிறார்கள். எனவே, வரக்கூடிய காலத்தில், மின் கம்பங்கள் அமைப்பதும், தெரு விளக்குகளை அமைப்பதும், அவற்றைப் பராமரிக்க ஏற்படுகிற செலவுகள் அனைத்தையும் அரசே முழு அளவிற்கு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே என் கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். எனக்குக் கிடைத்த தகவல், இந்த மின் விளக்கைப் பொறுத்தவரையிலும் அந்தத் துறையும், நாங்களும் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட ஓர் உடன்பாட்டின் அடிப்படையில் கம்பம் இருந்து, விளக்கு மட்டும் போட, setting எல்லாம் சேர்த்துப் பொடுவதற்கு 749 ரூபாய். குழல் விளக்கு அல்லது சோடியம் விளக்குகளுக்கு 520 ரூபாய். அதற்குப் பிறகு புதிய கம்பம் நட்டு, புதியதாக விளக்குப் போட வேண்டுமென்றால் 4,900 ரூபாய். அது குறித்துதான் இரண்டு துறைகளுக்கும் இடையே தகராறு இருந்தது. தொகை ரொம்ப அதிகமாக இருக்கிறது, அதைக் கொடுக்க முடியாது என்று நானும், அவர்களும் தகராறு பண்ணிக்கொண்டு இருந்து, இப்போது ஓர் உடன்பாட்டிற்கு வந்திருக்கிறோம். Urban, Rural இரண்டையுமே ஒன்றாகக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், இதற்கிடையிலே 520 ரூபாயிலே எனக்கு இன்னும் பிரச்சினை இருக்கிறது. அதிலே, சாதாரணமாக ஒரு குழல் விளக்கை மாற்றுவதற்கு என்றே இந்த ரூபாயை வாங்கிவிடுகிறார்கள். இவர்களுடைய துறையிலே இருந்து போகிற உத்தரவை சரியாகப் புரிந்து கொள்ளாததால், சில விளைவுகள் ஏற்படுகின்றன. இதற்கு நல்ல பரிகாரமான ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். அதனால், இனிமேல் பிரச்சினைகள் வராது. அவைகள் அனைத்தையுமே, உள்ளாட்சித் துறையிலே இருந்து எவ்வளவு கட்ட முடிகிறதோ, அதைக் கட்டி அல்லது கட்ட முடியாத சூழ்நிலை வருமானால் சமன்பாட்டு நிதியிலிருந்து ஏதாவது ஒதுக்கீடு செய்து அதற்கு நிதியுதவி செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர் சிரமத்தையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

நான் இங்கே குறிப்பாகத் தெரிவிக்க விரும்புவது, வலியுறுத்துவது இந்தத் தெரு விளக்குகள் அமைப்பதற்காக, கம்பம் அமைப்பது உட்பட அனைத்திற்கும் ஏற்படுகிற செலவுகளை அரசே சிறப்பு இனமாகக் கருதி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நீண்டகாலம் தேர்தல் நடக்காததும், அதனுடைய வருமானத்தைப் பற்றி...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இயலாத ஊராட்சிகள், பேரூராட்சிகள் இவற்றிற்கு அரசு உதவி செய்வது என்று முடிவு எடுத்து செய்திருக்கிறது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பகுதி பேரூராட்சிகளிலே வருமானம் எதுவுமில்லாமல் இருக்கிற சூழ்நிலையிலேதான் இந்தக் கோரிக்கையை நாங்கள் வலியுறுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அடுத்து, மிக முக்கியமான கோரிக்கை மாவட்ட வளர்ச்சி மன்றம் குறித்து. ஏற்கெனவே District Development Council, மாவட்ட வளர்ச்சி மன்றம் என்று இருந்து வந்த நிலைமையை நமது அரசு வந்த பிறகு மாற்றியிருக்கிறது.

*பிற்பகல் 12-25*

இப்போது சட்டமன்றம் கூடுகின்ற காலங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் நடைபெறுகிற வளர்ச்சிப் பணிகளைப் பற்றி ஆய்வு செய்வதற்கான வாய்ப்பே இல்லை. எனவே அந்த வாய்ப்பை உருவாக்குகிற முறையில் உடனடியாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, ஒரு மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையோ நடைபெறுகிற வளர்ச்சிப் பணிகளை, ஊரக வளர்ச்சிப் பணிகளை, நகராட்சிப் பணிகளை, மாவட்ட அளவுக்கு நடைபெறுகிற திட்டப் பணிகளை, ஆய்வு செய்வதற்கான முறையிலே மாவட்ட வளர்ச்சி மன்றங்களை மாற்றி அமைப்பது மிக மிக அவசியம் என்பதை நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். இந்த அடிப்படையிலே இந்தச் சட்டத்திலே இருக்கிற அம்சங்களை ஆதரிப்பதோடு, இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிப்பதோடு, தெரிவித்திருக்கிற கருத்துக்களையும் அரசு மனதிலே கொள்ள வேண்டும். நான் மீண்டும் வலியுறுத்த விரும்புவது, அங்கீகாரம் பெறாத மனைப் பிரிவுகள் குறித்த பிரச்சினை. இது தீராத சிக்கலாக, தீராத தொடர் பிரச்சினையாக அரசுக்குத் திரும்பத் திரும்ப வந்துக்கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம், மிகப் பெரிய ஒரு தீர்வை, ஏழை மக்களுக்கு, இலட்சக்கணக்கான மக்களுக்கு நிம்மதியை ஏற்படுத்துகிற ஒரு நல்ல



அரசாக இந்த அரசு இருக்கும் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மனைப் பிரிவுகளை முறைப்படுத்துகிற சிறப்புச் சட்டம் கொண்டுவர வேண்டும். இப்போது மனைப் பிரிவுகளில் குடியிருக்கிறவர்களுக்கு வீதி அமைக்க வேண்டுமானால், தெருவிளக்கு அமைக்க வேண்டுமானால், சாக்கடை கட்ட வேண்டுமானால் அவர்களே அதற்கான செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஒரு கருத்து நகராட்சி நிர்வாகத்தால் தெரிவிக்கப்படுகிறது. ஏழைகளால் அப்படி அந்தச் செலவுகளைச் செய்ய முடியாத நிலையிலேதான், அடிப்படை வசதிகள் இல்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்படி ஏழை மக்களுடைய, வாடகை வீட்டிலே குடியிருப்பவர்களுடைய கஷ்டத்தைப் புரிந்த இந்த அரசு, அந்த மனைப் பிரிவுகளை முறைப்படுத்துவதற்கு ஒரு சிறப்பு உத்தரவை வருகிற கூட்டத் தொடரிலே வெளியிட்டு முறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். நன்றி.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவதற்கு, ஒரு கட்சிக்கு ஒருவருக்குத்தான் அனுமதி தரப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, முக்கியமான சட்டம், பெரிய சட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் Clarification ஏதாவது கேட்பதாக இருந்தால் கேட்கலாம். கட்சிக்கு ஒருவரைத்தான் நான் பேச அனுமதிக்கிறேன். அப்படிப் பேச அனுமதி கொடுப்பதாக இருந்தாலும் திரு. கருப்பண்ண உடையாருக்குத்தான் அனுமதி கொடுப்பேன். ஏனென்றால் தினமும் நீங்கள் பேசுகிறீர்கள். கட்சிக்கு ஒருவர் என்று தான் கொடுத்திருக்கிறேன். ஆகையினால் உட்காருங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Clarification மட்டும் கேட்க அனுமதிக்கிறேன்.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான பிரச்சினை சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும்

இலட்சக்கணக்கான மக்களைப் பாதித்திருக்கிற பிரச்சினை. unapproved lay-out-ல் குடியிருக்கிறார்கள். அவர்களிடம் இருந்து வரி வசூலிக்கப்படுகிறது. ஆனால் எந்த வசதியும் செய்வதில்லை. அவர்களுக்கு சாக்கடை வசதிகள் இல்லை, சாலை வசதிகள் இல்லை, தெருவிளக்கு வசதிகள் இல்லை, எந்தவிதமான வசதியும் இல்லை. இப்படி ஒரு பிரச்சினை இருக்கிறபோது, இந்தப் பிரச்சினை அவையிலே எழுப்பப்பட்டுவிட்ட நிலையில், அரசு மௌனமாக இருப்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே, இதுகுறித்து அரசு என்ன கருதுகிறது என்பது குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பல நேரங்களிலே இந்த அமைச்சர் மௌனமாக இருக்கக் கூடாதா என்று நான், பேரவைத் தலைவர், நினைக்கிறேன். அவர் ஒவ்வோர் உறுப்பினருக்கும் உடனே எழுந்து நின்று பதில் சொல்கிறார். அவரைப் பார்த்து இந்தக் குற்றச்சாட்டு சொல்வது முறையல்ல.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைதியாக இருந்தது உண்மைதான். காரணம், அவர் குறிப்பிடும்போது ஏழை மக்களுக்கு வீடு அமைத்து வாழ்கிறார்கள் என்று தொடங்கினார். அதாவது குடிசைகளுக்காகச் சொல்கிறாரா அல்லது ஏற்கெனவே கட்டப்பட்டு இருக்கிற நடுத்தர வர்க்கத்தினர், பணக்காரர்கள் இவர்கள் அமைத்திருக்கிற வீடுகளுக்கு முறைப்படுத்தாமல் இருப்பதைக் குறிப்பிடுகிறாரா என்பது எனக்கு சரியாகப் புரியவில்லை. இப்போது மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டதிலிருந்து ஒரு தெளிவு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அதையொட்டித்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு முடிவு எடுத்து, இதுவரையில் அனுமதி பெறாமல் கட்டப்பட்டிருக்கிற, ஒழுங்கீனமாகக் கட்டப்பட்டிருக்கிற கட்டடங்கள் அனைத்தையும் கணக்கெடுத்து, விதியை எப்படி எப்படி மீறியிருக்கிறார்கள், எந்தெந்த வகையில் மீறியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் கணக்கில் எடுத்து, அதற்கு Mark இட்டு, அதற்கு ஒரு அபராதம் விதித்து, இனிமேல் கொண்டு அப்படி கட்டக்கூடாது என்ற கட்டாயத்தையும் விதித்து, அவற்றையெல்லாம் முறைப்படுத்த வேண்டும் என்று முடிவு எடுக்க இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்முடி அவர்கள் அதற்கான ஒரு சட்டத்தையும் இங்கே கொண்டுவர இருக்கிறார்கள்.



C.M.D.A.விலே அதுபற்றி முடிவு எடுத்து. அதற்குப்பிறகு நகராட்சியோடு தொடர்பு கொண்டு அது நிச்சயமாக நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது விளக்கம் கேட்பதாக இருந்தால் அனுமதி கொடுப்பேன், உரை நிகழ்த்துவதற்கு அல்ல.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** விளக்கம் கேட்பதற்கு 5 நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் எல்லாம் 5 நிமிடங்கள் கேட்கக் கூடாது, உட்காருங்கள்.

*பிற்பகல் 12-30*

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 2 நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் clarification கேட்கிறீர்கள் என்றால்தான் அனுமதி கொடுப்பேன், இல்லாவிட்டால் உட்காருங்கள்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** விளக்கம்தான். கும்பகோணத்திலே நகராட்சி மூலம் 87 ஆண்டுகளுக்கு மேலாக நேரு காய்கறி Market செயல்பட்டுவருகிறது. அங்கே 1500 பெரிய சிறிய வியாபாரிகள் காய்கறி விற்பனை செய்து வருகிறார்கள். அவர்களுடைய market-ன் பகுதியைச் சுங்கான்கேட் பகுதிக்கு மாற்றியிருக்கிறார்கள். அந்தப் பகுதிக்குச் செல்லும்வரை நேரு காய்கறி Market-ன் தென் பகுதியிலுள்ள சங்கரமடம் பகுதியில் லாரிகளை நிறுத்தி, காய்கறிகளை இறக்க அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது clarification கிடையாது, உட்காருங்கள்-அமைச்சர் வேண்டுமானால் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணமாக இருக்கிறதனாலே கேட்கிறேன், உறுப்பினர் என்ன சொன்னார்கள் என்பது காதிலே விழவில்லை, திரும்பவும் ஒரு தடவை சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. ந. கருப்பண்ணை உடையார்:** தலைவர் அவர்களே, நேரு காய்கறி market-லே 1500 வியாபாரிகள், பெரிய வியாபாரிகள், சிறு வியாபாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் காய்கறி வைத்து வியாபாரம் நடத்திக்கொண்டிருக்கின்ற அந்த market-ஐ சுங்கான்கேட் பகுதிக்கு மாற்றவிருக்கிறார்கள். அதிலே எங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அதை மாற்றுகிறவரையில், அந்த காய்கறிக் கடைகளை அந்தப் பகுதியிலே, காமாட்சி ஜோசியர் தெருவுக்கு வடக்குப் பகுதியாகவும், பழைய பாலத்திற்கு, காமராஜர் சிலைக்கு மேற்குப் பகுதியாகவுமுள்ள இடத்திலே அந்த லாரிகளை நிறுத்தி, காய்கறிகளை இறக்கிக் கொள்ளவும், ஏற்கெனவே இருக்கின்ற நேரு market-லேயே அதை வியாபாரம் செய்யவும், அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, market-தான் நகராட்சிக்கு உட்பட்டதே தவிர, போக்குவரத்து இந்த நகராட்சிக்கு உட்பட்டதே அல்ல. போக்குவரத்தைச் சீர் செய்வதற்காக காவல் துறையினர் எடுத்து வருகிற நடவடிக்கையைப் பற்றி, அங்கே நிறுத்தாதே, இங்கே நிறுத்து, இங்கே நிறுத்தாதே, அங்கே நிறுத்து என்று சொல்வதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். எங்கள் துறைக்கும் அதற்கும் சம்பந்தமே கிடையாது. நாங்கள் மார்க்கெட்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் துறைக்கு சம்பந்தம் இல்லை. கும்பகோணம் என்றால் நீங்கள் தானே, ஆகையினாலே உங்களிடத்திலே ஒரு கோரிக்கையை வைக்கின்றார்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கருத்தை...... (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்** தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு சட்டம் வர இருக்கிறது என்று சொன்னார்கள். சட்டவிரோதமாகக் கட்டி இருக்கின்ற



கட்டடங்களையெல்லாம் பார்த்து, அவைகளுக்கு அபராதம் போட்டு, approve பண்ணப் போவதாக இங்கே சொன்னார்கள். அதில் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். ஏனென்று சொன்னால் பல இடங்களிலே கால்வாய்களை மறைத்து வீடு கட்டியிருக்கிறார்கள், கட்டடங்கள் கட்டியிருக்கிறார்கள். சாலைகளை மறைத்துக் கட்டியிருக்கிறார்கள். பொது இடங்களுக்குத் தேவையான இடங்களையெல்லாம்கூட ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். ஆகவே, அவைகளையெல்லாம் மிகக் கவனமாகப் பார்த்து, அந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுசம்பந்தமான சட்டம் ஏற்கெனவே இன்றையதினம்நிறைவேற்றப்பட்டுவிட்டது. இருந்தாலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்கின்ற இந்தக் கருத்தையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிச்சயமாக கவனத்தில் கொள்வார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரேயொரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவின் பிரிவு 59 மற்றும் 60-ன்படி நகராட்சிகளிலேயுள்ள All Heads of Departments, அதற்குப் பிறகு Class I Officers, Class II Officers எல்லாம் T.N.P.S.C. மூலமாகத்தான் பணியமர்த்தப்படுவார்கள் என்கிற விதியைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், இதுபோன்று, நகராட்சியிலே ஒரு Town Planning Officer-ஐ எடுத்துக் கொண்டால், இதுபோன்ற பதவிக்கெல்லாம் நீங்கள் புதிதாக ஒரு ஆளைப் போட்டு, அவர்கள் settle ஆவதைவிட, ஏற்கெனவே இந்தத் துறையிலே கொஞ்சம் அனுபவம் பெற்று, மிகச் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு இருப்பவர்களுக்கு exemption கொடுத்து, அவர்களை கொஞ்ச நாளைக்கு வைத்திருந்து, புதிதாக நியமிக்கப்படுபவர்களுக்குக் கொஞ்சம் experience கிடைக்கிற வகையில் இருந்தால்தான் நல்லது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, எந்த நிறுவனமாக இருந்தாலும் தனியாக ஆள் எடுக்கும்போது ஏற்கெனவே இருக்கிறவர்களுக்குத் தகுதியிருந்து, அவர்களுக்கு promotion வருகிற தகுதி இருக்குமானால், அதைத் தடுத்துவிட்டு, வெளியிலேயிருந்து

[திரு. கோ. சி. மணி] [1998 நவம்பர் 28

ஆள் எடுக்கிற நிலை இல்லை. அப்படித் தேவைப்படுகிறபோது, 1:2, 1:3 என்ற அடிப்படையில் சில விதிமுறைகளும் இருக்கின்றன. அதற்குட்பட்டுத்தான் நியமனங்கள் நடக்கும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** clarification மட்டும்தான்.

**திரு. ஜி.கே. மணி:** clarification-தான் ஒரேயோரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசவே இல்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் நீங்கள் பேசவில்லை? ஏன் கேட்கவில்லை? நீங்கள், சிலர் உட்கார்ந்து கொண்டேயிருப்பீர்கள். நான் உங்களைப் பார்த்து கேட்க வேண்டுமா? உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை, எனக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. நான் கேட்டுக்கொண்டேதான் இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சீக்கிரம் சொல்லுங்கள்.

பிற்பகல் 12.35

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உள்ளாட்சி அமைப்புகளிலே, ஒன்றிய அளவிலே ஒன்றியக் குழு உறுப்பினர்களையும், மாவட்ட ஊராட்சி ஒன்றியத்திலே மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்களையும் வைத்து அங்கே நிர்வாகம் நடைபெற்று வருகிறது. இந்த ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றிய அளவிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதிகார வரம்பு என்ற நிலையிலே அவர்கள் மோதிக்கொள்ளக் கூடிய நிலையிலே, நிர்வாகத்திலே தேவையில்லாத ஓர் அமைப்பை உண்டாக்கியிருப்பதாகவும், மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்டு ஆலோசனை செய்துகொண்டிருக்கக்கூடிய



1998 நவம்பர் 28] [திரு. ஜி.கே. மணி]

அல்லது அரசுக்கு எடுத்துச்சொல்லக்கூடிய இந்த ஊராட்சி ஒன்றியக்குழு அமைப்பையும், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் என்ற அந்தப் பதவிகளையும் எடுத்துவிட்டு, பழைய மாதிரி இரண்டு அடுக்கு முறையை வைத்தாலே சாலச்சிறந்ததாக இருக்கும் என்று எல்லோரும் கருதுகிறார்கள். ஆகவே, ஊராட்சி மன்றத் தலைவரும், ஊராட்சி ஒன்றியத் தலைவரும், அதற்கு மேலே ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவரையும் வைத்து, மாவட்ட வளர்ச்சி மன்றம் என்ற அளவிலே, பழைய இரண்டு அடுக்கு முறையே சிறந்தது என்ற அடிப்படையிலே, இதிலே திருத்தங்கள் கொண்டு வரவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, இப்போது உள்ளாட்சி அமைப்புகளிலே ஏராளமான பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தக் காலியிடங்களையெல்லாம் நிரப்புவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பேரூராட்சிகளுக்கு நிதியெல்லாம் குறைத்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. வளர்ச்சிப் பணிகள் தாமதமாக நடக்கின்ற காரணத்தாலே பேரூராட்சிகளுக்குக் கூடுதலாக நிதியொதுக்கம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுதான் தவறு என்கிறேன். வரலாற்றிலே இதுவரையிலும் இடம்பெறாத அளவிற்கு 184 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக பேரூராட்சிகளுக்குக் கொடுக்கப்பட்டு, வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** கூடுதலாக ஒதுக்கியிருக்கிறீர்கள், ஏற்றுக்கொள்கிறேன். நன்றி சொல்கிறேன். இருந்தாலும், தேவைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலே இன்னும் சற்றுக் கூடுதலாக நிதியொதுக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தெருவிளக்கு அமைக்கின்ற நேரங்களிலே, ஒவ்வொரு மின்கம்பத்திற்கும் கட்டக்கூடிய தொகை கூடுதலாக இருக்கின்ற காரணத்தாலே, மின் வாரியத்திற்கு இதைக் கோரிக்கையாக வைத்து, கட்டணத்தைக் குறைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று சொல்லி, அமைகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பேசச் சொல்லலாம்.

[ 1998 நவம்பர் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்தான் பேசியாயிற்றே? இன்னும் என்ன பேசவேண்டியிருக்கிறது? அமைச்சர், நீங்கள் பேசி முடித்துவிட்டீர்களா, இல்லையா? நீங்கள் Select Committee-க்கு நன்றி சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள். அது போதும்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a point of clarification, இந்தச் சட்டம், எந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வரும்? இந்தச் சட்டம் மட்டும் இருந்துவிட்டால் இதை நடைமுறைப்படுத்தமுடியாது. இதற்காக விதிமுறைகள் வரையறுக்கப்பட வேண்டும். விதிமுறைகள் வரையறுக்கப்பட்டுவிட்டனவா என்று அறிய விரும்புகிறேன். ஒருவேளை, வரையறுக்கப்படாமல் இருந்தால், இந்தச் சட்டம் அமலுக்கு வரும் தேதி வரையிலும் எந்தச் சட்டம் அமலில் இருக்கும்? இது தெரிய வேண்டும். இல்லையென்றால் தேவையில்லாத குழப்பங்கள் வரும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தச் சட்டத்தில் வந்திருக்கிற அனைத்துச் சட்டங்களையும் ஒட்டியே சில சட்டங்கள் தனியாகவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. சில சட்டங்கள் அவசரச் சட்டங்களாகவும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இருப்பினும், இந்தச் சட்டம் குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட வேண்டியிருக்கிறது. பொதுவாக, மொத்தமாகச் சேர்த்து அனுப்ப வேண்டும். சிலவற்றை ஆளுநரேகூட நிறைவேற்றலாம் என்று இருக்கிறது. இருந்தாலும், இவை போய் வருகிற வரையில், ஏற்கெனவே இருக்கிற சட்டம் நடைமுறையில் இருக்கும். இந்தச் சட்டத்தின் அடிப்படையில் இப்போது நடைபெறுகிற நடவடிக்கைகள் நடத்தப்படும். சட்டம் குடியரசுத் தலைவரிடமிருந்து என்றைக்கு approval ஆகி வருகிறதோ அன்று முதல் இந்தச் சட்டம் அமலுக்கு வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதிமுறைகள் தயாராகியிருக்கின்றனவா என்று கேட்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** விதிமுறைகளைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டம் அங்கிருந்து ஒப்புதலாகி வருகிறவரை காத்திராமல் நாளையிலிருந்தே விதிகளைத் தயாரிக்க வேண்டும் என்று நான் துறைக்குத் தெரிவித்திருக்கிறேன். விதிகள் தயாரித்து, அந்த அனுமதி



1998 நவம்பர் 28 ] [திரு. கோ.சி. மணி]

வருகிறவரை காத்திருந்து பிறகு இந்தச் சட்டம் அமல்படுத்தப்படும். விதியும் அதோடுகூட அமல்படுத்தப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் எல்லாவற்றுக்கும்தான் பதில் சொல்லிவிட்டாரே, மாண்புமிகு அமைச்சர் நன்றி ஏதாவது தெரிவிக்கிறீர்களா அல்லது விவாதம் முடிந்தது என்று அறிவிக்கவா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், பொதுவான ஒரு சட்டத்தை, நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி இவற்றை உள்ளடக்கி, இதுவரையில் இந்தியத் துணைக் கண்டத்தில், அருகில் இருக்கிற கேரள மாநிலத்தில் மட்டும்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இதுபோன்ற ஒரு சட்டத்தை அவர்கள் கொண்டு வந்தார்கள். கொண்டுவந்தும், அதிலே சில விதிமுறைகள் சரியாக இல்லாத காரணத்தால், அவர்கள் கொண்டு வந்த சட்டத்தில் நாம் சிலவற்றை எடுத்து, நம்முடைய சட்டத்தில் அவர்கள் சிலவற்றை எடுத்து, இப்போது அவற்றை அவர்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தவிர இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இப்படியொரு Common Bill, பொதுச் சட்டம் கொண்டு வந்து இயற்றப்படவில்லை. நம்முடைய மாநிலத்தில்தான் முதல் முறையாக இதை நாம் இயற்றியிருக்கிறோம். இதனுடைய நகல் எடுத்து, மற்ற மாநிலங்களிலேயெல்லாம் இந்தச் சட்டத்தை இயற்ற வேண்டும் என்று பல மாநிலங்களிலிருந்து எங்கள் துறைச் செயலாளருக்கு தொலைபேசி மூலம் விசாரணைகள் வந்தன. அதற்கு நாங்கள் இந்தச் சட்டத்தை உருவாக்கியதற்குப் பிறகுதான் நகல் அனுப்ப முடியும் என்று தெரிவித்திருக்கிறோம்.

*பிற்பகல் 12-40*

எனவே, ஒரு வரலாற்று முக்கியத்துவம் பெறத் தக்க வகையில் இந்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுகூட இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நான் முன்மொழிந்த நேரத்தில் அனைத்து உறுப்பினர்களும் அதை பெருமனது வைத்து, ஏற்றுக்கொண்டு, அதை எனக்குச் சட்டமாக்கிக் கொடுத்து விட்டு, அதற்குப் பிறகு அதையொட்டிய சில குறைபாடுகள் இருந்தால்

அல்லது நிறைவேற்றுகிற வழிமுறைகளைச் சொல்ல வேண்டுமென்று விரும்பி சொன்னதற்காகவும், நான் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எல்லாவற்றையும்விட, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தச் சட்டத்தை எப்படியும் Selecte Committee-க்கு விட வேண்டுமென்று அவரே விரும்பி, உறுப்பினர்களுக்கும் தெரிவித்து, இந்தச் சட்டம் அப்படிப்பட்ட ஒரு குழுவிற்கு அனுப்பப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய என்னோடு சேர்த்து 14 பேர்—13 சட்டமன்ற உறுப்பினர்களும், அனைத்துக் கட்சியிலே உள்ளவர்களும், நானும், அதில் இணைந்து ஏறத்தாழ 23 முறைகள் கூடி இதை முடித்திருக்கிறோம். அதிலே, பல பணியாளர்கள் சட்டத் துறையிலிருந்து இந்த சட்ட மன்றத் துறை வரையில்-சட்டமன்றத் துறை, சட்டத் துறை, எங்கள் துறை இவைகள் அனைத்தும் அதிலே பெரும் பங்கு வகித்தார்கள்.

இதிலே மிக முக்கியமாக என்னுடைய துறையைச் சார்ந்த இந்தத் துறையினுடைய செயலாளர் திருமதி மாலதி அவர்கள் அதற்காக ஆரம்பத்திலிருந்து, இன்றுகூட காலை 5 மணிக்குத் தொலைபேசியில் நான் தொடர்புகொண்டு கேட்டபோதுகூட, சில தகவல்களை எனக்குத் தெரிவித்தார்கள், அதேபோல முதலமைச்சரும் அடிக்கடி இந்தச் சட்டத்தினுடைய நிலைகளை அறிந்து அதற்கான ஆலோசனைகளை வழங்கி அவர்கள் இந்தச் சட்டத்தை நிறைவு செய்கிற வாய்ப்பைத் தந்ததற்கு முதலமைச்சரிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் வரையில் இடையில் இருக்கின்ற அத்தனை அலுவலர்கள், கலந்துகொண்ட அதிகாரிகள் அனைவருக்கும், தாங்களும் பெருமனதோடு இதை விவாதிப்பதற்கு எங்களை அனுமதித்து, காலம் தந்து ஏற்று நிறைவேற்றுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக தங்களுக்கும் நன்றி தெரிவித்து, அமைகிறேன், நன்றி, வணக்கம்.



## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஊ) சென்னையைச் சார்ந்த அனுசுயா என்கிற பெண் கடத்தப்பட்டது

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று, நானும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், இன்னும் சட்டமன்ற உறுப்பினர்கள் சுந்தரம், இ.எஸ்.எஸ். இராமன் போன்றவர்களும் தங்களிடம் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தோம். சென்னையைச் சார்ந்த எங்களுடைய த.மா.கா. கட்சித் தலைவர் ஏகாம்பரம் என்பவருடைய துணைவியார், அனுசுயா என்பவர் கடத்தப்பட்டு, திருவள்ளூர் பகுதியில் இருக்கக்கூடிய ஒரு ஏரியிலே படுகொலை செய்யப்பட்டு, நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தை மட்டும் சொல்லுங்கள். நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசுகிறமாதிரி பேசாதீர்கள். ஒரு தவறான வழிமுறையை நீங்கள் பின்பற்றுகிறீர்கள். நான், Point of order என்ன என்று கேட்டால், நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் என்ன ஆயிற்று என்று கேட்க வேண்டும். முதலமைச்சர் இல்லை, உங்கள் கருத்தை அவரிடம் நான் சொல்வேன் என்று பதில் சொல்வேன், அவ்வளவுதான். அதை விட்டுவிட்டு நீங்கள் இந்தக் கதையெல்லாம் இப்பொழுது பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சுருக்கமாக . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைச் சொல்லத் தேவையே இல்லை. உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்; இந்தமாதிரி ஆகிவிட்டது; அதோடு நிறுத்திக்கொள்ளுங்கள். முதலமைச்சர் வரவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அந்தப் பிரச்சினையை எ[illegible]ப்பினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் வந்தால் அந்தக் [illegible]த்தைப் பேச அனுமதி கொடுக்கிறேன் என்றேன். ஆகவே, உங்கள் கருத்தை முதலமைச்சருக்குச் சொல்லி, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கச் சொல்லி, உங்கள் சார்பிலே நான் சொல்லுகிறேன். (குறுக்கீடு) யாருக்குத் தெரியும்? அதை நீங்கள் முதலிலேயே சொல்லியிருந்தீர்கள் என்றால், மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர், காவல் துறையை, இதுவரைக்கும் என்ன ஆகியிருக்கிறது என்று கேட்டிருப்பார். இப்பொழுது யார் என்ன சொல்ல முடியும்?

**திரு. சி. ஞானசேகரன்:** மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் இருக்கிறாரே.

[ 1998 நவம்பர் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை எப்படிச் சொல்ல முடியும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் இன்று இங்கே வர இயலவில்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தை, இந்த அரசாங்கம், உடனடியாகக் கருத்திற்கொண்டு, கடுமையான நடவடிக்கை, நிச்சயம் எடுக்கும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

## 9. பேரவை உறுப்பினர்களுக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, ஒவ்வொருவராக எழுந்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இந்த அளவோடு இந்தக் கூட்டத் தொடர் முடிவடையும் தருவாயில் இருக்கின்றது. கடந்த ஐந்து நாட்களாக ஒத்துழைத்த எல்லா மாமன்ற உறுப்பினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஓரிரு அசம்பாவிதங்கள் நடந்ததும் நம் அனைவருக்கும் தெரியும். உதாரணமாக, அவையைவிட்டு வெளியேற்றப்பட்ட ஓர் உறுப்பினர் அனுமதியில்லாமல் மீண்டும் அவைக்குள்ளே வந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, நான் அவரை வெளியேற்றவில்லை என்றும், தானே வெளிநடப்புச் செய்ததாகத்தான் நினைத்துக் கொண்டார் என்றும் ஒரு விளக்கத்தைச் சொல்லியிருக்கின்றார்.

அதைப் போலவே, மாண்புமிகு உறுப்பினர் பி.ஆர். சுந்தரம் அவர்கள், இன்று அவையிலே நடந்துகொண்ட முறை தேவையில்லாதது. திரு. சுந்தரம் அவர்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பரிந்துரை செய்து ஞானசேகரன், தாமரைக்கனி மற்றும் பலபேர் சொன்னார்கள். இன்று அவர் அவையிலே அமைதியாக உட்கார்ந்து உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்த நேரத்தில், அவருடைய பிரச்சினையை ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசுவதைப் போலவே பேசியிருக்கலாம்.

*பிற்பகல் 12-45*

இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர விசாரித்து, திரு. சுந்தரம் அவர்கள் கொடுத்த புகாரின்மேல் காவல் துறை நடவடிக்கை எடுத்து, சில ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்



1998 நவம்பர் 28 ] [பேரவைத் தலைவர்]

கைது செய்யப்பட்டு, வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். திரு. சுந்தரம் அவர்கள்மீது கொடுக்கப்பட்ட புகாரில் நியாயமில்லை என்று தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஆகவே, நல்லமுறையிலே, ஜனநாயக முறையிலே, இது நடைபெற்றிருக்கிறது என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் அனைவரும் இந்தக் கூட்டத் தொடரிலே ஒத்துழைத்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 10. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கும் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(I)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல், ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-46 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*54.* பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், சின்னமோளரப்பட்டி கிராம மக்கள் *2-8-1996* ஆம் நாளன்று அதிகாலையில் கொள்ளைக்காரர்கள் என்று கூறப்பட்ட *11* பேரைத் தாக்கியதற்கு வழிவகுத்த சூழ்நிலைகள் பற்றியும், அவ்வாறு தாக்கப்பட்டதால் கொள்ளைக்காரர்கள் என்று கூறப்பட்டவர்களில் *9* பேர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது வழியிலேயே இறந்தது பற்றியும், ஏனைய ஆய்வு வரம்புகள் பற்றியும் விசாரணை செய்வதற்காக, மாவட்ட அமர்வு நீதிபதியான (ஓய்வு பெற்றவர்) திரு. டி. அருள்ராஜ் தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட ஒரு நபர் விசாரணை ஆணையம் அளித்த விசாரணை அறிக்கை. [*1952* ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *60/1952*) *3(4)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

*55.* திரு. கபாலீஸ்வரன் என்பவரின் மகன் திரு. ரமேஷ், *12-4-1997* அன்று காவலில் இருந்தபோது, மர்மமான முறையில் இறந்ததாகக் கூறப்படுவது குறித்தும், இதனையடுத்து, *13-4-1997* அன்று ஏற்பட்ட சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை குறித்தும், விசாரணை செய்வதற்காக நீதிபதி திரு. எம். மருதமுத்து விசாரணை ஆணையம் அளித்த அறிக்கை. [*1952* ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *60/1952*) *3(4)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

*56.* கோயம்புத்தூர் மாநகரில் போக்குவரத்துக் காவலர் (முதல் நிலை) திரு. செல்வராஜ் *29-11-1997* அன்று கொலை செய்யப்பட்டது, *30-11-1997* அன்று காவல் துறையினர் நடத்திய ஆர்ப்பாட்டம், இதனையடுத்து ஏற்பட்ட சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் முதலியன குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதியாசர் திரு. பி.ஆர். கோகுலகிருஷ்ணன் விசாரணைக் குழுவின் அறிக்கை. [*1952* ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்திய சட்டம் *60/1952*) *3(4)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

*57.* *1970* ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி நகரமைப்பு பணி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் *30-6-1998* ஆம் நாளிட்ட *112*ஆம் எண்





அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1920* ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *5/1920*) *304(2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

*58.* *1995-96* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619-ஏ* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

*59.* *1996-97* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619-ஏ* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*74.* மாநிலப் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட வாரியங்களின் செயல்திறன் குறித்த *1996-97* ஆம் ஆண்டு ஆய்வு. (தமிழ், ஆங்கிலம்)

*75.* அரசு உறுதிமொழிக் குழுவின் ஏழாவது அறிக்கை, *1998-99.*

*76.* உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் *1* முதல் *50* வரை)

*77.* உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் *1* முதல் *50* வரை)

ஒஒ

219404.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.